www.padippakam.com

# தமிழ்ப் பெரியார்கள்



வ.ரா

மருதம் பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப் பெரியார்கள்

## வ. ரா.

மருதம் பதிப்பகம்

மருதம் பதிப்பகம்
38, கோமுட்டித்தெரு,
ஒரத்தநாடு. 614 625.

படிப்பகம்

www.padippakam.com

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழ்ப் பெரியார்கள் |
| ஆசிரியரின் பெயர் | : | வ. ரா. |
| பதிப்பு விவரம் | : | மருதம் பதிப்பக முதற்பதிப்பு டிசம்பர், 2001 |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| தாளின் தன்மை | : | 10.5Kg வெள்ளைத்தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : | 120 |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| நூல் வெளியிடுவோர் | : | மருதம் பதிப்பகம் 38, கோமுட்டித் தெரு, ஓரத்தநாடு 614 625. |
| விலை | : | ரூ. 30/- |
| அச்சிட்டோர் | : | திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம் 141, ஜே.டி. காம்ப்ளக்ஸ், ஈஸ்வரி நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்- 7. போன்:342764. |

www.padippakam.com

# பொருளடக்கம்

பெரியார்கள் யார்?

1. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
2. ஈ.வெ. ராமசாமி நாய்க்கர்
3. திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
4. டாக்டர் வரதராஜுலு நாயுடு
5. டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்
6. ஜ்யார்ஜ் ஜோஸப்
7. எஸ். சத்தியமூர்த்தி
8. வ. உ. சிதம்பரம் பிள்ளை
9. எஸ். எஸ். வாசன்
10. கே. பி. சுந்தராம்பாள்
11. என். எஸ். கிருஷ்ணன்
12. வெ. ராமலிங்கம் பிள்ளை

www.padippakam.com

# பதிப்புரை

உலகத்தில் வாழும்போது தமது வாழ்க்கை பிறருக்கு எடுத்துக்காட்டாக அமையுமாறு வாழ்பவர்கள் மிகச் சிலரே! அப்படி வாழ்ந்தவர்கள், வாழுபவர்கள் காலம் சென்றவர்களாயினும், சமகாலத்தவர்கள் ஆயினும் அவர்களது நெறிமுறைகளை, சிறப்புக்களை அனைவரும் அறியுமாறு பதிவு செய்து பரவச் செய்யவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். உயர்ந்ததொரு சமுதாயத்தை உருவாக்கிட ஆர்வம் கொண்டு உழைக்கும் உயர்ந்த மனிதர்கள் தங்களது கடமையாகவே அதனைச் செய்வர்.

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணாவால் வர்ணிக்கப்பட்ட பெரியவர் வ.ரா. அவர்கள் இந்நூலில் தமது சமகாலத்து வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதர்களைப் பற்றி விவரித்து எழுதியுள்ளார்.

வ.ரா. அவர்கள் பண்புகளால் தன்னலம் கருதாத தொண்டால், உயரிய சமூக சீர்திருத்த நோக்கங்களால் மிகவும் கம்பீரமாக நின்ற உத்தமர். தமது எண்ண ஓட்டத்தாலும் எழுத்தாற்றலாலும் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டவர். தாம் அறிந்த பழகிய சிலரைப் பற்றி அவர் இந்நூலில் விவரித்திருக்கிறார். வெறும் புகழாரமாக மட்டுமன்றி, சில இடங்களில் சிலரைப் பற்றி விமரிசனமாகவும் தனது கருத்தை வெளிப்படுத்தியே செல்கிறார்.

www.padippakam.com

அவர் இந்நூலில் குறிப்பிட்டுள்ள அனைவருமே தற்போது அமரர்களாகி விட்டவர்கள் என்றாலும்கூட மக்கள் மனதில் தமது சேவைகளால் நிலைத்து விட்டவர்கள்தான். இளைஞருலகம் படித்துப் பின்பற்றிப் பயனடைய வேண்டிய வரலாறு அவர்களது வாழ்க்கையாகும்.

இந்நூலிலுள்ள கட்டுரைகள் 1933-34 ஆம் ஆண்டுகளில் திரு. டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் நடத்தி வந்த "காந்தி" என்ற இதழில் தொடராக வெளிவந்தன. பிறகு 1943ல் இதே பெயரில் நூலாகவும் வெளிவந்துள்ளது.

மறக்கவியலாத மாமனிதர்களின் மறக்கக் கூடாத படைப்புக்களை மீண்டும் வெளிக் கொணர்வதை தனது கடமையாகவே மருதம் பதிப்பகம் கருதுகிறது. அந்த எண்ணத்தினால் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்துள்ள இந்நூலை மீண்டும் பிரசுரம் செய்வதில் மருதம் பதிப்பகம் பெருமை கொள்கிறது. இந்நூலின் பழைய பிரதியைத் தந்துதவிய புரட்சி எழுத்தாளர் திருமிகு, பிரபஞ்சன் அவர்கட்கு எமது இதயங்கனிந்த நன்றி உரியது.

தமிழ் மக்களின் ஆதரவை வேண்டுகின்றோம்.

அன்புடன்,

ஒரத்தநாடு — *பா. சந்திரசேகர்*
டிசம்பர் 2001 — பதிப்பாளர்

படிப்பகம்

www.padippakam.com

வீரத்தில் நிறைவான
தமிழ் நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான
தமிழ் நாடு வாழ்க!
சூரத்தின் துணையான
தமிழ் நாடு வாழ்க!
துஷ்டர்க்குப் பணியாத
தமிழ் நாடு வாழ்க!

நாமக்கல் கவிஞர்

படிப்பகம்

www.padippakam.com

# பெரியார்கள் யார்?

இதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் பல இருக்க முடியும். ஒருவருக்கு அமுதமாயிருப்பது, இன்னொருவருக்கு நஞ்சாக இருக்கக்கூடும் என்ற கக்ஷிதான் சாசுவதமாக இருக்கிறதே!

ஜனசமூகத்தில், ஆயிரக் கணக்கில் ஊதியம் பெறுகிற உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். திறமையுடன் தொழில் செய்து, லட்சக் கணக்கில் பணம் சேர்க்கும் புத்திசாலிகள் இருக்கிறார்கள். சபை பிரமித்துப் போகும்படியாகப் பாடும் வித்வான்கள் இருக்கிறார்கள். மேகத்தைப் போல் பொழியும் மேடைப் பிரசங்கிகளும் நமது சமாஜத்தில் இருக்கிறார்கள்.

இவர்களை ஏன், பெரியார்கள் கூட்டத்தில் சேர்க்கவில்லை என்று கேட்கலாம். அர்த்தமில்லாத செயலும் காரணம் இல்லாத காரியமும் இருக்க முடியாது. பெரியார்களை நான் எவ்வாறு பொறுக்கினேன் என்று சொல்லுகிறேன்.

ஜனசமூகத்தை, தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாற்றச் செய்பவர்கள் பெரியார்கள். இதை, அவர்கள், தாங்கள் அறிந்தும் செய்யலாம். தாங்கள் அறியாமலும் செய்யலாம். என்றாலும் அவர்களுடைய வாழ்க்கையினால், ஜனசமூகத்தில், கண்ணால் பார்க்கக் கூடிய மாறுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன.

ஜனசமூகத்தை இவ்வாறு கலக்குபவர்கள், ஒருசிலர்தான் இருப்பார்கள். அதுவும் அடிமைத்தனத்திலும் பரம்பரை என்ற கொடுமையிலும் ஆழ்ந்துகிடக்கும் சமாஜத்தில், இந்த எண்ணிக்கை இன்னும் குறைவாகவே இருக்கும். அடிமைத்தனமும் பரம்பரையும். யாரும் எளிதிலே தலைதூக்கும்படியாக, உதவிகளாக இருக்கமாட்டா. அவை தடைகளாகவே இருக்கும்.

www.padippakam.com



அனுகூலம் எதுவும் இல்லாமல், பிரதிகூலங்களுக்கு மத்தியில் வாழ்ந்தும், வீறுகொண்டு எழும் பேர்வழிகள் பெரியார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. நான் குறிப்பிட்டிருக்கிற அத்தனை பேர்களும், யாருடைய உதவியும் இல்லாமல், தங்கள் சொந்த முயற்சியால், முன்னுக்கு வந்தவர்கள். இவர்கள் எல்லோரும், ஒவ்வோர் அளவில் மேதாவிகள். சரித்திரத்தில் இடம்பெறக் கூடிய காரியங்களைச் செய்தவர்கள்.

இவர்களைப் போலவே, இன்னும் சிலர், நமது தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களையும் பற்றி எழுத வேண்டியது அவசியமாகும். ஒவ்வொன்றாகச் செய்வோமே!

*வ. ரா.*

படிப்பகம்

www.padippakam.com

# 1. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

1916-ஆம் வருஷம் ஐரோப்பாவின் போர்க்களங்களிலே, மண்டைகள் அற்ற முண்டங்கள் குவிந்துகொண் டிருக்கின்றன. ஜெர்மன் "ஹாவிட்ஸர்" பீரங்கிகள், பிரஞ்சு அரண்களைப் பொடியாக்கிக் கொண்டிருக்கின்றன. நேசக் கட்சியார் (பெல்ஜிய, பிரஞ்சு, ஆங்கிலேயர்கள்) மனமொடிந்து நிற்கிற சமயம். "ஒரு குதிரை, ஒரு குதிரை, ஒரு குதிரைக்காக ராஜ்யம் (கொடுப்பேன்)" என்று மூன்றாவது ரிச்சர்டு அரசன் பரதபித்தது போல, ஒரு ஆள், சேனைக்கு ஒரு ஆள் என்று நேசக்கட்சியார் தவித்துக்கொண் டிருக்கிற ஆண்டு. காஞ்சீபுரத்திலே, தமிழ் மாகாண மகாநாடு கூடிற்று.

மகாநாட்டுக்குத் தலைவி, கவியரசி ஸ்ரீமதி சரோஜினி நாயுடு. அவருக்கு உப பலம் பெஸண்டு அம்மையார். சேனைக்கு ஆள் சேர்த்துக் கொடுப்பதா யில்லையா என்பது யோசனை. ஆள் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்பது பெஸண்ட் அம்மையார் கொண்டு வந்த தீர்மானம். தீர்மானம் நிறைவேறுமா அல்லது தோற்குமா என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடிய நிலையில், மகாநாட்டின் உள்ளம் இருக்கவில்லை. ஒரே குழப்பம்! பெஸண்டு அம்மையாரும் ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களும் தங்கள் பிரசங்கத் திறமை முழுமையும் காட்டி விட்டார்கள்.

தீர்மானத்தை எதிர்த்தார் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி. அவருக்குப் பின்னால், 'ஆபாச'த் தமிழில் - ஆனால் ஆற்றல் நிறைந்த அடக்கத்துடன் - சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் சத்தியமூர்த்திக்கு சாதகமாக, தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். பேச்சு "பட்டை வாங்காத வைரம்" என்று ஒருவர் சொன்னது என்

www.padippakam.com



காதில் பட்டது. உண்மை. கன்னடப் பிராந்தியத்தை ஒட்டிய ஹொஸ்ஸூர் தமிழ். ஆச்சாரியாரின் தற்போதைய சுத்தத் தமிழ் ஆளைவெருட்டுகிறது! இது வேறு சங்கதி.

தீர்மானத்துக்கு சாதகமாக 124 வோட்டுகள்; பாதகமாக 124 வோட்டுகள். சரோஜினிதேவி, மகாநாட்டுத் தலைவி என்ற முறையில், தமது இரண்டாவது வோட்டை பெஸண்டு அம்மையாருக்கு சாதகமாகக் கொடுத்தார். தீர்மானம் காகிதத்தில் நிறைவேறியது. ஆனால்-? புத்தன் பிறந்தவுடனே, இந்திரன் கொடி அற்று விழுந்தது என்பது பரம்பரைக் கூற்று. ஆச்சாரியார் தோன்றியதும், பெஸண்டு அம்மையாரின் சென்னை மாகாணச் செல்வாக்கு சீர்குலைந்து போய்விட்டது. அதே சமயத்தில் சர்க்காருக்கும் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப் பட்டதாகவும் தமிழர்கள் மனதில் பட்டது.

ஆச்சாரியாரின் தேசபக்தி பிறந்து வளர்ந்த கதை மிகவும் விநோதமானதாகும். 1897-ஆம் ஆண்டில், ஆச்சாரியார் சென்னை சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அந்த ஆண்டில், லோகமான்ய திலகர் காராக்கிரகப் பிரவேசம் செய்ய நேர்ந்தது. திலகரைப் பிடித்து சர்க்கார் சிறையில் தள்ளினது ரொம்ப நியாயமானதாகும் என்பது ஆச்சாரியாரின் அப்போதைய மனோபாவமாகும். சட்டத்தை மீறி, பொதுஜன அமைதியைக் குலைப்பவன் தேசத் துரோகியே யொழிய தேச பக்தனல்லவென்பது ஆச்சாரியாரின் அப்போதைய முடிவு. அதிகாரவர்க்கத்தினரைப் போல, எதையும் நோக்கி வந்த ஆச்சாரியார், அரிய தேசபக்தராய் மலர்ந்தது, சர்க்காரின் (அப) கீர்த்திக் கணக்கில் அழுத்தமாக எழுதப்படவேண்டிய சங்கதியாகும்.

பின்னர் பெஸண்டு அம்மையார், அருண்டேல், வாடியா மூவர்களும் அரசாங்கத்தாரின் தளைக்குள் சிறிது காலம் தங்கி யிருந்து, விடுதலை பெற்றதும், சேலம் மார்க்கமாய் சென்னைக்குச் சென்றார்கள். ஆச்சாரியார் அவர்களைப் பார்க்க, சேலஞ்

www.padippakam.com



ஸ்டேஷனுக்குச் சென்றார். பிளாட்பாரத்தில் பிரவேசிக்க அனுமதி கிடையாது என்றார் போலீசாரின் கையில் அகப்பட்டுத் தவித்த ஸ்டேஷன் மாஸ்டர். ஒரே உதை! இரும்புக் கிராதிகள் படபட வென்று முறிந்தன. ஆச்சாரியாரும் ஒரு பெரும் கூட்டமும் பிளாட்பாரத்துக்குள் போய் விட்டார்கள்.

போனதும், ஆச்சாரியார், "வாடியா அவர்களே! தங்களுடைய விடுதலையைப் பற்றி ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லி, அவரை மட்டும் கை குலுக்கி விட்டு திரும்பி வந்து விட்டார். வாடியா மட்டும் இந்தியர். மற்றைய இருவர்களும் வெள்ளைத் தோலை உடம்பில் போர்த்துக் கொண்டிருந்த குற்றம் ஆச்சாரியாரின் கண்களில் மிகவும் கொடுமையாகப்பட்டது. அப்பொழுது அப்படி! இப்பொழுது, உலக சகோதரத்துவம் பேசுகிறார் ஆச்சாரியார்.

காலத்தோடு, ஆச்சாரியார் வளர்ந்தாரேயொழிய, காலத்தை காந்தி எதிர்த்துப் போராடி முறியடித்ததைப் போல, ஆச்சாரியாரால் அவ்வளவாக முடியாது. அவ்வளவு தன்னம்பிக்கை, ஆச்சாரியாருக்கு இயற்கையாக கிடையாது. அதற்கு ஒரு தூண்டுகோல் வேண்டும். ஒரு சமயம் ஆச்சாரியாருக்கு கடுஞ் சுரம். இது அரசியல் துறையில், அவர் பிரவேசிக்குமுன் நேர்ந்தது. காய்ச்சல் முற்றி ஜன்னி; சொந்த நினைவு வருவதும் மறைவதுமாயிருக்கிற சந்தர்ப்பம். கிழச்சிங்கமான விஜயராகவாச்சாரியார், ஆச்சாரியாரின் தேக நிலையைப் பற்றி வருத்தத்துடன் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க வந்தார். ஆச்சாரியார் படுத்த படுக்கையாகக் கிடந்தார். "ராஜகோபாலாச்சாரி" என்றார் கிழவர். ஆச்சாரியார் கண்விழித்துப் பார்த்தார். "இது என்ன முட்டாள்தனம்! ஜன்னி வந்து சாவதற்கு, யாருக்கும் புத்தியும் தைரியமும் வேண்டியதில்லை. பிழைத்திருக்கத்தான் தைரியமும் திடசங்கல்பமும் வேண்டும்.

www.padippakam.com



சந்தர்ப்பத்தை கைவிட்டு விடாதேயும்; சங்கற்பம் செய்துகொள்ளும்; உடம்பு நிச்சயமாய் சரிப்பட்டு போய்விடும்" என்றார் கிழவர். சரியான மருந்து! சரியான நோயாளி! சரியான வைத்தியர். ஆச்சாரியார் ஜன்னியை உதறித் தள்ளி விட்டார். கொஞ்சம் தூண்டுதல் போதும். தன் சக்தியை அறியாத ஹனுமானுக்கு ஜாம்பவான் உபதேசம் செய்யவில்லையா?

ஆச்சாரியார், உள்ளன்பு ஊற்று ஒட்டமில்லாத ஒரு இயந்திரம் என்று சிலர் பொய்ச் சூத்திரம் புனைந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறு. "தொட்டால் சுருங்கி" என்ற பச்சிலையைப் பார்த்திருக்கிறீர்களா? அது கொடி கொடியாக ஓடியிருக்கும். அதைத் தொட்டால், இரண்டு பக்கங்களிலுமிருக்கிற இலைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும்; அவ்வளவு நயமான உயிர், "தொட்டால் சுருங்கி"க்கு. சங்கப் பலகைக்கு நீளுகிற, சுருங்குகிற சக்தி உண்டு. ஆனால், பெரும்பான்மைப் புலவர்களின் "அண்டிமாண்டுக்கு" சங்கப் பலகை, ஜவாப்பு சொல்லுவதில்லை. குற்றம் யாருடையது? ஆச்சாரியார் பால்யத்திலிருந்தே தொட்டால் சுருங்கி". பழக்கம், சுபாவமாக மாறி விட்டது போலும்! ஆனால் அவருடைய இயற்கை அதுவல்ல.

விசேஷ நாட்களில், ஆடம்பரமின்றி விழாக்கொண்டாடுவது சிலருக்குப் பிடித்த ஏற்பாடு. சாமான்யர்களைப்போல விழாவில், தாங்களும் கலந்து கொள்ளுவதா? முடியாத காரியம். ஆனால் கணப்புச் சட்டியைப்போல, கணகண வென்று தீ கனிந்து கொண்டிருக்கும் உள்ளமுடையவர் ஆச்சாரியார். "ருசு?" என்பீர்கள். ருசு இல்லாமல் இந்தக் காலத்தில், எதுவும் ஏற்கப்படாதல்லவா? வரதராஜுலு நாயுடு அவர்களின் ராஜநிந்தனை கேஸ் மதுரையில் நடந்து கொண்டிருந்தது. ஆச்சாரியார் நாயுடுகாருக்கு வக்கீல். இரவில் நாயுடுகாரு, கவலையற்று, உறங்கி விடுவார்.

www.padippakam.com



பாரிஸ்டர் ஜோஸப்பும் ஆச்சாரியாரும் நடுநிசி வரையிலும் அதற்குப் பின்னும், வழக்கைப்பற்றியே கவலையா யிருப்பார்கள். முடிவில், வழக்கை விசாரித்த நீதிபதி நற்குணம், நாயுடு அவர்களுக்கு பதினைந்து மாதம் காவல் தண்டனை கொடுத்தார். தினந்தோறும் வழக்கமாக எங்களுடன் கோர்ட்டுக்கு வந்து கொண்டிருந்த நாயுடுகாரு அவர்கள் தீர்ப்புக்குப் பின், எங்களை விட்டுப் பிரிய நேர்ந்தது. வீட்டுக்குத் திரும்பினோம். "எத்தனை பேர் போனோம்; எத்தனை பேர் திரும்பி வருகிறோம்" என்று இரண்டு மூன்று பெரிய நீர்த்துளிகளை கண்களினின்றும் ஆச்சாரியார் உகுத்தார். திடீரென்று இதை பலவீனம் போல நினைத்து, "நாயுடுகாரு பாக்கியசாலி" என்று பேச்சை மாற்றினார் ஆச்சாரியார். "சரித்தான், நடவுங்கள்" என்றார் ஜோஸப்.

தியாகமில்லாமல் தேசத்தொண்டு செய்ய முடியாது என்பதை தமது வாழ்வின் மூலமாய், ஆச்சாரியார் தமிழர்களுக்கு விளக்கிக் காண்பித்து விட்டார். ஆச்சாரியாரின் நாட்களுக்கு முன், தேசத்துக்காக தியாகம் செய்வது என்பது இல்லையெனவே சொல்லலாம். ரௌலட் சட்டம் இந்தியா சட்டசபையில் நிறைவேறிற்று. அதைக் கண்டித்து, நாடெங்கும் கிளர்ச்சி. இந்தக் கிளர்ச்சியில் ஆச்சாரியார் தலைகால் தெரியாமல் புகுந்துகொண்டார். அப்பொழுது அவர் சென்னைக்கு குடியும் குடித்தனமுமாக வந்து விட்டார். ஆனால் கோர்ட்டு சம்பந்தமாக கட்சிக்காரர்கள் ஆச்சாரியாரை விட்டபாடில்லை.

வக்கீல் தொழில் இனி வேண்டாம் என்று ஆச்சாரியார் யோசித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் காலையில் ஒரு கட்சிக்காரர் மூன்று நாள் ஆஜராவதற்கு மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். "முடியாது; ஆஜராக முடியாது. இனி நான் தொழில் நடத்தப் போவதில்லை" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார் ஆச்சாரியார். தேசத்துக்காக இவ்வளவு பணத்தியாகத்தை நான் முதன் முதலாகப் பார்த்தது அதுதான்.

www.padippakam.com



1919-ஆம் வருஷம் ரௌலட் சட்டம் சம்பந்தமாக, சத்தியாக்கிரக இயக்கத்தின் பொருட்டு, காந்தி சென்னை மாகாணத்துக்கு விஜயம் செய்தார். ஆச்சாரியாரின் இருப்பிடத்தில் மகாத்மாவுக்கு ஜாகை. சத்தியாக்கிரகத்துக்கு ரகஸியம் கிடையாது என்றார் காந்தி. எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். முடிவில் கூட்டம் கலையுமுன், "எல்லாவற்றையும் பிரசுரம் செய்யவேண்டாம். சத்தியாக்கிரகத்துக்கும் காலத்துக்கேற்ற உபாயமுண்டு" என்று காந்தி, பத்திரிகை நிருபர்களிடம் சொன்னார். "சத்தியாக்கிரகத்திலும் ராஜதந்திரம் இருக்கிறதாமே" என்று ஆச்சாரியார் புன்னகை பூத்தார். ஆச்சாரியாரின் ராஜ தந்திர மனப்போக்குக்கு, காந்தியின் திருக்குறள் சூத்திரம், வாடிய பயிருக்கு மழை போல இருந்ததென்றே சொல்லவேண்டும்.

காந்தி சகாப்தக் காலத்தில், நான்கு பேர்கள் தங்களது சிறந்த ராஜதந்திரத்தைக் காண்பித்தார்கள். 1. பண்டித மோதிலால் நேரு. 2. விட்டல்பாய் பட்டேல் 3. ராஜகோபாலாச்சாரியார், 4. பணகால் ராஜா. பண்டித நேரு, இந்தியா சட்ட சபையை அங்குமிங்கும் அப்படியுமிப்படியும் ஆட்டி வைத்துவிட்டார். மத்திய சட்டசபைத் தலைவர் என்ற முறையில் விட்டல்பாய், அதிகார வர்க்கத்தினருக்கு அரை நிமிஷம்கூட ஒய்வு கொடுக்கவில்லை. சுவாசகாச நோயால் இரவில் தூக்கமின்றி வருந்திய ஆச்சாரியார். சுயராஜ்யக் கட்சியாரைப் படுத்தின பாடு சொல்லமுடியாது. சென்னை சட்டசபையை பணகால் ராஜா ஆண்டு வந்தது போல, இனி யாராலும் ஆள முடியாது என்றே தோன்றுகிறது. இந்த நான்கு பேர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல.

அயர்லாந்து தேசத்திலே, சார்லஸ் ஸ்டீவர்ட் பார்னல் என்ற தலைவர் ஒருவர் இருந்தார். ஆங்கில பார்லிமெண்டு மகா சபையில் அவர் ஒரு மெம்பர். அவர், மகா சாதுர்ய புத்தியை உடையவர். பார்லிமெண்டு மகா சபையில் எந்த வேலையும் நடைபெறாமல், முட்டுக்கட்டை போடும் உபாயத்தில் அவர் கை தேர்ந்தவர்,

www.padippakam.com



இணையற்றவர். கொடிய மௌனத்தை கைக்கொண்டவர். ஆங்கிலேயர்களுக்கு பயத்தையும் அயர்லாந்துக்கு தைரியத்தையும் பலவகைகளிலும் உண்டாக்கியவர் பார்னல். ஆச்சாரியாரை பார்னலுக்கு ஒருவாறு ஒப்பிடலாம். தெளிந்த அறிவிலும் தர்க்க வாதத்திலும் முட்டுக்கட்டை உபாயத்திலும், நமது தமிழ்நாட்டில் - இந்தியாவிலே கூட - யாரையும், ஆச்சாரியாருக்கு இணையாகச் சொல்ல முடியாது.

ஆச்சாரியாரின் வேதாரண்ய உப்பு ஸத்தியாக்கிரக யாத்திரை புராணம் போல ஆகிவிட்டது. பொய்யாய், பழையதாய்ப் போய்விட்டது என்று அர்த்தமில்லை. தஞ்சை ஜில்லா கலெக்டர் தார்ன் அவர்களின் அடாத, அர்த்தமில்லாத உத்தரவுக்கு ஆச்சாரியாரின் யாத்திரை தக்க பதிலாகும். கலெக்டரின் உத்தரவினால் ஏற்பட்ட கேவலமான, வெறுக்கத்தக்க அச்சத்தை, ஆச்சாரியார் ஜனங்களிடமிருந்து ஓட்டியதை ஜாலவித்தை என்று தான் சொல்லவேண்டும். என்ன அமரிக்கை! என்ன தைரியம்! என்ன சாதுர்யம்! எத்தகைய அழகான கிராமியப் பேச்சு! என்ன நகைச்சுவை! எத்தகைய உருக்கம்! என்ன ரம்மியமான உபமானங்கள், உப கதைகள்! இவை யாவையும், ஆச்சாரியாரின் உப்பு சத்தியாக்கிரக யாத்திரைப் பிரசங்கங்களில் கண்டு வியந்தவர்களைக் கேட்டால் தான், மற்றவர்களுக்கு அது தெரியும்.

தமிழர்களின் மானத்தை ஓரளவு காப்பாற்றியவர் ஆச்சாரியார். வட இந்தியாவிலே, யாருக்கேனும் அறிவிலே அஜீரணம் ஏற்பட்டால், அவர்கள் உடனே தலைவர்களாய் மலர்ந்து விடுவார்கள். தங்கள் மலர்ச்சியைச் சோதிக்கும் பொருட்டு, தென்னாட்டுக்கு, சிறப்பாக தமிழ்நாட்டுக்கு, உபதேசம் செய்ய, யாத்திரை புறப்பட்டு விடுவார்கள். தமிழர்கள் என்ன பாபம் செய்தார்களோ இந்த நிரந்தர தண்டனையை அனுபவிக்க! வட நாட்டார் பிரசங்கம் செய்வதும், தமிழர்கள் பிரசங்கம் கேட்பதும்

www.padippakam.com



பாகபத்திர மாமூல் ஷரத்தாக, வெகு காலமாக, ஆட்சேபணையின்றி, நடைபெற்று வந்தது. அந்த ஷரத்தை அடியோடு ரத்து செய்தவர் ஆச்சாரியார். வட இந்தியாவிற்கு ஆச்சாரியூார் போய், மூலை முடுக்குகளிலெல்லாம் பிரசங்க மழை பொழிந்த பின்னர் தான், எனக்கும் என்னைப் போன்ற தமிழர்களுக்கும் மன அமைதி ஏற்பட்டது எனலாம்.

ஆச்சாரியாரை சின்ன காந்தி என்கிறார்கள். இதைப்போல அநியாயம் வேறு எதுவுமே இல்லை. காந்தி மகா மேதாவி; ஆச்சாரியார் மகா புத்திசாலி. காந்தியின் மூளை வேறு ரகம்; ஆச்சாரியாரின் மூளை வேறு வகை. மேதை வேறு; புத்தி வேறு. காந்திக்கு தமது சொந்த சக்தியில் "மலையை நகரச்செய்யும்" நம்பிக்கை உண்டு; பிறர் சக்தியிலும் காந்திக்கு அளவற்ற நம்பிக்கை. ஆச்சாரியாருக்கோ, தம்மிடத்தில் சிறிது சந்தேகம்; பிறரிடத்தில் எல்லையற்ற சந்தேகம். காந்தி, தம்மையே தாம் மூன்று தரம் சுற்றி வந்து, தெய்வ யானையை இந்திரனிடமிருந்து அதிகாரத்துடன் கேட்ட கணபதியை யொத்த மேதாவி; ஆச்சாரியாரோ, வியர்க்க வியர்க்க வாகனத்தில் ஏறி, ஓடிக் களைத்து, அலுத்து, தெய்வ யானையைப் பெறாத தேவதையைப் போல. காந்தி சாஸ்திரம், ஆச்சாரியார் சாஸ்திரி. சாஸ்திரம் காலத்துக்குக் கட்டுப்பட்டதல்ல; சாஸ்திரம் வளரும்; சாஸ்திரியோ சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டவர். சாஸ்திரிக்கு - சாஸ்திரம் தான் பிரதானம். காந்தி உலகத்தின் மனச் சாட்சி; ஆச்சாரியார் மனச் சாட்சியின் மெய்க்காப்பாளர்.

பாகிஸ்தான் பிரச்சினையில், அஹிம்சைக் கொள்கையில், ஆச்சாரியார், காந்தியை விட்டுப் பிரிந்து விட்டார். ஆச்சாரியாரை, சின்ன காந்தி என்று அழைத்ததே தவறு என்று நான் குறிப்பிட்டிருந்தது, காலத்தால் ருசுவாகிவிட்டது. ஆச்சாரியார் காந்தியின் நட்பை இழக்கவில்லை. ஆனால் காங்கிரசைவிட்டு விலக நேர்ந்தது. இது, நாட்டின் துர்ப்பாக்கியமே.

www.padippakam.com



காந்தியின் உள்ளத்துக்கு உரை கல்லைப்போல இருந்த ஆச்சாரியார், காங்கிரசை விட்டு விலகிப் போவதென்றால், அவருக்கு எவ்வளவு துக்கம் இருந்திருக்க வேண்டும்! மனச்சாட்சியின் மெய்க்காப்பாளரான ஆச்சாரியார் இந்த துக்கத்தை பெரிதுபடுத்துபவரல்ல. தான் எதை நினைத்தாலும், அதன்படி நடக்கும் துணிவும் ஆற்றலும் உண்டு என்பதை ஆச்சாரியார் இந்த சம்பவத்தின் மூலமாக வெளிக்காண்பித்து விட்டார்.

காந்தியின் வலது கை என்ற கீர்த்தியில் மிதந்து கிடந்த ஆச்சாரியாரின் 'ஜிப்பா'வைக் கிழிப்பது, அவர் பேரில் கல் எரிவது, தார் ஊற்றுவது என்ற நிலைமை அவருக்கு ஏற்பட்டது மிகவும் துக்ககரமானது. எனினும், தான் கொண்ட கருத்துக்களுக்காக, எதையும் எத்தகைய அவதூறையும் மேற்கொள்ள முடியும் என்பதை ஆச்சாரியார் தெளிவாகக் காண்பித்து விட்டார்.

ஆச்சாரியாருக்கும் நமக்கும் எவ்வளவோ அபிப்பிராய பேதம் இருக்கலாம். அவர் சிற்சில விஷயங்களில் பிற்போக்காளர் என்பது என் கருத்து. என்றாலும், ஆச்சாரியார், முதல் தமிழன், உயர்ந்த மனிதன், அற்புதமான நிர்வாகி, தீர்க்காலோசனைக்காரர் என்ற வகைகளில், அவருக்கு நாம் மரியாதை காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆச்சாரியார் போன்றவர்கள் அடுத்தடுத்து மலிவாகப் பிறக்கக் கூடிய பிறவிகள் அல்ல. அதற்காகவும் நாம் மரியாதை செலுத்தவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# 2. ஈ.வெ. ராமசாமி நாய்க்கர்

ராமசாமி நாய்க்கரா - அப்பா இம்மாதிரி சொல்லிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு வருகிறார்கள் தமிழர்கள். இந்த "மூச்சுப் பயிற்சி" சென்ற பல வருஷ காலமாக, விடாமல், தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்தப் பெருமூச்சிலே, ஆனந்தமும் ஆத்திரமும் கலந்து களிக்கின்றன. இத்தகைய முரண் கொண்ட உணர்ச்சிகளை தமிழர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் ராமசாமி நாய்க்கர் ஒரு அபூர்வமான பிறவியாகும். பிற்போக்காளர்கள் சபிக்கவும், தாராள நோக்குள்ளவர்கள் வாழ்த்தவும், ஆங்கில தேசத்தில் வாழ்ந்தும் வளர்ந்தும் வீழ்ந்தும், விடாமல் முண்டிக்கொண்டிருக்கிற மாஜி முதல் மந்திரி லாய்ட் ஜியார்ஜ் அவர்களைப் போல, ஸ்ரீமான் நாய்க்கர் தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகிறார்.

ஒரு சாரார் கூசாமல் திட்டவும், மற்றொரு சாரார் "வானுற" ஏந்தி வாழ்த்தவும் செய்யும்படியாக, என்ன சூட்சும சக்தி நாய்க்கரிடம் இருக்கிறது? அந்த சூட்சுமத்தைத் தெரிந்துகொண்டால், நாய்க்கரின் விசித்திர வாழ்விற்கு - விபரீத வாழ்வு என்று சொல்லுகிறவர்களுமுண்டு - திறவுகோலைக் கண்டதுபோலாகும். இந்த அதிசய மனிதன் எவ்வாறு தோன்றினார்? காலம் என்று கண்ணீர் விடுகிறார் ஒரு கிழவர். காலம் என்று களித்துக் கும்மியடித்துக் குதிக்கிறான் ஒரு இளைஞன். கிழவனும் குமரனும் மன ஒற்றுமையுடன் வாழ முடியாது என்கிறார் கவி. சபாஷ்! இயமனுடைய நாள் என்று உளறும் கிழவனும் என்னுடைய நாள் என்று கூத்தடிக்கும் குமரனும் எவ்வாறு மனச்சந்திப்புடன் வாழ முடியும்? சந்தித்தால், சண்டையைத் தவிர வேறு எவ்வித விளைவும் தோன்றாது. நாய்க்கரைப் பற்றிய அன்புக்கும் அவதூறுக்கும் மேற் கூறியதை காரணமாகச் சொல்லாம்.

பள்ளிக் கணக்கு புள்ளிக்கு ஒவ்வாது என்பார்கள். பள்ளிப் படிப்பு "பங்கா பியூனுக்கு" கூட, இப்பொழுது

www.padippakam.com



உபயோகப்படுவதில்லை. நாய்க்கர் "டிமிக்கி" அடிக்காமல், பள்ளிக்கூடத்துக்குச் சரிவர பால்யத்தில் போயிருந்தாரானால், அவர் "பத்தோடு பதினொன்று, அத்தோடு அதுவொன்று" என்ற சங்கதியில் முடிந்திருப்பார். நீளமும், அகலமும், ஆழமுமுள்ள பட்டங்களை வரிசைக் கிரமமாக பெயரின் முன்னும் பின்னும் ஒட்டிக் கொண்டும் அச்சடித்தும் வைத்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை யாருக்குத் தெரியும்? "நேற்று இருந்தார், சற்றுமுன் கூட இருந்தாரே" என்று மட்டும் வர்ணிக்கப்படும் பெருங்கூட்டத்தைச் சேராத பாக்கியம், இந்த உலகில் சிலருக்குத் தான் உண்டு. குரு போதிக்கும் வித்தை, முழக் கோலால் அளக்கக்கூடிய "ஸர்டிபிக்கேட்" (நற்சாட்சிப்பத்திரம்) உடன் முற்றிற்று, அதற்கு செலவழிந்த பணத்துக்காக, கடன்காரன், வீட்டு வாயிற்படியில் வந்து நிற்காத வரையில். நாய்க்கருக்குப் பெயரைக் கொடுத்தது, பெயரை ஸ்தாபித்தது, குருவில்லாத வித்தையாகும். தற்போதைய படிப்பு, இயற்கையைப் பழிக்கிற நடப்பு என்பது என்னுடைய கருத்து. அவ்வப்போது, படிக்காத மேதாவிகளை இயற்கை தோற்றுவித்து, மார்பைக்கூடக் கோணலாகப் பார்த்துக்கொள்ளும் படிப்பாளி பட்டதாரிகளை பழிக்கும் காட்சியை, அற்புதம் என்று சொல்லுவதா? பள்ளிப் படிப்புக்கும் நாய்க்கரின் "மேதை"க்கும் துளிக்கூட சம்பந்தம் கிடையாது. (ஸ்னானப்ராப்தி என்று வைதிகப் போக்கில் விடலாமா என்று எண்ணினேன். சமூகப் புரட்சிக்காரரான நாய்க்கரின் நினைவு வந்ததும், அதை எழுத, பேனா "மக்கர்" செய்துவிட்டது)

நாய்க்கரின் தகப்பனார் ஏழையல்ல; ஆனால் முன் யோசனைக்காரர். சம்பாதிக்கத் தெரியாத அல்லது மனமில்லாத பிள்ளைகளிடம் அவருக்கு அவநம்பிக்கை என்று சொல்லவும் வேண்டுமா? எனவே, சொத்தை தர்ம சொத்தாக ஆக்கிவிட்டார். ஆனால் ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்தான் முடிவு. எனவே, தகப்பனாரின் கோணல் புத்திக்கு, நாய்க்கரின் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் (கையில் காசில்லாமல், அதுவும் பால்யத்தில்) ஆணித்தரமான பதிலாகும்.

www.padippakam.com



இந்த, தகப்பனுக்கு அடங்காப் பிள்ளை, "தண்ணீர் தெளித்து" விடப்பட்ட பிள்ளை, யாருக்கு அடங்கும்? எதிரே யிருக்கிற உனக்கு "பேப்பே" என்று சொல்ல முடியுமானால், எதிரே யில்லாத உன் தகப்பனாருக்கும் "பேப்பே" என்று சொல்லுவதில் எவ்வாறு சங்கடமுண்டாகும்? தண்ணீர் பட்டபாடாகச் சொல்லலாம். பயமறியாத இளங்கன்று, "காளை"யாக வளர்வதில் வியப்பு ஒன்றுமேயில்லை. பேசுபவன், பேச்சோடு சரி; ஆனால் மௌனமாயிருப்பவன் என்ன செய்வான், எவ்வாறு செய்வான் என்று சொல்லவே முடியாது. இயற்கையும், ருசியும், யோசனையும் எங்கெல்லாம், எவ்வாறெல்லாம் தள்ளுமோ, அப்படி யெல்லாம் "ஆடிப்பாடி" ஆக வேண்டியதுதான். நாயக்கர் இந்த சூத்திரத்துக்கு விலக்கல்ல.

புலிக்குப் பயப்பட்டவர்கள் என்மேல் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் தைரியசாலிகளைப் போல பலவேறு கூட்டத்தார்கள் தமிழ் நாட்டில் வந்து குடியேறிய பின்னர், தமிழ்நாட்டின் பெருமை குன்றிப் போய்விட்டது. மேலும், நீண்ட காலமாக எதிரிகளை எதிர்த்து மாய்த்து, வெற்றியை அடையும் வெறியும் சூழ்ச்சியும், தமிழர்களின் உள்ளத்தினின்று மாயமாய்ப் பறந்தோடிவிட்டன.

"பயபக்தியுடனிரு. பழக்கத்தை விடாதே, பெரியோர் சொல் கேள்". இவைகள் நல்ல புத்திமதிகள்தான். ஆனால், இவைகள் தமிழர்களை எந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டன என்பதை, மனம் பதைக்காமல், எழுத்தில் எழுத முடியாது. தமிழர்கள் அனைவரும் ஒரு காலத்தில் "இடித்த புளிகளாக" விளங்கினார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற 'ஏழைகள்!' ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை "*அடிதெரியும்படி*" கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாய்க்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்.

நாய்க்கர் ஒரு காலத்தில் பரம பக்தர். அவருக்கு, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுகாருவிடமும், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரிடமும் இருந்த பக்தியை அளவிட்டுச் சொல்ல

www.padippakam.com



முடியாது. நாய்க்கருக்கு அரசியல் உலகைக் காண்பித்தவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு; எனவே முதல் குரு. பின்னர், ஆச்சாரியாரின் மோக வலையில் அகப்பட்டுக் கொண்டு, அவர் கீறிய கோட்டை சிறிதுகாலம் கடந்ததேயில்லை.

விநோத சம்பவம் ஒன்று சொல்லுகிறேன். சென்னையில் ஒரு சமயம் மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. ஸ்ரீமான் எஸ். சீனிவாஸய்யங்காரைச் சேர்ந்தவர்கள் ஆச்சாரியாரின் யோசனைத் திட்டத்தை எதிர்த்தார்கள். வெற்றியைப் பற்றி ஆச்சாரியாருக்கு சந்தேகம். அந்தக் கூட்டத்தில் நாய்க்கர் பேசவே விரும்பவில்லை. நாய்க்கர் பேசினால்தான் நல்லது என்று ஆச்சாரியாருக்குத் தோன்றிற்று. "ஒரு சங்கதி, நாய்க்கர்வாள்; நீங்கள் பேச வேண்டும்" என்று ஆச்சாரியார் சொன்னார். "ஏன்" என்றார் நாய்க்கர். "பிறகு சொல்லுகிறேன்" என்றார் ஆச்சாரியார். நாய்க்கர் பேசின பேச்சு எதிர்க்கட்சியை முறியடித்துவிட்டது. குரு சிஷ்ய விசுவாசம் வைஷ்ணவர்களுக்கே உரியது என்று அக்காலத்தில் ஆச்சாரியார் - நாய்க்கர் நட்பைப்பற்றிக் கேலி செய்வது வழக்கம். நல்லாரின் கண் நட்பை விருத்தி செய்திருக்கும். பொல்லாதார் பார்வை "திருஷ்டிதோஷத்தை" உண்டாக்கியது போலும்! ஆச்சாரியார் - நாய்க்கர் பிரிவு நாட்டுக்கு நஷ்டம்.

நாய்க்கர் பொதுஜன சேவை வானத்தில் திடீரென்று தோன்றினார். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் வெங்கலநாத "ஸங்கீத"ப் பிரசங்கம் நாய்க்கரின் மனப் போக்கையும் வாழ்க்கையின் போக்கையும் ஒருவாறு மாற்றி விட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நாய்க்கரின் உள்ளத்தின் தியாகத்தையும் தைரியத்தையும் தூண்டி, அவைகளை மணக்கச் செய்தவர் ஆச்சாரியார் என்பது எனது அபிப்பிராயம். நாய்க்கரின் பெருமைக்காக, டாக்டரும், ஆச்சாரியாரும் பரிசு கேட்க மாட்டார்கள். எனினும், இடைச்செருகலாகவேனும் அதைக் குறிப்பிடாம லிருக்கலாமா?

www.padippakam.com



ஒத்துழையாமைக்கு முன்பே, பெஸண்டு அம்மையாரை அரசியல் தலைமைப் பதவியினின்றும் நீக்க நடைபெற்ற முயற்சியில் நாய்க்கர் அவர்களும் சிறிது கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. காந்தியும் வந்தார்; நாட்டிலே கண் விழிப்பும் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் நாய்க்கர், தமது இயல்பான துடிதுடிப்புடனும் ஆர்வத்துடனும் ஒத்துழையாமையில் கலந்து கொண்டார். இந்தக் கலப்பே, அவருடைய சக்தியின் தாக்குதலுக்கு, கதவு திறப்பு என்று சொல்ல வேண்டும்.

அப்பா! நாய்க்கரின் அழகு பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரம் செய்யும் உபமானங்களை, உபகதைகளை, அவரது "கொச்சை" தமிழ் வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பை, பார்க்கவும் கேட்கவும் எவ்வளவு தூரத்திலிருந்து ஜனங்கள், வண்டுகள் மொய்ப்பது போல, வந்து மொய்ப்பார்கள்! ஈரோட்டில் அற்பு ஆயுளில் இறந்த தங்கப்பெருமாளை, நாய்க்கர் அவர்கள் தேங்கப் பெருமாள் என்று சாதாரணக் குடியானவனைப்போல் பிடிவாதமாய் உச்சரிக்கும் அழகையும் கவலையின்மையையும், நான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துபோவேன். "தேங்கப்பெருமாள்" உச்சரிப்பில், நாய்க்கரின் பாதிப் பலம் பதுங்கிக் கிடக்கின்றது. இலக்கணம், சந்தி, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாய்க்கர் அவர்களைக் கண்டு நடுங்கவேண்டுமே யொழிய, அவைகளை லட்சியம் செய்பவர் நாய்க்கர் அல்ல. அவர் இயற்கையின் புதல்வன், மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாய்க்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் போன்றது என்பதில் சந்தேகமில்லை.

பொதுவான ஒரு மனது எல்லார் உள்ளங்களிலும் சரடுபோல் ஓடுகின்றது என்றார் எமர்ஸன் என்ற மேதாவி. இந்த "சரடு" தமிழ் மக்களின் உள்ளத்தில் உண்மையாகவே ஓடுமானால், ஒற்றுமைக்குறை ஏன் இருக்க வேண்டும், எவ்வாறு இருக்க முடியும்

www.padippakam.com



என்று ஒருவன் நினைப்பது சகஜந்தானே? லட்சியத்தில் ஒற்றுமையிருந்து, வாழ்க்கைமுறையில் வித்தியாசமும் இல்லையானால், தமிழர்களின் சமுதாய வல்லமை ஒருக்காலும் சிந்திச் சிதறிப்போக முடியாது. நமது சமுதாயசக்தி ஒழுகிப்போகும் ஒட்டைகளை, நாய்க்கர் அவர்கள் ஆவலுடன் தேடினார். ஜாதிக்கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தனமான பரம்பரை அவலட்சணம், மனச்சாட்சியை ரப்பரைப்போல் அமைத்துக்கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானம் சொல்லும் விசித்திர ஜாலவித்தை, பெண்களின் முன்னேயும் பின்னேயும் பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணை தத்துவம், போலி மதம், பிடுங்கல் புரோகிதம் - இவையும் இவை போன்றவை யாவும் ஒட்டைகள் என்று நாய்க்கர் கண்டார்.

சர்க்கார் பேரில் நாயக்கருக்கு இருந்த கோபம், இவைகளின்பேரில் பாய்ந்தது. யோசித்து யோசித்து கோழையாகும் கூட்டத்தை, நாய்க்கர் அவர்கள் சேர்ந்தவரேயல்ல. செய்ய வேண்டும் என்று தோன்றியதை, தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதுபோல, தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை. லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் தன்மைக்கும் தேசத்தொண்டுக்கும் சம்பந்தமே யில்லை என்பது அவரது கொள்கை போலும்! இது ஒருவகையில் உண்மை என்பதை எவரும் மறுக்கமுடியாது. மேலே குறிப்பிட்ட ஒட்டைகளை அடைக்கும் வேலையிலேதான் நாய்க்கர் அவர்கள், பலரால் “பதர்“ என்றும் மற்றும் பலரால் “பெரியார்“ என்றும் பட்டம்பெற்று மதிக்கப்பட்டு வருகின்றார்.

எதற்கெடுத்தாலும், “எங்கள் தகப்பனார், எங்கள் பாட்டனார், எங்கள் மூதாதை“ என்று அசட்டு நாடகப் பாத்திரத்தைப் போல உளறிக் கொண்டிருந்தால், தமிழர்கள் “இக்கரை கடந்து அக்கரை” சேர்வது எக்காலம்? தனக்குத்தானே யோசிக்கும் பொறுப்பையும், திறமையையும் தமிழர்களின் உள்ளத்தில் ஓரளவு

www.padippakam.com



(அதைப் பெரிய அளவு என்றுகூடச் சொல்லலாம்) தூண்டிய ராமசாமி நாய்க்கரை பெரியார் என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. "மநுநூல் பார்வையைக் கெடுத்துவிட்டது; நன்னூல் பாஷையைக் கெடுத்துவிட்டது" என்று ஒரு நண்பர் சொன்னார். இவை யிரண்டுடன், சலிக்காமல் போர் தொடுக்கும் நாய்க்கரை, அந்திமாலைப் பார்வை கொண்டவர்கள் துவேஷிக்கலாம், திட்டலாம். ஆனால் நிகழ்காலமும், வருங்காலமும் நாய்க்கருக்குத்தான் இவைகளில் பக்கத்துணைகள் என்பதில் சந்தேகம் சிறிதுமில்லை.

நாய்க்கர் மகா ஸரஸி; பரம ரஸிகர்; ஆனால் சண்டியும்கூட. பிறரிடம் அவர் பேசும்பொழுதும் நடந்துகொள்ளும் பொழுதும் அவர் காண்பிக்கும் வினயம் படத்தில் பிடிக்கவேண்டிய அரிய பொருளாகும். உறக்கத்தில் இருப்பதுபோல பாவனைசெய்யும் அவரது முகம், உயிர்ச்சத்து பொருந்திய பிரச்சினை வரும்பொழுது, பொலிவும் வலிவும் அடையும் வகையைக் காண்பது, பார்ப்பவருக்கு ஆனந்தமுண்டாக்கும்.

கட்சிப் பிரதிகட்சி பேசுகையில், போலி உபமானங்களையும் மாயச் சமாதானங்களையும் உபயோகித்து திகைக்கச் செய்யும் சட்ட நிபுணர்களுக்குக் கூட, நாய்க்கர் அவர்கள் சிறிதும் பின்வாங்க மாட்டார். இது பழக்கத்தால் ஏற்பட்ட பயிற்சி அல்ல. இது எதிரிக்கு வணங்காத இயல்பின் காட்டாற்று வெள்ளப் பெருக்கின் வேகமாகும். இளமைப்பருவத்தில் குஸ்திப் பழக்கம் அவருக்கு உண்டோ, என்னவோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் பண்டிதர்கள் நிறைந்த சபையில் வாய் குஸ்தி போடுவதில் அவர் மட்டமான ரகத்தைச் சேர்ந்தவரல்ல.

"தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை, திங்கள் இல்லை என்கிறார் நாய்க்கர்; சுவாமியைக் குப்புறப்போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாஸ்திகன் வேறு எவருமே இருக்கமுடியாது; பாதகன்" என்று

www.padippakam.com



சிலர் உறுமுகிறார்கள். வீட்டைக்கட்டி வைக்கோலைத் திணிப்பதைக் காட்டிலும், வீடு கட்டாமலே, வைக்கோலைப் போராய்ப் போடலாம் என்ற சிக்கன யோசனை சொல்லுவது தவறா? அழுகி அழுகிப்போய் புழுநெளியும் உடலுடன் இருப்பதைக் காட்டிலும் உயிர் விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால், அவனை "சாகச் சொல்லுகிறான், பாவி" என்று திட்டுகிறதா? கண்டவர்க்கெல்லாம் குனிந்து சலாம்செய்து, மணணோடு மண்ணாய் ஒட்டிக் கொண்டு, மார்பால் ஊர்ந்து செல்லவேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால், "பாபி, நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான்" என்று அபத்தம் பேசுகிறதா? மனச்சாட்சிக்கும் தொண்டுக்கும் பக்தனான நாய்க்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்று தெரிந்துகொள்ளவில்லையென்றே நான் சொல்லுவேன்.

தெய்வத்தை நம்பின ஆஸ்திகன் தனது வாழ்வில் காண்பிக்க வேண்டிய லட்சணங்கள் யாவை? தயை, தைரியம், சத்தியம், நியாயபுத்தி, ஆனந்தம், அபரிமிதமான நகைச்சுவை, சோர்வின்மை, கொடுங்கோன்மைக்கு அஞ்சாமை முதலியன ஆஸ்திகனது லட்சணங்களாகும். இத்தகைய குண விசேஷங்கள் அமையப்பெறாத யாவரும் நாஸ்திகக் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் என்று "வாசமகோசரமாய்" சொல்லி விடலாம். ஒருவனை நாஸ்திகன், நாஸ்திகன் என்று அழைத்து, வெறுங் கூச்சல் போடுவதில் என்ன பயன்? "ஆஸ்திக" இறுமாப்புக் கொண்ட ஜாதி ஹிந்துக்கள், தீண்டாமையால் ஆண்டுதோறும் ஹிந்து சமாஜத்தின் தொகையைக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை உணரவில்லையே? கட்டுப்பாடின்றி எந்த சமாஜமும் நிலைபெற்று இயங்க முடியாது என்பது உண்மை. ஆனால் அடிவலுவற்ற கட்டுப்பாடு, தன்னையும் கெடுத்துக் கொண்டு, அது கட்டுப்படுத்தும் சமாஜத்தையும் சீர்குலைத்து கெடுத்துவிடும். இதை நாய்க்கர் தமக்கு இயல்பாயுள்ள வலிமை கொண்ட, முரட்டு வார்த்தைகளில் ஏன் சொல்லக்கூடாது? புனர் ஜன்மத்தை நம்பி,

www.padippakam.com



தெய்வத்தைத் துதித்து, சாவுக்கு அஞ்சாத தமிழன்தான், நாயக்கரை நாஸ்திகன் என்று சொல்லலாம். மற்றவர்கள் கூறுவது, மானநஷ்டத்தைக் கொணரும் சொல் நஷ்டமாகும்.

தமிழ்நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாய்க்கர் அவர்கள் "முன்னோடும் பிள்ளை", தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு அவர் கண்ணில் அரைகுறையாகப் பட்டிருக்கலாம். (எவர் கண்ணிலேனும் அது முழுமையாகப் பட்டிருக்கிறதாக, யார் உறுதியாகச் சொல்லமுடியும்?) ஆனால் மலைகளையும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யுத்தம் செய்த மாருதியைப்போல, அவர் தமிழ்நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு, போர்புரியும் வகையைக் கண்டு, நாம் வியப்படையாமல விருக்கமுடியாது.

கசப்பு மருந்தைத் திட்டுவாருண்டா? வியாதியை வரவழைத்துக்கொண்டு, கசப்புக்கும் பத்தியத்துக்கும் பயப்பட்டால், நோய் எவ்வாறு குணமாகும்? உலகத்தின் மதிப்பு, பொதுவாக தமிழர்களுக்கு உண்டாகும் வரையில், தமிழர் வாழ்வு, வலிமையற்ற, நோயுற்ற வாழ்வு என்றுதான் சொல்லவேண்டும். அடிமைப் பெருவியாதி பிடித்திருக்கும் தமிழர்களுக்கு மத சம்பந்தப்பட்ட வரையிலும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டுவித்தால் மட்டும் போதாது. பெருநெறியான விடுதலைப்போரைப் புறக்கணித்து, வைதிக கோட்டையை மட்டும் முற்றுகை போடும் நாய்க்கரின் அளவுக் கண், சிறிது மங்கி யிருக்கிறதென்றே சொல்லவேண்டும். உடலையும் உயிரையும் வாடச்செய்யும் அரசியல் அடிமைத்தனத்தைப் போக்கும் வேலைக்குச் சாதகமாக, சமூகச் சீர்திருத்தத்தை அழைத்துக் கொண்டால், பெரும்பயன் விளையும். நாய்க்கரின் ஆற்றலோ மிகப் பெரிது. அவரது தற்போதைய லட்சியம் சிறிது.

பரம்பரை என்ற போர்வையைக் கொண்டு, எதற்கும் சமாதானம் சொல்லி, மனம் போனவாறு நடக்கும் சோம்பேறிக் கூட்டத்தார், பாட்டாளிகளையும் அவர்களது நடையுடை பாவனைகளையும் கண்டு நையாண்டி செய்வார்கள்.

www.padippakam.com



நையாண்டிதான் மீதப்படும் அதைச் செய்வார்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார்கள். இந்த உண்மையை உபதேசம் செய்யும் ராமசாமிப் பெரியார், பிரிட்டிஷாரைப் புகழ்ந்து, அவர்களை வணங்கும் வித்தையில், என்ன மாயம் புதைந்து கிடக்கிறதோ, அது எனக்குத் தெரியவில்லை.

வைதீகத்தை எதிர்க்கத்தான் வேண்டும் சமயம் நேரும்பொழுது அதற்கு சரியான புத்தி புகட்டத்தான் வேண்டும். வைதிகத்தின் கொடிய சேஷ்டைகளையும் பொல்லாங்கான விளைவுகளையும் பொறுக்க முடியாதுதான். என்றாலும், உள்நாட்டு வைதீகத்தை அடக்கி ஒடுக்குவதற்காக, அயல்நாட்டு ஏகாதிபத்தியத்தோடு நாய்க்கர் உறவாடுவதைக் கண்டு, நான் மிகுதியும் வருந்துகிறேன்.

மருமகளின் கொட்டத்தை அடக்குவதற்காக, மகன் சாக வேண்டும் என்று எண்ணும் அசட்டுத்தாயின் மனோபாவத்தைக் கொண்டு, நாய்க்கர் சமூகத்தொண்டு ஆற்றப் பார்ப்பது, கானல் நீர் வேட்டையாக முடியும் என்று சொல்லவும் வேண்டுமா? உயர்ந்த சமூகத் தொண்டரான நாய்க்கர் வழிதப்பிக் காரியம் செய்வது காலத்தின் விளைவு போலும்!

# 3. திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

பாலுக்கு நிகரான கதர் உடையைத் தரித்துக் கொண்டு, இடது கை ஆட்காட்டி விரலால், எச்சரிக்கைப் பாணப் பிரயோகம் செய்வதுபோல, உச்சிக் குடுமி சகிதமாய், நெற்றியில் அழகான சந்தனப் பொட்டுத் துலங்க, அதோ, தேன் மொழிப் பிரசங்கம் செய்கிறாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா?

அவர்தான், குழைந்து குழைந்து கொஞ்சுவதைப் போல பேசும் கலியாண சுந்தர முதலியார். வாய்தான் வலிக்காதா? வார்த்தைக்கேனும் தடை கிடையாதா? ராமஸ்வாமி நாய்க்கரின் பிரசங்கம் கூடுவாய் மூலை மழை; அது கடகட வென்று கொட்டித் தீர்த்து விடும். வியர்க்கும் உடலைக் குளிரக் குளிர இன்புறச் செய்யும் தென்றல் காற்றைப் போன்றது முதலியாரின் சொற்பொழிவு.

முதலியார் சாது; அவருடைய அச்சுக்கூடத்துக்கும், சாது அச்சுக்கூடம் என்று பெயர். முதலியாரின் முகத்தைக் கண்டவர்களுக்கு, அவரோடு சண்டை போட வேண்டும் என்றே தோன்றாது. மழலையைப் பேசும் குழந்தைகளுடனே, எவரேனும் சண்டை போடத் துணிவார்களா? அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாகக் கருதிக் கொண்டாடும் குழந்தையைப் பார்த்தால், யாருக்குத்தான் இரக்கம் உண்டாகாது? சூதுக்கலப்பில்லாத குழந்தையின் முகவிலாச பாக்கியம் படைத்தவர் முதலியார். இந்தப் பாக்கியம் அவரது பெற்றோர்களின் குண விசேஷங்களின் பயனோ, அல்லது முதலியாரின் உள்த்தின் பயிற்சிப் பயனோ, அது எதுவென்று, என்னால் விளக்கி, விவரமாய்ச் சொல்ல முடியவில்லை.

www.padippakam.com



சேலம் விஜயராகவாச்சாரியாருக்கு பெஸண்டு அம்மையாரிடம் எவ்வளவு ஆத்திரமோ, அவ்வளவு ஆர்வம் கலந்த அன்பும் மதிப்பும், முதலியாருக்கு அம்மையாரின் பேரில். இதற்கு நியாய முண்டு. முதலியார் அவர்கள், அரசியல் உலகில் அடி வைத்ததற்கு, பெஸண்டு அம்மையார்தான் காரணம். சென்னை வெஸ்லி காலேஜில் தமிழ்ப் பண்டிதராயிருந்த முதலியாருக்கு, அரசியல் வானத்தின் அழகுக் கவர்ச்சி கண்ணில் பட காரணமில்லை. "டானா" என்று பரம்பரை பட்டப்பெயர் வாங்கிய வாத்திமார்கள் கனம் சீனிவாச சாஸ்திரியாரைத் தவிர - அரசியலில், நமது தேசத்தில் கலந்து கொண்டு, பெயர் வாங்கினதே யில்லை. கலியாணசுந்தர முதலியார் அவர்களைப் பார்த்த பின்னர், "கற்பனை யில்லாத தமிழ்ப் பண்டிதர்" என்று புலவர்களைக் கடியும் வழக்கத்தை விடத்தான் வேண்டும். என்ன செய்வது?

பெஸண்டு அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கக் காலத்திலேயே, வெளி வரவேண்டும் என்ற ஆவல் முதலியாருக்கு ஏற்பட்டு விட்டது. நல்ல காரியம் செய்வதில் பல பேர்களுக்கு, ஆவலும், ஆர்வமும் இருக்கலாம். ஆனால் சமையலறை அடுப்பில், பூனை படுத்துறங்கக் கூடிய வறுமைக்கு ஆட்பட்டவர்கள், குடித்தனத்தைக் கவனிப்பார்களா, அல்லது கொடுங்கோலனை எதிர்ப்பார்களா? எப்பொழுதுமே, வயிற்றுக்கும் லட்சியத்துக்கும், ஓயாத போராட்டம். வயிறு தற்காப்பு யோசனையை சொல்லும்; லட்சியமோ, காதல் கன்னிகையைப் போல, கடைக் கண்ணால், ஜாடை செய்து, சமிக்கினை காட்டி, ஆளை உருக்கிவிடும்.

வயிற்றை ஜயித்தவன் வீரன். வயிற்றுக்குப் பணிந்தவன் "வவுரன்" (வயிறன்). வயிறு "குழந்தை குட்டிகளை"க் காட்டி, குடித்தனச் சுமையை, கடமையாக அலங்காரம் செய்து, தன் தற்காப்புக் கட்சிக்கு, கோட்டை அரண் செய்து கொள்ளுகிறது.

www.padippakam.com



லட்சியமோ மனிதனுக்கு கற்பனை, தியாகம் முதலிய இறக்கைகளைக் கொடுத்து, வயிற்றுக் கோட்டைக்கு, வெளியே பறக்கத் தூண்டுகிறது. இவை இரண்டுக்கும் நடுவே, அகப்பட்டுக் கொண்டு, சதா தர்ம சங்கட மந்திரம் ஜபித்துக்கொண் டிருப்பவர் முதலியார். சாதாரண மனிதனுக்கு எளிதாகத் தோன்றும் காரியங்கள் யாவும், முதலியார் அவர்களின் கண்களில், வகுத்துப் பிரிக்க முடியாத தர்மசங்கடங்க ளாகத் தோன்றும். இது கற்பனை மிகுதியும் கலந்த இரக்கத்தின் கோளாறாகும்.

தம்மிடம் பெண் தன்மை நிறைந்திருக்கிறது என்று முதலியார் சிறிதளவு பெருமையாகவும், பெரிதும் கேலியாகவும் சொல்லிக் கொள்ளுவதுண்டு. பெண் தன்மை இல்லாத ஆணுக்கு வசீகர சக்தி கிடையாது என்று முதலியார் நண்பர்களிடம் பலகாலும் சம்பாஷணை பிரசங்கம் செய்வார். அவர், இதை, தம்மைப் பற்றித்தானோ சொல்லிக் கொள்ளுகிறார் என்கிற சந்தேகம், கேட்பவர்களின் மனதில், நிச்சயமாய் தோன்றும். மனக் கொடுமையினால் எவனும் வீரனாவதில்லை. துணிவுக்கும் இரக்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அறிவுக்கும் கோழைத்தனத்துக்கும் சம்பந்தம் உண்டு. எனவே, எதிரிடைகளைப் போலப் பார்வைக்குப்படும் "ஆணில் பெண்தன்மை" உண்டு, "பெண்ணில் ஆண்தன்மை" உண்டு. இந்த இயற்கை வினோதத்தை சில மலர்களிலே காணலாம். முதலியாரின் ஆண்தன்மை "வீட்டை விட்டு வெளியே போய், வீரவாழ்வு வாழ்வாயாக" என்று அவரை அதட்டுகின்றது. "வெளியே போனால் வீடு பாழாய்ப் போகும். வீட்டுப் பொறுப்பை மறக்காதே" என்று அவருடைய பெண் தன்மை அவருக்கு இங்கிதக்குரலில் இதோபதேசம் செய்கின்றது. என்ன தர்மசங்கடமான "ஆண் பெண்" தன்மை! வீட்டுக்கும் நாட்டுக்கும் இடையே நசுக்குண்டு, கரைந்து கரைந்து உருகுகின்றார் முதலியார் அவர்கள்.

www.padippakam.com



தனித்து இயங்கும் தனிமொழி என்று பண்டிதர்கள் பலர் கூச்சலிடும் கூச்சலை பேருண்மை என்று முதலியார் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. தமிழ் பாஷை வளரவேண்டும் என்ற ஆசை, முதலியாரின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில், காலியிடம் துளிக்கூட இல்லாமல், அவர் தேகமுழுவதும் நிறைந்து நிற்கின்றது.

திசைச்சொற்களும் வழக்கச்சொற்களும் கிராமியப் பேச்சும், தமிழ்மொழியில் கலந்துகொண்டாலொழிய, தமிழுக்கு நவநாகரிகச் சிறப்பும் மதிப்பும், வன்மையும் வளர்ச்சியும் ஏற்படமாட்டா என்பது முதலியாரின் திடநம்பிக்கை. இதிலும் அவரது இயல்பான தருமசங்கட உள்ளம் அவரைப் பெரிதும் வேதனை செய்கின்றது. இந்தக் கொள்கையை கையாளுபவர்களை, முதலியார் முழுதும் ஆதரிப்பார். ஆனால், இந்த கொள்கையை முதலியார் தாமே கையாள மாட்டார்!

தமிழ்நாட்டு அரசியல் உலகில், தலைமைப் பதவி சம்பந்தமாக ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாருக்கும் ஸ்ரீமான் சீனிவாஸய்யங்காருக்கும் இடையே சிறிது “ஊடல்” இருந்தது. “சீனிவாஸய்யங்கார் நல்லவர்; ஆச்சாரியார் பெரியவர். யாரைத் தள்ளி, யாரைக் கொள்ளுகிறது” என்ற தர்மசங்கடம், முதலியாருக்கு முன்னே ஒரு காலம் பிரமாதமாய் உருஎடுத்து நின்று, அட்டஹாஸம் செய்தது. தர்ம சங்கடத்தை, இவர் சம்பந்தப்பட்ட வரையில் இவருடைய பிறவிக்கூச்சம் பெரிதும் வளர்க்கின்றது என்றே சொல்லவேண்டும்.

தூய தமிழின் இன்னிசை ஒலியைக்கேட்டு அனுபவிக்க உளங்கொண்டவர்கள், முதலியார் நடத்திவந்த “தேசபக்தன்” என்ற பத்திரிகையின் பழைய பிரதிகளைக் கண்டெடுத்துப் படிப்பார்களானால், மனப்பூரிப்பு அடைவார்கள் என்பதில் சிறிதும்

www.padippakam.com



ஐயமில்லை. தமிழிலும் ஒலியழகு, நடையழகு, பொருளழகு, வர்ணனை அழகு உண்டோ என்று சந்தேகப்படும் ஆத்மாக்கள், முதலியாரின் "முருகன்" என்ற சிறு நூலைப்படித்து மனம் தேறலாம். முதலியார் நடையழகு பயிலும் நிகண்டு. அழகுபட ஒலிக்கும் அகராதி. முதலியார் பொருள் செறிவுடன் பேசும் புலவர். பழைய தமிழ் நாகரிகத்துக்கும், புதிதாய்த் தோன்றி யிருக்கும் நவநாகரிகத்தும் இடையே நின்று ஊசலாடுபவர் முதலியார். இதிலும் தர்மசங்கடம்தான்.

முதலியார் தொழிலாளர்களின் சகோதரன், முதலாளிகளின் தோழன். இளைஞர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் இங்கித நண்பன். சலிக்காமல் பேசும் கிழவர்களுக்கு, அலுப்பின்றிக் காதுகொடுத்து கேட்கும் பக்தன். பண்டிதர்களுக்குப் பிரதிநிதி. பெண்களுக்கு நல்லுபதேசம் செய்யும் சாது.

முதலியாருக்கு நோயைப் பற்றிப் பேசுவதில் என்ன ஆசை! வாகட சாஸ்திரத்தை, இதற்கென படித்திருக்கிறாரோ, என்னவோ? என்ன சொல்லி என்ன? பழைய படிப்பிலும் பிடிப்பிலும் வளர்ந்த முதலியார், தேசீய இயக்கத்தினாலும் சாதுக்களின் சங்கத்தாலும், மணம் கமழும் மலர் என விரிந்திருக்கிறார். அவருடன் சம்பாஷணை செய்வது நல்விருந்தாகும். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டால், உள்ளம் குளிரும். "செவிக்குணவு இல்லாத பொழுது, சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும்" என்ற திருக்குறளுக்கு, இலக்கியமாய் வாழ்ந்து, விளங்குகின்றார் முதலியார்.

தர்மசங்கடம் என்பது பெரியார்களுக்குத்தான் தோன்றும் கஷ்டமான நிலைமையாகும். சாதாரண மனிதன், காளிக்கு பூசை போடுகிறான். வாளை எடுக்கிறான். ஆட்டை பலியிடுகிறான். அவனுக்கு, தான் செய்கிறதில் சந்தேகமே எழுவதில்லை. காளி பூசை ஒன்றுதான், அவன் கண்ணில் படுகிறது. காளி பூசை தனது கடமை என்று எளிதிலே முடித்துக் கொள்ளுகிறான்.

www.padippakam.com



ஆனால் இரக்கமும் யோசனையும் உள்ள ஒருவன், காளி பூசையை கடமையாகக் கொள்ளுவானா? இப்பொழுதுதான், உண்மையான தர்மசங்கட நிலைமை ஏற்படுகிறது. முதலியார், பரம்பரையின் வலுவை அறிவார்; நவீனத்தின் தேவையையும் உணர்கிறார். இவை இரண்டுக்குள்ளும் போர் நிகழ்கின்றது. ஒன்றைத்தள்ளி, ஒன்றைக்கொண்டால், காரியத்துக்குத் தூண்டுதலான உணர்ச்சியும் ஊக்கமும் ஏற்படும். இரண்டையும்பற்றி, ஓயாமல் சிந்தனை செய்து கொண்டே இருந்தால், எதையும் செய்து முடிக்க முடியாது. மிகச் சிறந்த தேசபக்தரான முதலியார், காரிய உலகில், சோபை இல்லாமல் இருப்பதற்கு, அதுதான் காரணம்.

என்றாலும் நெருக்கடி வந்தால், முதலியார் எதையும் விட்டுக் கொடுப்பதில்லை. முதலியாருக்கு ஜாதி பேதம் பிடிப்பதே இல்லை. என்றாலும் மனக்கசப்பு என்ற நோயை, அவரிடம் துளிக்கூட காணமுடியாது. சமரசம்தான் அவரது குறி. அதற்காக, அவர் கொள்கையை விட்டுவிட மாட்டார்.

முதலியார் பெரும்புலவர். பண்டைத்தமிழ் நூல்களிலும் ஆராய்ச்சித் துறையிலும் அவர் மிகத் தேர்ந்தவர். எனவே, தமிழ் மொழியின் போக்கைப் பற்றி, அழுத்தமாகப் பேசக்கூடிய உரிமை கொண்டவர்.

சிறிது காலத்துக்கு முன்னர், மைலாப்பூரில் 'பாரதி நிலையம்' என்ற ஸ்தாபனத் திறப்புவிழாவில் முதலியார் தலைமை வகிக்கும் பொழுது, 'நக்கீரர் சகாப்தம், இளங்கோவின் சகாப்தம், கம்பரின் சகாப்தம் என்று சொல்லுவதைப்போல, தற்போது நடக்கும் காலத்தை தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில் பாரதி சகாப்தம் என்று அழைக்கவேண்டும் என்று ஆணித்தரமாகச் சொல்லி பிருக்கிறார்.

3

www.padippakam.com



நவீன உலகத்துக்குத் தேவையான புரட்சி மாறுதல்களை, தமிழ் இலக்கியத்திலும் தமிழர்களின் இதயத்திலும் செய்தவர் பாரதியார் என்று முதலியார் சொல்லும்பொழுது, அதை கேட்க எவ்வளவு பிரம்மானந்தமாயிருக்கிறது! தாம் சிறந்த பண்டிதர் என்பதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, முதலியார் பாரதியாரைப் போற்றுவதுதான் முறையாகும். பாரதியாரின் பாடல்களில் இலக்கணவழு இருக்கிறது என்று சொன்ன தமிழ்ப் பண்டிதர்களுக்கு, தக்க சூடு கொடுத்திருக்கும் முதலியாரை வாழ்த்தாமல் இருக்க முடியுமா?

இந்த மாதிரி சாதுத்தனமான காரியங்களை செய்துகொண்டு, சாது முதலியார் நீண்டகாலம் ஆயுளோடு இருக்கவேண்டும் என்று தமிழர்கள் ஆசைப்படுவது இயற்கை தானே?

படிப்பகம்

www.padippakam.com

# 4. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

வங்காளத்தில் பிறந்த "வந்தேமாதரம்" கரைமார்க்க மாய்த் தமிழ் நாட்டுக்கு வந்ததோ அல்லது கடல் மார்க்கமாய் வந்ததோ என்பது சந்தேகம். கடல் மார்க்கமாய்த்தான் வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தூத்துக்குடியில் மட்டும் இவ்வளவு வந்தேமாதரக் கூக்குரல் ஏன்? ஸ்ரீமான்கள் சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவமும் சிறைக்குச் சென்றார்கள். சுப்ரமணிய பாரதியார் புதுச்சேரிக்குப் போய்விட்டார். சுதேசமித்திரன் ஆசிரியர் சுப்பிரமணிய அய்யர் சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். திருநெல்வேலி சதிக் கூட்டத்தார், சிறைக்குள் தள்ளப்பட்டனர். இத்தனை "வைபவங்களுக் கிடையே" தமிழர்களின் நாடி எப்படி அடித்துக் கொண்டிருக்கும்? சொல்லுங்கள், பார்ப்போம்.

சூரத்து காங்கிரஸ் 1907-ல் உடைந்துபோய், மிதவாதிகள் அனைவரும் சர்க்காரோடு ஒத்துழைக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட பின்னர், சர்க்கார் உள்ளம் குளிர்ந்தது. அவர்கள் முகம் "பிரசன்னவதன" மாயிற்று. உற்சாகத்தை அளவிட முடியாது. அந்தக் காலத்துக்குச் சிறிது பின்னர், சென்னையிலே, பெண்ட்லண்டு பிரபு என்று ஒரு கவர்னர் இருந்தார். நமது நாட்டுக்கு வந்த கவர்னர்களில் அவர் "ரொம்ப மோசமானவர்". தனக்கென்று யோசிக்கும் உரிமையைக்கூட வைத்துக் கொள்ளாத உத்தம தியாக புருஷன்! அவர், "நாள் நட்சத்திர, லக்கினம்" பார்த்து, மலையுச்சியின் குளிர்ச்சி வாடையினிடையே ஊட்டியில் (உதகமண்டலத்தில்) ஒரு சமயம் திருவாய் மலர்ந்தருளினார்.

"தொண்டு செய்யும் அடிமை, உனக்கு சுதந்திர நினைவோடா, பண்டு கண்டதுண்டோ, அதற்குப் பாத்திரமாவாயோ" என்ற கருத்தை, வசனத்தில் வெளியே விட்டார். சுயராஜ்ய நினைப்புக் கொண்டவர்களுக்கு காயமான இருப்பிடம் சிறை என

www.padippakam.com



கர்ஜித்தார் பிரபு. அதிகார வர்க்கத்தினர் கொக்கரித்தனர். தமிழர்களோ வாடின கீரைத் தண்டைப்போலத் துவண்டுபோய் விட்டனர். ஜனத்தொகைக் கணக்கிலே சுமார் மூன்று கோடி தமிழர்கள்! ஆனால் கவர்னர் துரை அவர்களுக்கு, தலை நிமிர்ந்து ஜவாப்பு சொல்ல - ஒரே ஒரு வரதராஜுலு நாயுடு. இத்தகைய பொறுப்பும் பாக்கியமும் நிறைந்த பதவி, ஸ்ரீமான் நாயுடு அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்டதற்குக் காரணம் அவரது சொந்த சக்தியா அல்லது சந்தர்ப்பமா? இரண்டும் என்பேன் நான்.

அரண்மனைக்கு எதிர்மனை இருக்க முடியுமா என்று உறுமிய பெண்ட்லண்டு பிரபுவுக்கு, முடியும் என்று அனாயஸமாய், பதில் சொன்ன நாயுடு அவர்கள் நொடிப்பொழுதில், தமிழர்களின் உள்ளத்தில் வேரூன்றிப் போனார். எதிர்பாராத எழுச்சியால், தமிழர்களை குதூகலத்துடன் திடுக்கிடச் செய்யவும், அதிகார வர்க்கத்தினரை வேறுவகையில் திடுக்கிடச் செய்யவும் கூடிய சக்தி நாயுடு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? பரம்பரைச் செல்வாக்கா? இல்லை. பள்ளிக்கூடப் பயிற்சியா? பள்ளிகளில் தேசாபிமானப் பயிற்சி கூடவா? இல்லை. அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுமென்று தமிழர்களுக்குப் பொதுவாக இருந்த ஆவலா? இல்லை. சுயராஜ்ய நினைப்பே, உடம்புக்கும் வாழ்வுக்கும் ஒத்துக்கொள்ளாது என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாகவே முடிவு செய்து, முடிப்புக்கட்டிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு, அந்த ஆவலைப் பற்றிப் பேசவேண்டாம் என்கிறீர்கள். சரி, எதிர்வாதம் செய்யாமல் ஒப்புக்கொண்டேன். பின்னே, நாயுடுவின் "சிறு பிள்ளை"த் துணிவுக்கு பக்கத்துணை யாது? நாயுடுவின் துணிவுக்கு நாயுடுதான் துணை.

"சிதம்பரம் போகாமல் இருப்பேனா, இந்த ஜன்மத்தை வீணாகக் கழிப்பேனோ" என்று அன்று நந்தனார் கூறியதாகச் சொல்லுவதுண்டு. அது மெய்யோ, பொய்யோ, எனக்குத் தெரியாது. ஆனால் நாயுடு அவர்கள் பிரசங்க மேடைக்கு பெருமையும் பலமும் அளிக்கத் துவக்கின காலத்தை என்ன வென்று சொல்லுவது?

www.padippakam.com



ஒரு சமயம் வீட்டில் படித்துக்கொண்டிருந்தேன். ஒரு நண்பர் திடீரென்று தோன்றினார். வந்ததும் வராததுமாக, நாயுடு பிரசங்கம் நீர் கேட்டிருக்கிறீரா என்றார். தமிழ்நாட்டில் ஒரே ஒரு நாயுடு மட்டும் இருப்பதாக அவர் பேசியது எனக்கு விசித்திரமாயிருந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டு, இல்லை என்றேன். தமது இரண்டு கைகளையும் ஏககாலத்தில் பலவித ரகங்களாகச் சொடுக்கிக்கொண்டு, "ச்சூச்சூ" என்று நாயைக் கூப்பிடுவதுபோல, உதடுகளினால் மிகுதியும் சுவைத்துக்கொண்டு, சத்தம் செய்தார். தேள் கொட்டிவிட்டதா என்று சொல்லிச் சிரித்தேன். உம்முடைய ஜன்மம் வீண் என்றார். அந்த நண்பர் காண்பித்த மனோபாவம் தான், பொதுவாக தமிழ்நாட்டில் அக்காலத்தில் இருந்து வந்தது.

நாயுடு அவர்களின் பிரசங்க விளம்பரம்! நண்பர் என்னை விடவில்லை. நானும் கூட்டத்துக்குப் போனேன் *சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் அரண்மனைக்கு எதிர்மனையை வெகு அழகுடனும் துணிவுடனும் நாடெங்கும் கட்டிக்கொண்டு வரும் ஆசாமியை, நான் அதற்கு முன்பார்த்ததேயில்லை. பார்க்க ரொம்ப ஆசை; ஆனால் ஆளைக் காணவில்லை.

ஸிலோன் போட்மெயிலுக்கு ஆத்திரத்துடன், ஒரு மணி நேரம் சலிக்காமல் காத்துக்கொண்டிருக்கும் கிராமவாசி இனத்தைச் சேர்ந்த எனது நண்பர், வெற்றி முகத்துடன், என்னை நோக்கிக்கொண்டேயிருந்தார். திடீரென்று புளியம்பழம் உடைக்கிறமாதிரி, கலகலவென்று ஒரே காலத்தில் கூட்டத்தில் கைகளின் சத்தம் கேட்டது. நாயுடு அவர்களின் பிரவேசத்துக்கு அடையாளம்! நிமிர்ந்து பார்த்தேன். சிறிய உருவம்! எனது நண்பரை கேலி செய்வது போல, தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். பதட்டம் வேண்டாம் என்று சொல்லுவதைப் போல, அவர் என்னைப்

---

* இன்றைக்குச் சுமார் எண்பதாண்டுகளுக்கு முன்

www.padippakam.com



பார்த்தார். ஆனால், அவருடைய பிராணனெல்லாம், மேடையின் பேரில் வீற்றிருந்த வரதராஜுலு நாயுடு அவர்களின்பேரில் இருந்தது. அன்றைய தலைவரின் முகவுரைக்குப் பின்னர், நாயுடு அவர்கள் எழுந்து நின்று பேசத்துவக்கினார்.

குரலைக் கேட்டேன். எனது நரம்புகள் கடகடவென்று ஆட ஆரம்பித்து விட்டன. "ஒரு கோடிக்கு ஒரு கோடி" பரவி யிருந்த கூட்டம், ஊசி விழுந்தால் கேட்கும்படியான அமைதியுடனிருந்தது. நாயுடு அவர்கள் தமது குரலை உயர்த்த வேண்டிய தேவையே ஏற்படவில்லை. அவருடைய இனிமையான குரலில் எவருமே, ஈடுபடாமலிருக்க முடியவில்லை. "மூர்த்தி சிறியதாயினும், கீர்த்தி பெரிது".

வெடுக்கு வெடுக்கு என்று பேசும் குழந்தையினிடம் யாருக்குத்தான் அபிமானம் இராது? பெரிய பெரிய மனிதர்களையும் உத்தியோகஸ்தர்களையும், நாஸூக்காகவும் நாகரிகமாகவும் தைரியத்துடனும் 'மண்டகப்படி' செய்யும் பிரசங்கியை, அதுவரையிலும், தமிழ்நாடு பார்த்ததில்லை, தங்களுடைய உள்ளங்களில் பொங்கிக்கொண்டு கிடந்த உணர்ச்சியை, உருவப்படுத்தி நயமான சொற்களில், இங்கிதமான ஜாடையுடன், சங்கீதக்குரலில் சொல்லும் ஆற்றலுடைய நாயுடு அவர்களை, தமிழர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றதில், வியப்பு ஒன்றுமே யில்லை. காலத்துக்கேற்ற மனிதன் என்று கொண்டாடினார்கள். இது நியாயம்.

தமிழ்ப் பண்டிதர்கள் தமிழ் பாஷையை ஒரு குழூஉக்குறியாக செய்துவிட்டார்கள். அதாவது நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர்களுக்கு விளங்காத பாஷையில் பேசியும் எழுதியும், தமிழை "குட்டிச்சுவராய்" அடித்துவிட்டார்கள். பண்டிதர்களால் தமிழுக்கு நேர்ந்த அவமதிப்பு ஒருபுற மிருக்க, ஆங்கிலம் படித்த தமிழர்கள், தமிழைப் பேசாமலே, அதை அவமதிக்கத் தலைப்பட்டனர். இந்த இரண்டு, அவலக் கூட்டத்தினிடையே அகப்பட்டுக்கொண்டு, தமிழ்

www.padippakam.com



தவித்துக்கொண்டிருந்தது. பண்டிதர்கள் கூடினால், விளங்காத தமிழ்! இங்கிலீஷ் படித்த தமிழர்கள் கூடினால், விளங்காத இங்கிலீஷ்! இந்த கட்டுப் பாடான குறும்புத் தனத்தைத் "தவிடுபொடி" யாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் ஸ்ரீமான் வரதராஜூலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு என்பதை நிலை நாட்டிய புண்ணியத்தை, எவரும் நாயுடு அவர்களுடன் பங்கு போட்டுக்கொள்ள முடியாது.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த பிறகு, அது என்ன பிரமாத வித்தை என்று பலர் பேசினார்கள். ஆனால் கொலம்பஸுக்கு முன் அமெரிக்காவை யாரும் காணவில்லை என்பத தொன்றே, அவர்களுடைய வாயை அடைக்க போதுமான ஆதாரமாகும். எல்லோரும் அறியக் கூடிய எளிய தமிழில், பெரிய விஷயங்களை, சிக்கலான சங்கதிகளை, பலவிதமாகப் பேச முடியம் என்பதை நாயுடு அவர்கள் விளக்கமாகக் காண்பித்துக் கொடுத்தார். நாயுடு அவர்களின் தாய் பாஷை தெலுங்கு என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும். நாயுடு அவர்களின் இந்த ஒப்பற்ற தொண்டே, அவர் ஜன்மம் எடுத்ததற்கு போதுமானது.

அனேகமாய் சம வயதுள்ள மூன்று ராஜீயவாதிகள், மூன்று வகைகளில், தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொண்டுவந்தார்கள். மூன்று பேர்களும் பழுத்த ராஜதந்திரிகள். 1. ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு 2. ஸ்ரீ ஜ்யார்ஜ் ஜோஸப் 3. ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார். மூன்று பேர்களும் மூன்று "திரிகடுகங்கள்!" செட்டியார் அவர்கள் வெற்றிக்கு, சுகத்துக்கு, தற்காலிகப் பெருமைக்கு தொண்டனாக தம்மை அமைத்துக்கொண்டுவிட்டார். பாரிஸ்டர் ஜோஸப், மனச்சாட்சிக்கும் மன சஞ்சலத்துக்கும் மதத்திற்கும் பக்தனாக, தம்மை ஆட்படுத்திக்கொண்டு "ஆற்றில் கரையறியாமல்" அலைந்தார். ஸ்ரீமான் நாயுடு அவர்களோ, தூய தேசாபிமானம் ஒரு புறம்

www.padippakam.com



பிடித்து இழுக்க, சாமர்த்திய ராஜதந்திரம் மற்றொரு பக்கம் பிடித்திழுக்க, இரண்டுக்குமிடையே, மன அமைதியின்றி, ஊசலாடுகின்றார். உலகமே ஒரு நடன அரங்கம், நாடகமேடை என்கிறார் இங்கிலீஷ் கவி ஷேக்ஸ்பியர். உண்மை. இதிலே, தன்னை மறந்து, "ஆக்ட்" செய்யும் உத்தமனுக்கு முதல் பரிசு என்பதும் பொய்யா!

நாயுடு அவர்களுக்கு, எதிலும் சந்தேகம் ஏற்படுவதில்லை. அதாவது சந்தேகத்தைக் கொடுக்கக் கூடிய கருத்தோ, கற்பனையோ, கர்மமோ, அவருடைய அறிவிலே தோன்றுவதே இல்லை. அவருக்குத் தெரிந்த சங்கதிகள் ஆணித்தரமானவை; தெரியாத விஷயங்கள், அவருக்குத் தேவையில்லை. இதுவே, அவரது வாழ்க்கை தத்துவத்தின் சாரம் என்பது எனது கருத்து. ஒரு எல்லைவரையிலும், அவர் காண்பிக்கும் துணிவையும் அபிமானத்தையும் போல, வேறு எவராலும் காண்பிக்க முடியாது. இதுவே, அவருடைய பலத்துக்கும் பலவீனத்துக்கும் அஸ்திவாரமாகும். அடிமை நாடு, கண்விழித்து விடுதலை பெறும் காலையில், தியாகம் நிறைந்தும் தந்திரம் குறைந்தும் இருக்க வேண்டும் என்பது காந்தியின் உபதேசம். இதை நாயுடு அவர்கள், முற்றிலும் ஏற்பதில்லை; முற்றிலும் தள்ளிவிடுவதுமில்லை.

தன் வழி போவதில், நாயுடு அவர்களுக்கு எவரும் ஈடாக மாட்டார்கள். இந்த நெஞ்சழுத்தத்தை கொடுத்தது எது? அவருக்கு, எளிதிலே, விரைவிலே கிடைத்த வெற்றிதான் அது. மேலும், இதற்கு வேறு காரணமும் உண்டு. பண்டைக் காலத்தில், புலவர் பொறாமை என்பது பெயர்போன சங்கதியாகும். இந்தக் காலத்தில் தலைவர் பொறாமை தலைதூக்கி ஆடுவதைப் போல், வேறு எந்த அவலட்சணமும் என் கண்களில் பெரிதாகப்படவில்லை. நாயுடு அவர்களிடம் சிலருக்கு ஏற்பட்ட பொறாமையினாலே, நாயுடு அவர்கள் அநியர்யமாய், அனாவசியமாய், தனிவழி சூலிக்கொண்டு, தத்தளித்து வருகின்றார்.

www.padippakam.com



நமது தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்குள் நாயுடு அவர்கள் வயதில் சிறியார். எனவே, நாட்டுப்பணி சம்பந்தப்பட்ட வரையிலும், அவர் செய்ததுபோக, இன்னும் அதிகமாகச் செய்வதற்குத் தேவையான ஆயுள் அவருக்கு உண்டு. அடிமைத்தனத்தை வெகுண்டு, அதிகாரவர்க்கத்தினருக்குச் சிறிதும் அஞ்சாமல், "விர்" என்று அரசியல் உலகில் தோன்றிய நாயுடு அவர்களுக்குத் தமிழ்நாடு என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது. அடிமைகளுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் இடையே நின்று பஞ்சாயத்து வேலை பார்த்துவரும் நாயுடு அவர்கள், தமது இயற்கையான வல்லமையையும் வேலையையும் மறந்துபோனார் போலும்! விடுதலைக்காக, தமிழர்களைத் தட்டி யெழுப்பிய வீரன், தமது இயல்பை மறந்து விடுவாரா? நாம்தான் அவசரப் படுகிறோமோ, என்னமோ?

கீர்த்தி வாய்ந்த தலைவர்களுக்கு, பொது ஜனங்கள் செல்லப் பெயர் கொடுப்பதுண்டு. இந்த செல்லப் பெயர்தான், பொது ஜனங்களுக்கு ஒரு தலைவரிடம் இருக்கும் அன்புக்கும் பக்திக்கும் அடையாளமாகும். ஆங்கில நாட்டில் ஜோஸப் சேம்பர்லேன் என்ற அரிய தலைவரை, ஜனங்கள் "ஜோ" என்று அருமையாக அழைப்பார்கள். ராம்ஸே மாக்டொனால்டை அவர்கள் "மாக்" என்பார்கள். அதுபோலவே, நாயுடு அவர்களுக்கும் ஒரு செல்லப்பெயர். அவருக்கு "துப்பாக்கி நாயுடு" என்று பெயர். நாயுடு அவர்கள் தமது ஆள்காட்டி விரலை மட்டும் நீட்டிப் பிரசங்கம் செய்யும் வழக்கமே, இந்த பட்டப் பெயருக்கு காரணமாகும். பெரிய பெரிய கூட்டங்களினிடையே, அவரது சிறிய ஆட்காட்டி விரல் அதிகாரம் செய்வதை, நேரில் கண்டவர்கள்தான் அனுபவிக்க முடியும்.

நாயுடு அவர்கள் வாய்ச்சொல் ஒத்துழையா தாருமல்ல, வைதிக ஒத்துழையாதாருமல்ல; அவர் அனுபவ ஒத்துழையாதார். பர்டோலித் தீர்மானத்துக்குப் பின்னர், காந்தி சிறைசென்ற சமயத்தில் மகாத்மா விடுதலையாகும் வரையில் எவ்வித வரியும்

www.padippakam.com



சர்க்காருக்குக் கொடுப்பதில்லை என்று நாயுடு அவர்கள் தீர்மானம் செய்து கொண்டார். மோட்டார் கார் ஏலத்திலே போய்விட்டது. போதாத துகைக்கு, வீட்டிலே ஜப்திக்கு வந்து, வேண்டிய ரொக்கத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு போனது சரித்திரமாகும்.

ஸ்ரீமான் நாயுடு அவர்கள், தமது மத்தியஸ்த நிலைமையை விட்டுவிட்டு, தமக்குப் பல ஆண்டுகளாகக் கிடைத்திருக்கும் அனுபவத்தை யொட்டி, கட்சிப் பிரதிகட்சி யில்லாமல், தமிழர்களில் பெரும்பாலரை ஒன்று படுத்தி, தமிழர்களுக்கு விடுதலை வெற்றியைக் கொண்டுவர வேண்டும் என்பது எனது ஆசை. இதை அவருக்கு நினைவூட்ட வேண்டுமென்ற பொறுப்பு, அவரது ஆதிகால நண்பனான என்னைச் சேர்ந்தது.

பாகிஸ்தான் என்ற பிரச்னை தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே, நாயுடு இந்திய முஸ்லிம்களின் தேசபக்தியில், நம்பிக்கையை இழந்து கொண்டே வந்தார். கோஹட் கலவரத்துக்குப் பின்னர், காந்தியும், அலி சகோதரர்களும் மன வேறுபாடு அடைய நேர்ந்தது. காலிபாவுக்காகத்தான், முஸ்லிம்கள் கத்தியை எடுப்பார்களே அல்லாமல், தாய் நாடாகிய ஹிந்துஸ்தானத்தைக் காக்க முன்வரமாட்டார்கள் என்றதை, இந்த காந்தி ஏற்கனவே தெரிந்துகொண்டிருந்தாலென்ன என்று நாயுடு அவர்கள் ஆத்திரத்தோடு கேட்பார்.

ஜின்னாவும் பாகிஸ்தானும் வானத்தில் தோன்றிய பின்னர், ஜின்னாவுக்கு அமெரி பரிவு காண்பித்த பின்னர், ஹிந்துக்களைவிட்டு பிரிந்து வாழ்தல்தான் முறை என்று முஸ்லிம் தலைவர்கள் பல்லவி பாடிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டு, நாயுடு சும்மா இருக்க முடியுமா?

நாயுடு அவர்கள் ஹிந்து மகாசபையைச் சேர்ந்தது ஆச்சரியமில்லை. அகண்ட ஹிந்துஸ்தானத்தில் அவருக்கு நம்பிக்கை இருப்பதிலும் ஆச்சரியமில்லை. முஸ்லிம்களோடு எவ்வித

www.padippakam.com



சமரசப் பேச்சும் கூடாது என்று அவர் சொல்லுவதிலும் அணுவளவும் ஆச்சரியப்படத் தேவையில்லை. நாயுடு, அஹிம்சையை ஒப்புக் கொள்ளாததிலும் ஆச்சரியம் எதுவுமில்லை.

நவீன மனிதனுடைய மனப்பான்மை நாயுடுவுக்குக் கிடையாது. தானும் சகோதர ஹிந்துக்களும் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் ஹிந்துஸ்தானத்தை ஆளுவதற்கு, ஹிந்துக்களைத் தவிர, வேறு எவருக்கும் பாத்தியம் கிடையாது என்பது நாயுடுவின் பிடிவாதமான எண்ணம்.

இவர் நினைக்கும் முறையில், இந்தியா விடுதலை அடையப் போகிறதா, இல்லையா என்பதைப் பற்றி, யாரும் எதையும் திட்டமாகச் சொல்லமுடியாது. ஆனால் ஹிந்துக்கள், பிற்போக்காளர்களாக இருக்கும் முஸ்லிம்களிடம் ஆத்திரம்கொண்டு வருகிறார்கள் என்பதற்கு நாயுடு அவர்கள் "நடக்கும் அத்தாட்சியாகும்". தனது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள, எதை வேண்டுமானாலும் இழக்க, நாயுடு தயார்.

ஆணிவேர் உணர்ச்சியான சுயமரியாதை இல்லாத நபர்கள் உயர்ந்த தத்துவத்தைப் பேசினால், நாயுடு விழுந்து விழுந்து சிரிப்பார். முதுகு எலும்பு இல்லாத பேர்வழிகள் மூட்டையைச் சுமக்க எண்ணினால், அது பலிக்கக் கூடியதா? இதை நினைத்துத்தான், நகைச்சுவையுள்ள நாயுடு சிரிக்கிறார். இதிலும் எதுவும் ஆச்சரியமில்லை.

www.padippakam.com

# 5. டாக்டர் டீ.எஸ்.எஸ். ராஜன்

மதன்லால் திங்ரா என்ற பஞ்சாபி இளைஞன் எஞ்சினீயர் பரீட்சைக்காகப் படிப்பதற்கு, இங்கிலாந்துக்கு சென்றிருந்தான். அவனுக்கு இந்தியாவின் அடிமை நிலை, கொஞ்சங்கூட இனிக்கவில்லை. இந்திய மந்திரியின் சபையில், இரகஸியமாய், அளவற்ற செல்வாக்குடன் விளங்கின ஸர் கர்ஸன் வைலி என்பவர் பெருத்த சூதுகாரர் என்று தீர்மானங்கொண்டு, மதன்லால் திங்ரா, அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். அவனை இங்கிலீஷ் போலீசார் லண்டன் நகரில் கைது செய்தார்கள்.

மதன்லால் திங்ராவின் செயலை தீவிர தேசபக்தரும் தலைவருமான விபின் சந்திர பாலரும் கண்டித்தார். (அப்பொழுது அவர் லண்டனில் இருக்கிறார் வருஷம் 1909) மதன்லாலோடு கூட வசித்தவர் டாக்டர் ராஜன். தன்னைத் தூக்கில்போட்டு விடுவார்கள் என்று திங்ராவுக்குத் தெரியும். சாகுமுன், மதன்லால், ராஜனைப் பார்க்க விரும்பினான். ராஜன் மதன்லாலை, சிறையில் பேட்டி கண்டார். இந்தியாவில் இந்தக் கொலை நடந்திருப்பின், ராஜன் அவர்கள் பேரிலும் உடந்தைக் குற்றம் சாட்டப்பெற்று, அவர் உயிர் துறந்திருக்கவேண்டும். ஆனால் இங்கிலாந்து சுதந்திர நாடு. லண்டன் போலீசாருக்கு, குற்றவாளியை மட்டும் கண்டுபிடிக்கும் சாமர்த்தியமும் பொறுப்பும்தான் உண்டு. இதனாலேதான், ராஜனைப்பற்றி இப்பொழுது எழுதக்கூடிய பாக்கியம் எனக்கு ஏற்பட்டது.

யாரோ ஒரு இந்தியன், ஏனைய இந்தியர்களைக் கலக்காமல் ஒரு கொலை செய்துவிட்டால், அதற்காக, மற்றைய எல்லோரும் பழியை ஏற்றுக்கொண்டு, பயப்பட வேண்டும் என்பதுண்டா? சுதந்திரமுள்ள நாடுகளிலே, இத்தகைய கேவலமான அச்சத்தைக் காணமுடியாது. இந்த அச்சச் சூழலில் அகப்பட்டுக்

www.padippakam.com



கொள்ளாமல், ராஜன் எவ்வாறு மதன்லாலை சிறையில் பேட்டி கண்டார்? இது உங்களுக்கு அதிசயமாகத் தோன்றுகிறதா? ராஜன் ஆண் மகனாக இருந்தமையால்தான், பேட்டி காண துணிவு ஏற்பட்டது. வேறு எந்தக் காரணமும் சொல்லமுடியாது. நெருக்கடியில், தனது இயற்கைத் துணிவைக் காண்பிப்பவன்தான் வீரன்.

ராஜன் தஞ்சாவூர் ஜில்லா, தில்லை ஸ்தானத்தைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் சேஷய்யங்கார் காலமாகிவிட்டார். ராஜனுக்கு, சௌந்திர ராஜன் என்பது முழுப்பெயர். ராஜன் குடும்பத்தார், அவரது சிறுபிராயத்தில் சீரங்கத்தில் வசித்துவந்தார்கள். ராஜனுடைய பால்யப் படிப்பு என்னவென்று நினைக்கிறீர்கள்? கழுதை சவாரி என்றால், நம்பமாட்டீர்களோ?

சீரங்கநாதன் கோயில் மதில்களை அண்டி ஒண்டி படுத்துக்கொண்டு, அல்லது நின்றுகொண்டு இருக்கும் கழுதைகள் சுக்லபட்ச இராக்காலத்தில் (நிலவு இருக்கும் நாட்களில்) பட்டபாட்டைச் சொல்லி முடியாது என்று ராஜன் கதையாக வர்ணிப்பதை, நீங்கள் நேரிலே கேட்டு, ஆனந்தம் அனுபவிக்க வேண்டும். சீரங்கத்திலே பிடித்த சவாரி, திருச்சிக் கோட்டையிலே (சுமார் நான்கு மைல் தூரம்) தான் போய் நிற்குமாம். அவ்வளவு ஜீவதாதுவும் உடல் உற்சாகமும் நிறைந்தவர் ராஜன்.

கழுதை சவாரி செய்த இன்னொருவர் எனக்கு நினைவு வருகிறது. சார்லெஸ் பெரிஸ்போர்டு பிரபு என்ற கடற்படைத் தலைவர், இங்கிலாந்திலே இருந்தார். அவருடைய இளம்பிராயத்திலே, அவரோடு ஒருவர் போட்டி போட்டார். லண்டன் வீதிகள் சிலவற்றில், பலர் அறிய, பெரிஸ்போர்டு கழுதை சவாரி செய்தால், ஒரு பவுன் பந்தயமென்றார் நண்பர். பெரிஸ்போர்டு பந்தயத்தை ஏற்று, அதில் ஜயித்து, பவுனைப் பெற்றதுமல்லாமல், ஆங்கில சாம்ராஜ்யத்தின் கடற்படைகளுக்கும் தலைவரானார். விளையும் பயிர் முளையிலே.

www.padippakam.com



பொய் கௌரவம் பாராட்டாதவர்கள், இறுதியில் உண்மையான கௌரவத்தை அடைகிறார்கள். இதற்கு ராஜன் சிறந்த அத்தாட்சி. பார்வைக்கு, ராஜன் கரடுமுரடு தட்டிய கிராமத்தான் போலக் காணப்படுவார் என்பது உண்மை. அவர் பெருத்த பிடிவாதக்காரர். தாம் எடுத்துக்கொண்ட வேலையைப் பற்றி, உலகமே ஏளனம் செய்தாலும், அதை அவர் ஒரு சிறிதும் பொருள்படுத்த மாட்டார். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சொல்லுபவர் ராஜன் என்று எவரும் தவறாக எண்ணவேண்டாம். பிறர் ஏளனத்துக்குள் அகப்பட்டுக் கொண்டு, மனம் கசிந்தும் உடைந்தும் போகாமல், தனது கடமை என்று தோன்றியதை, தளராமல் செய்யும் ஆற்றல் கொண்டவர் ராஜன்.

1905-ஆம் ஆண்டில் ராஜன் எல்.எம்.பி. வைத்தியப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினார். சர்க்காரின் உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்தவர். மூன்று வருஷங்களுக்கேனும் சர்க்காரில் ஊழியம் செய்ய கடமைப் பட்டவர். எனவே, பர்மாவிலே, சர்க்கார் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, அங்கு சென்றார். உலகத்தை மதிக்காமல் கழுதை சவாரி செய்த ராஜனுக்கு, சர்க்காருக்குக் கீழ்ப்படிந்து, உத்தியோகம் பார்க்கமுடியுமா?

பர்மாவிலே, ஒரு வெள்ளைக்கார டாக்டருக்குக் கீழ், ராஜன் வேலைபார்க்க நேர்ந்தது. பெரிய டாக்டரின் வேலைத்திறமையில், ராஜனுக்கு ரொம்ப அவமதிப்பு. பெரிய டாக்டர் ஆஸ்பத்திரி நோயாளி ஒருவருக்கு இன்புளுவன்ஸா காய்ச்சல் என்று எண்ணி, அதற்கான மருந்தும் ஆகாரமும் கொடுக்க வேண்டும் என்று எழுதிவிட்டுப் போனால், ராஜன் அதை அடித்துவிட்டு, மலேரியா சுரத்துக்கு வைத்தியம் செய்ய வேண்டும் என்று எழுதிவைப்பார். ராஜன் இப்படி வேலை பார்த்தால், பெரிய டாக்டருக்கு பிடிக்குமா? ராஜன் வேலையை ராஜினாமா கொடுத்தார், சிறிது காலத்திற்குப் பின்னர். சர்க்கார் உபகாரச் சம்பளப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே? அதற்குப் பணம் கிடைத்ததுதான் ஆச்சரியம் என்று

www.padippakam.com



ராஜன் சொல்லும்பொழுது, தரித்திரத்தின் கொடுமையை எவ்வளவு லேசாகவும் நயமாகவும் சொல்ல முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தரித்திரத்துக்கும் சுதந்திர தாகத்துக்கும் எப்பொழுதுமே முரண். எப்பொழுதுமே பகை. தரித்திரனுக்குச் சொந்தக்கருத்தும் சுயேச்சை வாழ்வும் இருக்கமுடியுமா? எனவே, தமது வறுமையைக் கொல்ல, ராஜன் வழிதேடத் தலைப்பட்டார். அதற்கு சீமைப்பட்டமும், வெள்ளைக்கார வைத்திய முறையில் உயர்ந்த பயிற்சியும் வேண்டுமென முடிவுகொண்டு, 1908ஆம் ஆண்டில், லண்டனுக்கு சென்றார். அங்கு அவர் பெற்ற பரிசுகளும் நற்சாட்சிப் பத்திரங்களும் பல.

மீண்டும் பர்மாவுக்குத் திரும்பிவந்து, (1910ம் ஆண்டு) 1914ம் வருஷம் வரையில் அங்கு இருந்தார். அவரது மனைவி இறந்துபோகவே, அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்து, சீரங்கத்தில் வைத்தியத்தொழிலை ஆரம்பித்தார். இந்தியா முழுவதும் பெயர்பெற்ற ஸர்ஜன்களில், ராஜன் ஒருவர். எனவே, அவரது தொழில் அபிவிருத்தி யடைந்ததைப்பற்றி, தனியாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நாவல் ஆசிரியர்கள் சொல்வது போல, அது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

சீமையிலிருந்து வந்த வெகு காலம்வரைக்கும், போலீசார், ராஜனிடமிருந்து, தங்கள் கண் பார்வையை மட்டும் எடுத்துக் கொண்டதேயில்லை. அவர் செய்த பாக்கியம்!

எவ்வளவு வருமானம் வந்தாலும், ராஜன் அவர்களால் நாட்டை மறக்கமுடியுமா? ஒத்துழையாமைக் காலத்துக்கு முன்னும், அதைத் தொடர்ந்து அதன் பின்னும், ராஜன் அரசியலில் கலந்து கொண்ட வகை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகத்தில், ராமசாமி நாய்க்கரும் ராஜனும் காரியதரிசிகளாக அமர்ந்திருந்த காலங்களில், அவர்கள் செய்த அபார வேலையை, இப்பொழுது எடை போட்டு, நிறுத்துச் சொல்ல முடியாது.

www.padippakam.com



அக்காலத்தில், ஊருக்கு ஒரு காங்கிரஸ் சபை ஏற்பட்டு, தீவிரமாக வேலை செய்தது என்று சொன்னால், அது போதாதா? வேறு என்ன சொல்ல வேண்டும்? அக்காலத்தில் தலைவர்களுக்குள் இருந்த மன ஒற்றுமையும் லட்சிய ஒற்றுமையும் நிலைத்து இருக்கலாகாதா?

ஒருவன், தான் செய்துவந்த தொழிலை நிறுத்தினால் போதும், அவன் தொலைந்துபோவான். மூன்று தரம் தமது தொழிலை நிறுத்தி, மூன்றுதரம் அதைத் துவக்கியிருக்கிறார் ராஜன். ஒவ்வொரு தடவையும் இரட்டிப்பு மடங்கு வெற்றியுடன், லாபத்துடன். இதிலிருந்தே, ராஜனுடைய பிடிவாதக்குணமும் சாமர்த்தியமும் ஒருமனப்பட்டு உழைக்கும் தன்மையும் விளங்கும். வக்கீல் தொழிலை நிறுத்திய தேசபக்தர்கள், எத்தனைபேர்கள் திண்டாடுகிறார்கள்!

முதல் ஒத்துழையாமைக் காலத்தில், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை சிறைகளில், அவர் அனுபவித்த கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. (திருநெல்வேலி) பாளையங்கோட்டை சிறையில், "ஹூக்வோம்" (வளையப்புழு) என்பதன் சேஷ்டைகளைப் பற்றி, ராஜன் ஆராய்ச்சி செய்து பார்க்கையில், புண் கண்டு, புரையோடிப் போயிற்று. அவருடைய இடது கையோடு, உயிரும் போய்விடுமோ என்ற சந்தேகமும் இருந்தது. தப்பிப் பிழைத்தார். இடது கையிலேயே, இரண்டு மூன்று சத்திரம் வைக்க நேர்ந்தது.

ஒரு கை இல்லாமல் ராஜன் எப்படி ஆபரேஷன் செய்ய முடியும்? இனி ஆபரேஷன் செய்ய முடியாதோ என்று நண்பர் ஒருவர் ராஜனை, வருத்தத்துடன் கேட்டார். "ஓய்ந்து, ஏக்கங்கொண்டால், எல்லாம் ஓய்ச்சல்தான். பிடிவாதத்துடன் பழக்கத்தைக் கைவிடாமலிருந்தால், பிணத்துக்குக் கூட உயிரையும் ஊக்கத்தையும் ஊட்டலாம்" என்று ராஜன் பதில் சொன்னார். இந்த பதிலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ராஜன் பிணத்தைப்பற்றிக் குறிப்பிட்டது, அவரது தொழில் வாசனையால். அதைப்பற்றி, நமக்கு

www.padippakam.com



என்ன கவலை? மனிதனுடைய பிடிவாதம் 'அற்ப சொற்ப' மல்ல. அவ்வளவுதான் நமக்கு வேண்டும்.

உடல் உழைப்பில், ராஜனைக் தோற்கடிக்கக் கூடியவர்கள், நமது தமிழ்நாட்டில் எவரேனும் இருப்பார்களோ என்பது சந்தேகம். வேலையிலே, ராஜன் "அசுரன்". சோம்பல் என்பவர் தேம்பித் திரிவர் என்பதை உணர்ச்சி மூலமாய் கண்டறிந்தவர். ஓயாத வேலை, சளைக்காத உழைப்பு, சன்மானத்தையும் புகழையும் வேண்டாத தொண்டு. நல்ல துணிவு. கர்ம வீரனுக்கு வேறு என்ன லட்சணங்கள் தேவை?

பிரசங்க மேடையில் ஏறினால், பைத்தியக்காரனைப் போல முதலிலே தோன்றும். உடலி லிருக்கிற ரத்தம் அவ்வளவும் ஒன்று சேர்ந்து, முகத்தில் வந்து குவிந்துகொண்டது போல காணப்படும். இவர் என்ன பேசப்போகிறார் என்று அலட்சியமாய் மட்டும் நாம் இருக்கலாகாது. பேசத் துவக்கிவிட்டால், கிராம்யப் பேச்சு. அழகான உபமானங்கள். தைக்கும் சிறு கதைகள். சுடச்சுட விழும் வார்த்தைகள். முத்து முத்தாகக் கருத்துக்கள். நிறைந்து பரந்து, ஊடுருவிவரும் ஹாஸ்யம். மனதை அள்ளும் கற்பனை. இவ்வளவுமா, சதையை தாட்சண்யமின்றி அறுத்துத்தள்ளும் ராஜனிடத்தில், என்பீர்களோ? ஆம் என்று அழுத்தமாய் முடிக்கிறேன். 1919ம் ஆண்டில் சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில், காந்தியின் தலைமையின்கீழ், ராஜன், சத்தியாக்கிரகத்தைப் பற்றிச் செய்த பிரசங்கத்தைப்போல, இனியொரு முறை நான் எப்பொழுது கேட்கப்போகிறேன்?

ஹரிஜன இயக்கத்தின் மூலமாய், ராஜன் வைதிகர்களின் கையில் பட்ட பாட்டை எழுத்தில் எழுத முடியாது. வைஷ்ணவர்களின் உண்மையான பரம்பரையில் பற்றுக் கொண்டிருக்கும் ராஜன், வைதிகர்களைப் பொருள்படுத்துவாரா? வந்ததெல்லாம் வரட்டும் என்றுதான் சொல்லுவார்.

4

www.padippakam.com



ராஜன் ரொம்ப முரடர். ஆனால் அவரை ஆட்டி வைக்க ஒருவருக்குத்தான் சாமர்த்தியம் உண்டு. அந்த ஆசாமியின் பெயர் உங்களுக்குத் தேவையா? அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். ஆச்சாரியாரின் சொல்லுக்கு, ராஜன் மாற்றாக எதுவும் சொல்லத் துணிந்ததில்லை.

ராஜன் பணத்தில் ரொம்ப கெட்டிப் பேர்வழி. இதற்குக் காரணங்கள், காலத்தின் போக்கும் அவரது இளமை வறுமையும் என்று எண்ணுகிறேன். ஆனால் அவர் நண்பர்களுக்கு உள்ளன்புடன் செய்யும் உதவி, கடவுள் ஒருவருக்குத்தான் தெரியலாமோ, என்னவோ, மற்றவர்களுக்குத் தெரியாது. மற்றவர்களுக்குத் தெரியும்படியாக, டம்பமாக உதவி செய்பவர், ராஜன் அல்ல.

ராஜனுக்கும் ஆச்சாரியாருக்கும் இருந்த அந்யோந்யம் சிறிது காலம் மங்கி நின்றது தமிழர்களுக்குத் தெரியும். இது என்ன விபரீதம் என்று மனம் தவித்தவர்கள் எத்தனை பேர்களோ! ராஜன் தமது இயற்கையான பிடிவாதத்தைக் காண்பித்துக்கொண்டு, காங்கிரஸ் ஸ்தாபனங்களிலிருந்து விலகிக் கொண்டார்.

ராஜனுடைய தேசத்தொண்டு முற்றுப் பெற்றுவிட்டது என்று கொக்கரித்தவர்களும் உண்டு. மனம் ஏங்கினவர்களும் உண்டு. ராஜனை எதிரியாக கொண்டிருப்பவர்கள் கொக்கரிப்பதும், அவரை மருக்கலப்பில்லாத தேசபக்தன் என்று மதிப்பவர்கள் மனம் ஏங்குவதும் இயற்கைதானே?

ராஜன் இரண்டையும் கவனிக்கவில்லை. கைக்கு கிடைத்த வேலைகளைச் செய்து வந்தார். தமது எதிர் காலம் பாழாய்ப் போகாது என்ற உறுதி அவரது உள்ளத்தில் இருந்து வந்தது. ஆச்சாரியார், சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக ஆனதும், ராஜனை ஒரு மந்திரியாக பொறுக்கி எடுத்தது, தமிழ் நாட்டை திடுக்கிடச் செய்து விட்டது.

www.padippakam.com



ஆச்சாரியார் செய்ததுதான் இயற்கையானது என்று தமிழ்நாடு ஏற்றுக்கொண்டது. பின்னர், ராஜன் மந்திரியாக இருந்த காலத்தில், வைத்திய இலாகாவின் உரிமைகளைக் காக்க என்ன பாடுபட்டார் என்பதை இப்போது தெரிந்து கொள்ள முடியாது.

ஆனால் பணகால் ராஜா மந்திரியாக இருந்த காலத்தில், அவர் இந்திய டாக்டர்களின் உரிமைகளுக்காக உழைத்ததை ராஜன் வெகுவாகப் புகழ்வார். இந்தியர்கள் வெள்ளையர்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை டுனீசியப் போரில் பெரும்புகழ் படைத்த இந்தியச் சேனையின் தீரத்தை சுட்டிக்காட்டி பிரசாரம் செய்ய வேண்டியதில்லை.

ஆபரேஷனில், டாக்டர் ரங்காச்சாரியும் ராஜனும் ஒன்றாந்தர வெள்ளைக்கார டாக்டர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல என்பதை உலகம் ஒப்புக் கொள்ளும்படியாக, இவர்கள் இருவரும் மெய்ப்பித்து விட்டார்கள்.

சுயமரியாதையைக் காத்துக் கொள்ளுவதில் துடியாயிருப்பவர் என்று ராஜன் பல சமயங்களில் காண்பித்துக்கொண்டிருக்கிறார். துடுக்காக நடப்பவன் வெள்ளையனாக இருந்தாலும், அவனுடைய பாச்சா ராஜனிடம் பலிப்பதில்லை. கடைசியில், மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியவன் வெள்ளைக்காரனாகத்தான் இருப்பான். இவ்வாறு ஓரிரண்டு சம்பவங்கள் ராஜனுடைய வாழ்க்கையில் நேர்ந்திருக்கின்றன.

சுயமரியாதைக்கும் துணிவுக்கும் தூண்போல நிற்கும் ராஜனை எவரும் எளிதிலே அடக்கிவிட முடியாது.

www.padippakam.com

# 6. ஜ்யார்ஜ் ஜோஸப்

தனித்தமிழ் நெடுங்கணக்குக்கும் (எழுத்துக் கூட்டத்துக்கும்) தனித்தமிழ் ஒலிக்கும் கட்டுப்படாத, அந்நிய நாட்டுப் பெயரைக் கொண்ட ஜ்யார்ஜ் ஜோஸப் அவர்களும் தமிழரா, தமிழ் நாட்டுத் தலைவரா என்று சிலர் உறுமிக் கொண்டு கேட்கலாம். அப்படிப் பார்த்தால், 100க்கு தொண்ணூறு தமிழ் நாட்டுத் தலைவர்களை தேசப்பிரஷ்டம் செய்யவேண்டியதுதான். ராமசாமி நாய்க்கர் கன்னடியர். வரதராஜுலு நாயுடு தெலுங்கர். சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியாரின் ரத்தத்தில் ஆரியம் கலப்பு என்று சொல்லி விடலாம். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்னமோ, தப்பித்துக் கொள்ளுவார். இதிலும் அவருக்கு அதிருஷ்டம்தான். ஆனால் ஜோஸப் அவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்களில் தலைசிறந்து நிற்பவர்களுள் முன்னணியில் நிற்பவர். ஜோஸப் என்ற பெயரை, சரியாக உச்சரிக்க முடியாத குறையினாலோ, அல்லது அன்பு தவழும் அருமையாலோ, மதுரை வாசிகள் ஜோஸப் அவர்களை ரோஜாப்பூ துரையாக்கி விட்டார்கள்.

ரோஜாப்பூவிலே மேலே மலரும், அடியில் முள்ளும் இருக்கின்றன என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய சங்கதியா? மலர் தனது மணத்தாலும் வனப்பாலும் கண்டவர்களை காந்த சக்தியுடன் இழுக்கும். அலட்சிய புத்தியுடன் தொட்டால், ரோஜா தனது முட்களால் குத்தும், தைக்கும். ஜோஸப் அவர்களுக்கு ரோஜாவின் இரண்டு தன்மைகளும் உண்டு என்று கூசாமல் கூறலாம்.

ஜோஸப் அவர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்தில் செங்கனச்சேரி என்ற ஊரில், ஸிரிய கிருஸ்தவ வகுப்பில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் இன்னும் உயிருட னிருக்கிறார். சென்னை மில்லர் காலேஜ் என்று சொல்லப்படும் கிருஸ்தவக் கல்லூரியில்,

www.padippakam.com



பி.ஏ., வரையில் படித்துவிட்டு, ஜோஸப் சீமைக்குப் போய், ஸ்காட்லாந்து தேசத்தில், எடின்பர்க் நகரில், எம்.ஏ., பட்டம் பெற்று, பின்னர் பாரிஸ்டர் ஆனார். சென்னை கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினரா யிருந்த கர்டியூதுரை அவர்கள், ஸப் ஜட்ஜ் என்ற தூண்டிமுள்ளால் ஜோஸப்பைப் பிடிக்க எத்தனித்த பொழுது, அதற்குக் கட்டுப்படாமலிருந்த ஜோஸப்பை, சிலர் கோபிக்கிறார்கள். ஜோஸப் அவர்களின் நோய், மூளைக்குறைவால் ஏற்பட்டதல்ல; ஜோஸப்பின் நோய் அபரிமிதமான மூளையாகும்; அதன் கட்டுக்கடங்காத கொதிப்பாகும்.

பெஸண்டு அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கக் காலத்தில், அதில் தீவிரமாய்க் கலந்துகொண்டு, இங்கிலாந்துக்குச் சென்ற தூதர்களில் ஜோஸப் ஒருவர். அப்பொழுது ஐரோப்பிய போர் காலம். கப்பல் ஜிப்ரால்டர் வரையிலும் சென்றது. ஹோம்ரூல் தூதர்கள், சீமைக்கு வரலாகாது என்று இங்கிலீஷ் துரைத்தனத்தார் தடுத்துவிட்டார்கள். "மனிதன் எப்பொழுது மிருகப்பிராயம் அடைகின்றான்" என்பது தெரியுமா என்று என்னை ஜோஸப் கேட்டு விட்டு, ஜிப்ரால்டர் நகரில் (ஸ்பெயின் தேசத்தில்) ஹோம்ரூல் தூதர்கள் யாவரும்-ஜோஸப் உள்பட-மிருகப்பிராயம் அடைந்த விநோதத்தை ஜோஸப் வர்ணிப்பதைக் கேட்டால், மயிர்க்கூச்செறியும். தோல்விக் காலத்தில் சஞ்சலமும் மிருகப் பிராயமும் மனிதனுக்குச் சாதாரணமாய் வரக்கூடியவை என்று ஜோஸப் சொல்லி முடித்தது, அட்சரம் பிசகாமல், என் நினைவில் இன்றைக்கும் இருந்து வருகிறது.

மனவருத்தத்துடன் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்த ஜோஸப், முதன் முதலாக, ஸ்ரீமான் ராஜகோபாலாச் சாரியாரை, சீரங்கம் (கொடியாலம்) ரங்கஸ்வாமி அய்யங்காரின் வீட்டில் ஏனைய நண்பர்களின் மத்தியில் சந்தித்தார். சந்தித்தது முதல், ஜோஸப்புக்கு "சனியன்" பிடித்தது என்றே சொல்லலாம். அது முதல் சுமார் பதினைந்து வருஷ காலம் வரையில், ஆச்சாரியார் - ஜோஸப் நட்பு,

www.padippakam.com



மூக்கின் மேல் விரல் வைத்து திகைக்க வேண்டிய சங்கதியாயிருந்தது. ஆச்சாரியாரின் "தர்க்க" மூளையும், ஜோஸப்பின் "தாக்கு" மூளையும் ஒன்று சேர்ந்து உறவாடின.

இருவர் கலந்து யோசித்ததே, பெரும்பாலும் நமது ஹிந்துஸ்தானத்தின் காங்கிரஸ் வேலைத்திட்டமாய் அமையப் பெற்றது என்றும் சொல்லுவதற்கு இடமுண்டு. சீரங்கக் கூட்டத்தில், ஆச்சாரியார் சொன்னதை, மற்றவர்கள் எளிதிலே ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் ஜோஸப்போ வாக்கியத்துக்கு வாக்கியம் வாதம், சண்டை, குஸ்தி போட்டார். எல்லாம் வாயால்தான். கடைசியில் சமாதானம். ஆச்சாரியாரின் தெள்ளறிவு ஜோஸப்பின் மேதையை ஒப்புக்கொண்டது. ஜோஸப்பின் கட்டுக்கடங்காத கருத்துக்கள், ஆச்சாரியாரின் தர்க்க பாதுகாப்புகளை வேண்டின. பொன் மலர் நாற்ற முடைத்து போல், இருவரும் ஒன்று சேர்ந்து, தமிழ் நாட்டில், பிரகாசத்துடன் ஜொலித்தார்கள்.

சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் இயக்கம் தோன்றிற்று. தமிழர்களை வகுப்புகளாகப் பிரிப்பது பாபம், தர்மமல்ல, ராஜதந்திரமல்ல என்று அழுத்தமாய் ஆட்சேபித்தவர்கள் மூவர். திவான்பகதூர் கேசவப்பிள்ளை, வரதராஜுலு நாயுடு, ஜ்யார்ஜ் ஜோஸப். இவர்கள் மூவரிலுமே ஜோஸப்பே, தமது உணர்ச்சியைத் திருத்தமாகவும் தீவிரமாகவும் காண்பித்தவர். கர்டியூ அவர்களின் தயவை எட்டத் தள்ளினார்; ஜஸ்டிஸ் கட்சியினருடன் உறவாட, ஜோஸப் சிறிதும் மனங்கொள்ளவில்லை. பாரிஸ்டர் தொழிலிலும் எதிர்பார்த்த வருமானம் வராத காலம். தகப்பனாருக்கும் இவரது அரசியல் கொள்கைகள் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

இந்தக் காலத்தில், "தேசமே பெரிது; விடுதலைதான் உண்மை; நாட்டாரை வகுப்புகளாகப் பிரித்து, கட்சி சேர்ப்பது தவறு" என்று சொல்லக்கூடிய ஆற்றல் ஜோஸப்புக்கு எங்கிருந்து வந்தது?

www.padippakam.com



மனிதனுக்கு அவன் சொந்த வலிமை எவ்வளவு இருந்தபோதிலும், நெருக்கடியில், மனம் ஒடிந்துபோவான். அந்த சமயத்தில் கை கொடுப்பவர்கள் கடவுளும் கற்பரசியான மனைவியும் தான். இவர்கள் இருவருமே, ஜோஸப்புக்கு அக்காலத்தில் துணை நின்றவர்கள்.

ஜோஸப்பின் தர்ம பத்தினியாரைப் பார்க்காதவர்கள், ஜோஸப்பின் தியாகத்தின் மூலத்தை அறிய முடியாது. ஜோஸப் ஏக்கமடைந்த போதெல்லாம், ஊக்கம் கொடுத்தவர் அந்த உத்தமியே. மதுரையில் வரதராஜுலு நாயுடு வழக்குக் காலத்தில், ரோஜாப் பூ துரை பங்களாவில், வந்தவர்களுக் கெல்லாம் விருந்து. இரவிலே கண் விழித்து, வழக்கைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தவர்கள் யாவருக்கும்-இரவில் இரண்டரை மணிக்குக்கூட-தமது கையால் காபி கொடுத்து, உற்சாக மளித்த அந்த உத்தமி, நாட்டுக்கு எவ்வளவு நலம் செய்தார் என்று சொல்லுவதற்கு இது காலமல்ல.

ஜோஸப்பின் தீவிரமான கொள்கைகளுக்கு - தியாகமொன்றையே வேண்டும் கொள்கைகளுக்கு - உற்ற துணையாக, சலிக்காத மந்திரியாக, அலுப்பில்லாத தோழியாக அமைந்த ஸ்ரீமதி ஜோஸப் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நாட்டு விடுதலையில் அந்த அம்மாளுக்கு இருந்த உற்சாகமே ஜோஸப்பின் உற்சாகம் என்று சொன்னாலும் பொருந்தும்.

ரௌலட் சட்ட இயக்கம். காந்தி சென்னைக்கு 1919-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வந்திருக்கிறார். தமிழ் நாட்டுப் பிரயாணத்திட்டம் போட்டாகிவிட்டது. மதுரையிலே, காந்தி எங்கு தங்குவது? நிச்சயமாய் ஜோஸப் பங்களாவில் தான். 'ரௌலட் சட்டத்தை ஆட்சேபித்து, சிறை செல்லத் தயாரா யிருப்பவர்களின் ஜாப்தா எடுக்கப்பட்டது. ஜோஸப் சிறை செல்ல, அப்பொழுது கையெழுத்துப் போடவில்லை. மதுரையில் காந்தி தங்கின அன்றைய

www.padippakam.com



தினம், ஜோஸப்புக்கு கோர்ட்டில் அலுவல். கச்சேரியிலிருந்து பிற்பகலில் ஜோஸப் பங்களாவுக்குத் திரும்பி வந்தார். வரும் பொழுதே, ஜோஸப் காந்தியைச் சந்திக்கும்படி நேர்ந்தது.

"ஜோஸப்! உமது வீட்டை வெடிகுண்டு வைத்து தகர்க்க எத்தனிக்கிறேன்" என்றார் காந்தி. ஜோஸப்புக்கு விளங்கவில்லை; விஷயம் என்ன வென்றால், சற்று முன்னர்தான், காந்தி ஸ்ரீமதி ஜோஸப்போடு, நீண்டநேரம் வாதம் செய்து, சிறைக்குச் செல்ல தயார் என்று அந்த அம்மாவினிட மிருந்து கையெழுத்து வாங்கின சமயம். ஜோஸப்பின் மனைவி கையெழுத்துப் போட்டதை, வெடிகுண்டாக வர்ணித்துக் கேலி செய்தார் காந்தி. மறுவார்த்தை பேசவில்லை ஜோஸப். உடுப்பைக்கூட களையாமல் (என்பது வதந்தி) ஜோஸப் தாமும் சிறை செல்ல, கையெழுத்துப் போட்டார்; புருஷன் மனைவி என்றால், இப்படி யல்லவா இருக்க வேண்டும்? காந்தியின் சந்திப்பு, ஜோஸப்பை அகில இந்திய மனிதனாக செய்துவிட்டது.

ஜோஸப்பின் அன்பும் தியாகமும் எத்தன்மைத்து என்பதற்கு ஒரு சிறு கதை உண்டு. ஜோஸப்பின் தோட்டக்காரன் ஒரு ஹரிஜனப் பையன். அவனுக்குத் தாய் தந்தை கிடையாது. ஜோஸப் தம்பதிகள்தான் அவனது தாயும் தந்தையும். இவர்களிருவரும் சிறை செல்லப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், அவன் காந்தியிடம் போய், அவர் காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "நானும் ஜெயிலுக்குப் போகிறேன். அம்மா, துரை இரண்டுபேரும் ஜெயிலுக்குப் போகிறது, நான் மாத்திரம் பங்களாவில் இருக்கிறதோ! முடியாது. உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று கண்ணீர்விட்டுக் கதறினான். காந்தி ஆட்சேபித்தார்; இந்த அதிசயத்தைக் கண்டு களித்தார். முடியாது என்றார். கடைசியாக, மதுரை ரயில்வே ஸ்டேஷன் வரையில் காந்தியைத் துரத்திக் கொண்டு போய், அவன் கையெழுத்துப் போட்டான். ஆனால் இடையே, அவன் இறந்து போனான். வேலைக்காரன் என்று எண்ணாமல், தாம் பெற்ற குழந்தையாக பாவித்த ஜோஸப் தம்பதிகளை உலகம் வாழ்த்தாம

www.padippakam.com



லிருக்க முடியுமா? ஜோஸப்பின் அன்பும் ஆத்திரமும் திடீரென்று பரவும் தொத்து நோயைப் போல.

பின்னர், அலகாபாத்தில் "இன்டிபென்டண்ட்" பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து நாட்டுக்கு ஜோஸப் தொண்டு செய்தது பழங்கதை. பெஸண்டு அம்மையார் சத்தியாக்கிரக இயக்கத்தை, வாய்கொண்டமட்டிலும், தமது நியூ இந்தியா பத்திரிகையில் திட்டினார். ஒருவராவது, அதற்குப் பதில் சொல்ல தைரியமில்லாம லிருக்கிற சமயத்தில், பெஸண்டு அம்மையாரின் மாஜிபக்தரான ஜோஸப் "இன்டிபென்டண்ட்" பத்திரிகையில், சரமாரியாக பதில் கொடுத்துவிட்டார். கொள்கை என்ற விடத்தில் ஆள் பெரிதல்ல என்பது ஜோஸப்பின் கட்சி. "அந்தக் கிழவியை (பெஸண்டு அம்மையாரை) கவனிக்க வேண்டாம். பதில் சொல்லாமல், நாம் காரியத்தில் கண்ணாயிருப்போம்" என்று காந்தி, ஜோஸப்புக்கு எழுதினார். பிறகு, பெஸண்டு அம்மையாரைத் தாக்கி, ஒரு வார்த்தையேனும், "இன்டிபென்டண்ட்" பத்திரிகையில் வரவில்லை. தலைவருக்கு கீழ்ப்படியும் அருங்குணம், ஜோஸப்பினிடம் அபரிமிதமாகக் காணப்படும்.

தாம் கிருஸ்தவன் என்று சும்மாயிருக்கலாகாதா? ஏன் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு, தீண்டாமையை விலக்கப் பாடுபட வேண்டும்? ஜோஸப்பின் உள்ளத்தின் துடி துடிப்பை என்னவென்று சொல்லுவது? சதா கர்மம் செய்வதில் அவருக்கு தியானமும், திருஷ்டியும். "சோம்பல் மிகக் கொடிது பாப்பா" என்ற பாரதியாரின் திருவாக்கியத்தை, ஜோஸப் அவர்கள் முற்றும் உணர்ந்தார் போலும்.

மகாத்மா சிறையிலிருந்தபொழுது, அவரது "யங் இந்தியா" பத்திரிகையை ஜோஸப் எவ்வளவு அழகாக நடத்தி வந்தார்! "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" பத்திரிகையின் ஆசிரியரான கீர்த்தி வாய்ந்த நடராஜன் அவர்கள், காந்தியைப் பற்றி மதிப்புக் குறைவாக

www.padippakam.com



எழுதிவிட்டு, வாதத்தில் ஜோஸப் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு மூச்சுத் திணறிப் போனது பழங்கதை. இந்த தேசத்தில், அழகாகவும், சொல் வலிமையுடனும் அர்த்த புஷ்டி குறையாமல், நவீனக் கருத்துக்கள் குலுங்கும்படியாகவும் இங்கிலீஷ் எழுதக்கூடிய ஒரு சிலரில் ஜோஸப் ஒருவர் என்று அப்பொழுது எல்லோருக்கும் விளங்கிற்று.

ஜோஸப் அடிக்கடி மாறும் தன்மை கொண்டவர் என்று சிலர் இப்பொழுது அசட்டையாகப் பேசுகிறார்கள். உலகத்தில் மைல் கல்லும் மதியீனனும் தான் மாறாமல், இருந்த இடத்திலேயே, அசையாமல் நிற்கும். மனிதன் எப்பொழுதும் வளர்ந்து கொண்டே போகிறான். வளரும் பொழுது, மாறுதல் தோன்றுவது இயல்பு. ஜோஸப், அனுபவத்தோடு கூடிய மேதாவி. அவர் எவ்வாறு மாறாமல் இருக்கமுடியும்? மேதையை ஒட்டி அனுபவமும், அனுபவத்தை ஒட்டி அறிவும் மாறத்தான் செய்யும்.

உலக கத்தோலிக்கக் கிருஸ்தவர்களுக்கு குரு போப் ஆவர். அவருக்கு அடுத்தபடியாக, கார்டினல் என்ற பட்டம். சீமையிலே, கார்டினல் நியூமன் என்ற மேதாவி இருந்தார். அவரை க்ஷணப்பித்துக் கொண்டவர் என்று சிலர் தூற்றியதுண்டு. ஆனால் அவருடைய மேதையையும் உண்மை உணர்ச்சியையும், எவராலும் மறுத்துப் பேசமுடியவில்லை. ஜோஸப், பார்வைக்கு, பல போர்க்களங்களிலே தோற்றவர். ஆனால் நெஞ்சம் தளராதவர். அவருடைய தேசப்பற்றுப் பித்து அவரை எளிதிலே விட்டுவிட முடியுமா? மனச் சஞ்சலமடைந்த வர்களுக்குக் கத்தோலிக் கிருஸ்தவமார்க்கம் ஒருவாறு அமைதி கொடுக்கும் என்பது எனது துணிபு. ஏனவே, ஜோஸப் அவர்கள் கத்தோலிக் கிருஸ்தவராக மாறினதில், எனக்கு வியப்பே இல்லை. ஜோஸப் எரிமலை.

ஒருவரை மதிப்பிடுவது எளிதான காரியமல்ல. ஜோஸப் காலமாகிவிட்டார். அவர் நாட்டுக்குச் செய்த தொண்டு என்ன என்ற கேள்வியை, சுளுவாக யாரும் போட்டு விடலாம். ஆனால்,

www.padippakam.com



அதற்கு விடையளிப்பது தான் கஷ்டம். ஜோஸப் தமது வாழ்க்கையில், வெற்றியைக் கண்டாரா என்றும் கேட்கலாம்.

மனிதனை பணத்தைக் கொண்டு மதிப்பிடுபவர்கள் அற்பர்கள். வெற்றியைக் கொண்டு மதிப்பிடுபவர்கள் சிறியோர்கள். அடிமை நாட்டில், மக்கள் இறுதியாக விடுதலை அடையுமுன், பெரியார்களை, அவர்களுடைய மகத்தான முயற்சிகளையும் தோல்விகளையும் கொண்டுதான் மதிப்பிட முடியும்.

தோல்வி என்பது தோல்வியே அல்ல என்றும் அது வெற்றிக்கு தூண் நாட்டியது போலாகும் என்றும் ஒரு ஆசிரியர் கூறுகிறார். இதில், நூற்றுக்கு நூறு உண்மை பொதிந்து கிடக்கின்றது. ஊன்றிப் பார்த்தால்தான் தெரியும்.

ஜோஸப், மகத்தான முயற்சிகளை செய்துபார்த்தார். ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து, அதற்கென்று வேலைத் திட்டத்தையும் லக்ஷியத்தையும் அமைத்துக் கொடுக்க, எவ்வளவோ முயன்று பார்த்தார். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த பதவிவேட்டைக்காரர்கள் இதற்கு இடங்கொடுக்கவில்லை. எனவே, ஜோஸப், படுதோல்வி அடைந்தார். அதனால் என்ன? முயற்சிசெய்து பார்க்க வேண்டியது உண்மையாளனுடைய கடமை என்பதை ஜோஸப் விளக்கிக் காண்பித்தது போதாதா?

ஜோஸப், சிறந்த தேசாபிமானி என்பது உண்மையானால், அவர் ஏன் காங்கிரசை விட்டு விலக வேண்டும் என்ற கேள்வி பிறக்கலாம்.

இந்தியா புனருத்தாரணம் பெறவேண்டுமானால், கிளர்ச்சிக்கான வெறும் அரசியல் திட்டம் மட்டும் போதாது என்பதை காந்தி வெட்ட வெளியாக்கினார். ஜாதிக் கொடுமை மிகக் கொடிது என்பதை காந்தி கண்டார். அதைத் தொலைக்க வழிதேடினார். ஆனால் வைதிக மனப்பான்மை கொண்ட காங்கிரஸ்வாதிகள்,

www.padippakam.com



ஜாதி வித்தியாசம் பாராட்டத்தான் செய்தார்கள். கருங்கல்லைப்போல மாறாத மனப்பான்மையான இந்த அசட்டுத் தனத்தைக் கண்டு, ஜோஸப் மனம் புழுங்கினார். கிருஸ்தவரான இவர் ஏன் மனம் புழுங்கவேண்டும் என்று கேட்பது யோசனையில்லாத கேள்வியாகும்.

இந்தியாவில், ஜனசமூக ஒற்றுமையை நிலைநாட்டும்படியான வேலைத் திட்டத்தைப் பற்றி சிந்தனை செய்வதும் சிரத்தை கொள்ளுவதும் தேசபக்தர்களின் கடமையல்லவா? எனவே, ஹிந்து ஜனசமூக ஊழல்களில் தலையிட ஜோஸப்புக்கு உரிமை இல்லையா? இல்லை யென்று மதுரையில் சில வம்புக்கார காங்கிரஸ்வாதிகள் அழுத்திப் பேசி, ஜோஸப்புக்கு மனப்புண் உண்டாக்கி, அவர் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்ளும்படியான நிலைமையை உண்டாக்கினார்கள். ஜோஸப் மறைந்து போய்விட்டார். அவரிடம் குற்றம் கண்டு, தூற்றுவது அற்பத்தனமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# 7. எஸ். ஸத்தியமூர்த்தி

எல்லா ஜீவராசிகளும் ஒன்றுபோல இல்லாததுதான் சிருஷ்டியின் விசித்திரம். தோற்றத்திலும் குண அமைப்பிலும் மாறுபட்ட விசித்திரங்களினூடே, ஒருவகை ஒற்றுமைச் சரடு ஓடுவது, சிருஷ்டியின் விசித்திரத்திலும் விசித்திரம். தர்க்க சாஸ்திரத்தைக் கொண்டு, சிருஷ்டியின் விசித்திரத்தின் தன்மையை அளவு எடுக்க முடியாது; ஆழங் காணமுடியாது. ஸத்தியமூர்த்தி ஒரு விசித்திர சிருஷ்டி.

ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று முழு எண்களை எண்ணிவிடலாம்; சரியாக உச்சரித்து விடலாம்; அல்லது கற்பனை செய்து கொள்ளலாம். முக்காலே அரைக்காலே அரை வீசம் . . என்று நீட்டிக்கொண்டே போனால், அதை சரியாக மனதில் இருத்தி, உச்சரிப்பதும் கஷ்டம்; அந்தப் பொருளின் மூளியை நீக்கி, முழுப் பொருளாகக் கற்பனை செய்வதும் அனேகமாய் முடியாத காரியம். இதுபோலவே, மகத்தையும் (பிரம்மாண்டம் என்று சாதாரணமாய் சொல்லப்படுவது) கற்பனைக்குள் படம் பிடிப்பது கடினமான வேலை.

ஸத்தியமூர்த்தி என்ற படைப்பிலே, ஏதோ ஒரு பக்கத்தில் மூளியிருக்கிறது. அது எந்தப் பக்கத்திலிருக்கிறது, அந்த குறை இன்னதுதான் என்று திட்டமாய் கை வைத்து தொட்டுச் சொல்லமுடியாது. நம் நாட்டுத் தலைவர்களில், இன்ன தலைவருக்கு, இன்னதுதான் குறை என்று “பிறந்த மேனிக்கு”ச் சொல்லிவிடலாம். காந்தியின் சக்தி இன்னதுதான் என்று சொல்லமுடியாது. ஸத்தியமூர்த்தியின் குறை இன்னதுதான் என்று நெஞ்சுத் துணிச்சலுடன் யாருமே சொல்லமுடியாது.

www.padippakam.com



தர்க்க வாதத்தின் மூலமாய் ஆளை மடக்குகிற வேலையில், ராஜகோபாலாச்சாரியாருக்கு, ஸத்தியமூர்த்தி சளைத்தவரல்ல. பிரசங்க மழை பொழிவதில், ராமசாமி

நாய்க்கருக்கு ஸத்தியமூர்த்தி சரியான ஜோடி. நுட்பமான அனுபவ யுக்தியில் ஸத்தியமூர்த்தி வரதராஜுலு நாயுடுவுக்கு இளைத்தவரல்ல. கவிரஸம் அனுபவிப்பதில் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரை, குப்புற வீழ்த்தி, "பீட்" காண்பித்து விடுவார் ஸத்தியமூர்த்தி. சட்ட சபையில் ஸமஸ்கிருத சுலோகம் சொல்லுவதில், ஸத்தியமூர்த்தியும் பணகால் ராஜாவும் அற்புதமான இரட்டையர்கள்.

அரசியல் அறிவில், ஜவஹர்லாலுக்கு, சரிசமமாக நிற்கக்கூடிய ஆற்றல் ஸத்தியமூர்த்திக்கு உண்டு. இடைச் செருகலாக, ஆளைக்குத்தி குடலைப் பிடுங்கும் சொல்லம்பு வேலையில், திவான்பகதூர் ராமஸ்வாமி முதலியாரையும் ஸத்தியமூர்த்தியையும் முன் ஏரில் பூட்டலாம். சாஸ்திரம், ஸ்மிருதி முதலிய சங்கதிகளில், சத்தம் போட்டு "லவுட்ஸ்பீக்கர்" போல் பேசும் பூரி சங்கராச்சாரியாரை, ஒரே அடியில் ஸத்தியமூர்த்தி வீழ்த்தி விடுவார்.

சில்லரை ரஸிகத் தன்மைகளான குங்குமப்பொட்டு, வீரசங்கிலி, சந்தனப்பூச்சு முதலியவைகளில், பழுத்த மைனர்களைக்கூட ஸத்தியமூர்த்தியின் காலில் கட்டி அடிக்கவேண்டும். நாடகத்திலே, "பார்ட்டு" போட்டுக்கொண்டு நடிப்பதில், ஸத்தியமூர்த்திக்கு ரொம்ப ஆசை. "உலகம் பாழ்; வாழ்வு சூன்யம்" என்ற அபத்த வேதாந்தமும் அவரிடம் கிடையாது. தேசபக்தி குறைவும் அவரிடம் இல்லை. அவருடைய வாய்த் துடுக்கிலே, ஒளியும் விகடமும் பிரகாசித்து மின்னும்.

என்றாலும், ஜனங்கள், முழுவதும் அவரை நம்புவது மில்லை அவரை, அலட்சியத்துடன் தள்ளிவிடவும், ஜனங்களால்

www.padippakam.com



முடிவதுமில்லை. இதன் காரணத்தைத் தான், அவருடைய குறையென்று தலைப்பில் நான் குறிப்பிட்டது. காந்தி, தாம் எத்தனையோ ஹிமாலயத்தை யொத்த தப்பிதங்களை செய்ததாக, அடிக்கடி சொல்லுகிறார். எனினும், இந்தியாவுக்கு விடுதலை அவர் மூலமாய்த்தான் வரமுடியும் என்று நம்பி, ஜனங்கள் இன்னும் நெருக்கமாக, அவருடன் ஒட்டிக்கொள்ளுகிறார்கள். தீர்க்க தரிசனத்துடன், ஸத்தியமூர்த்தி யோசனை சொன்னாலும், ஜனங்கள் அதை எளிதிலே ஏற்பதில்லை.

இதை ஜனனகால விசேஷம் என்பார்கள் சிலர். வேறு என்ன வெல்லாமோ, காரணங்கள் சொல்லுவார்கள். காரணங்களுக்கா, உலகத்தில் குறைவு? ஆனால் ஏறக்குறைய உண்மையான காரணம்தான் கண்ணில் படுவதில்லை.

ஸத்தியமூர்த்தி பிறந்த வருஷம் 1887. அதே வருஷத்தில்தான் ஜோசப் பிறந்தார். வரதராஜுலு நாயுடுவும் பிறந்தார். இந்த வருஷத்தில் பிறந்தவர்கள் பெரிய மனிதர்களாவார்கள் என்பது அந்த ஆண்டின் பலனோ? என்னவோ? வருஷாதி நூலைப் பார்த்தால் தெரியும்.

ஸத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருமயம் என்ற க்ஷேத்திரத்தில் பிறந்தவர். ஸத்தியமூர்த்தி என்ற அழகிய பெயர் அவருக்குக் கிடைத்தது திருமயத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமாளின் கிருபையால்; க்ஷேத்திர அதிபதியான பெருமாளுக்கும் இதே பெயர்.

நம்முடைய தேசத்தில், குழந்தைகளுக்கு அழகான பெயர் அமைவது அருமை. சீனிவாஸய்யங்கார், ராஜகோபாலாச்சாரியார் என்ற நீண்ட பெயர்களை, வடநாட்டாரும் அன்னியர்களும் உடைக்காமல் உச்சரிக்க முடியாது. ஸத்தியமூர்த்தி என்ற பெயருக்கு அந்த பயம் கிடையாது. ஸத்தியமூர்த்திக்கு இந்தப் பெயர் வாய்த்தது அதிருஷ்டமென்றே சொல்லவேண்டும்.

\

www.padippakam.com



அன்னியர்கள் இந்தியப் பெயர்களை எவ்வாறு கெடுக்கிறார்கள் என்பதற்கு, பொருத்தமாயுள்ள ஒரு சிறு சம்பவத்தை சேலம் பாரிஸ்டர் ஆதிநாராயண செட்டியார் என்னிடம் சொன்னது எனக்கு இந்த சமயம் நினைவு வருகிறது. பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர்களின் பெயர்களைக் கூப்பிடும் பொழுது, செட்டியார் அவர்களை "மிஸ்டர் அவர்கள்" என்று கூப்பிட்டார்களாம். நகைக்கத்தக்க அளவு, அன்னியர்கள் இந்தியர்களின் பெயர்களை சித்திரவதை செய்கிறார்களாம்! எனவே ஸத்தியமூர்த்தி பாக்கியசாலி என்று சொல்லுவதில் தடையென்ன இருக்கிறது?

புதுக்கோட்டையில் படிப்பைத் துவக்கி, சென்னை கிருஸ்தவன் காலேஜ், சட்டகாலேஜ் இவைகளில் படித்து, ஸத்தியமூர்த்தி பீ.ஏ., பி.எல்., ஆனார். படிக்கும்பொழுதே, அவர் "வாயாடி" என்ற பட்டமும் புகழும் பெற்றுவிட்டாராம்! இயற்கையாகவே, ஒருவகைத் துடுக்கும் துடிதுடிப்பும் இல்லாதவர்களுக்கு, பேச்சு சாமர்த்தியம் உண்டாக முடியாது.

தேசபக்தி என்பது நடுவயதிலே ஏற்படக்கூடிய ஒரு உணர்ச்சியல்ல. தன் மதிப்புள்ளவர்கள் தேசபக்தர்களாகத் தான் இருக்கமுடியும். அநீதியைப் பொறுத்துக் கொண்டிருக்க, அவர்களால் முடியாது. தேசபக்தி பித்துப் பிடித்தவனுக்கு, எந்தத் தொழிலிலும்-சிறப்பாக பணம் சம்பாதிக்கும் தொழிலில்-மனம் செல்லாது. அதுவும் அடிமை நாட்டு தேச பக்தர்களுக்கு விடுதலை யொன்றே, குறியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எந்தத் துறையில் சென்றாலும், சுற்றிச்சுற்றி, தேச பக்தி குறுக்கே வந்து நிற்கும். இந்த தொல்லையே, ஸத்தியமூர்த்தியை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டு நின்றது.

சுதந்திர மிருக்கும் நாட்டில் பிறந்த பர்க்கென் ஹெட் பிரபு ஆங்கில நாட்டு அரசியலில் பெரும் பதவியை அடைந்தார்.

www.padippakam.com



ஸத்தியமூர்த்தியின் குணங் குறைகளுக்கு நேராயுள்ளவர் காலஞ்சென்ற இந்தியா மந்திரி பர்க்கென்ஹெட் பிரபுதான். இருவ்ரும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள். பேச்சு சாமர்த்தியம் இருவருக்கும் ரொம்ப ஜாஸ்தி. வாய்த்துடுக்கிலே வளர்ந்து, அதனாலேயே மேலேறியவர் பர்க்கென்ஹெட் பிரபு. அவரைத்தான் ஸத்தியமூர்த்திக்கு உவமையாகச் சொல்லலாம்.

ஸத்தியமூர்த்தி தேசபந்து தாஸின் சிஷ்யன்; சட்ட சபை நிபுணர். சட்ட சபைக்குரிய சாஸ்திரத்திலே முழுகி எழுந்திருக்கிறவர் ஸத்தியமூர்த்தி. சட்ட சபையின் மர்மங்கள், அவருக்குத் தலைகீழாய்த் தெரியும்; எந்தப் பேச்சை வளர்க்கிறது, எப்படி முட்டுக்கட்டை போடுகிறது, எதிரியை எவ்வாறு படீர் என்று அடிக்கிறது, எந்த இடத்தில் ஹாஸ்யத்தைப் புகவிடுவது, தடுக்கி விழுந்தாலும் வஸ்தாத்வேலை என்று தைரியமாய் அடித்துப் பேசுவது, எந்த சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிப்பது-இவைகள் யாவும் அவருக்கு குருட்டுப் பாடம்.

சென்னை சட்ட சபைக்கு ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் தலைமை வகித்த காலத்தில், ஸத்திய மூர்த்தி, பணகால் ராஜா, ராமஸ்வாமி முதலியார், ஸி.பி. ராமஸ்வாமி அய்யர்-இவர்கள் நான்கு பேர்களும் சட்ட சபையைப் படுத்தி வைத்த பாடு, கங்குகரை இல்லை. சட்ட சபை நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையிலும், இந்த நான்கு பேர்களும் மகா சமர்த்தர்கள். ஒருவர் மற்றவரை மிஞ்சி விடமாட்டார்கள். இவர்களுக்குள், தனி மதிப்பு ஸத்தியமூர்த்தியைத்தான் சேர்ந்ததாகும். ஏனெனின், இவருடைய யுத்தம் மற்ற மூன்று பேர்களுடன்.

ஸத்தியமூர்த்தி இங்கிலாந்துக்குப் போனது எல்லோருக்கும் தெரியும். "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல்" (இது ஸத்தியமூர்த்தியின் அருமைத் தொடர்மொழி; இதை அவர்
5 ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு விட்டார் என்று தோன்றுகிறது)

www.padippakam.com



இங்கிலாந்திலே, அவர் பிரசங்கங்கள் செய்தார். ஒரு மகாநாட்டில், "இந்தியாவை விட்டு இங்கிலீஷ்காரர்கள் விலகி வந்துவிட்டால், கொள்ளை, மிதமிஞ்சிப் போய், இந்தியா பாழாய்ப் போகாதா" என்று ஒருவர் கேட்டாராம். "இங்கிலீஷ்காரன் உலகத்துக்கு போலீஸ்காரனா!" என்று ஸத்திய மூர்த்தி பதில் சொன்னாராம்! "ஒண்ணாந்தர" வாய்த் துடுக்கு!

ஸத்தியமூர்த்தி ஏனைய தேச பக்தர்களைப்போல, சிறை சென்றதைப்பற்றி, எதற்காக தனித்துப் பேச வேண்டும்? அதிலே விசேஷம் ஒன்றுமே இருப்பதாக, எனக்குத் தெரியவில்லை.

ஸத்தியமூர்த்தி, காந்தியின் சிஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல. பொது ஜனங்களின் மகத்தான எழுச்சிக்குக் காரணமா யிருந்தவர் காந்தி என்ற பெருமதிப்பு ஒன்றுதான் மகாத்மாவுக்குச் சேரும் என்பது ஸத்தியமூர்த்தியின் முடிவான கருத்து. அரசியலில் காந்தி அவ்வளாவாக நிபுணர் அல்ல என்று கூக்குரலிடும் வங்காள, மகாராஷ்டிர கோஷ்டியைச் சேர்ந்தவர் ஸத்தியமூர்த்தி. வாழ்க்கையில் அரசியலை மட்டும் தனியாய்ப் பிரித்துப் பார்ப்பவர்களின் மனப்பான்மையை, சாமான்ய ஜனங்கள் அறியவே முடியாது. இவ்வாறு செய்பவர்கள் 'ஒரு கண்' பார்வை யுள்ளவர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

காந்தியின் செல்வாக்கு அவரது புரட்சி மனப்பான்மையினாலே; இந்த மனப்பான்மை ஸத்தியமூர்த்தியிடம் கிடையாது. அதனாலேதான் அடிக்கடி, சட்டசபை முதலிய ராஜி சாதனங்களை நாடுகிறார். கொஞ்சம் கொஞ்சமாய் மெள்ளச் செல்லும் மிதவாதி கோஷ்டியைச் சேர்ந்தவருமல்ல ஸத்தியமூர்த்தி. அதனாலேதான், ஆற்றிலே ஒருகாலும், சேற்றிலே ஒருகாலும் வைக்கும் ஆவல் ஸத்தியமூர்த்தியிடம் குடிகொண்டிருந்தது. நாட்டாரின் எதிர்ப்பு சக்தியை வளர்க்கும் வழியை ஸத்தியமூர்த்தி காண முடியவில்லை. ஆனால் இணையற்ற அரசியல்வாதி.

www.padippakam.com



சுதந்திர நாட்டிலே பிறந்திருந்தால், ஸத்தியமூர்த்தி பெரிய மந்திரிப்பதவிக்கு விரைவில் ஏறியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் கிளர்ச்சி என்பது பெரும்பான்மையில் கூலியில்லாத சேவகம்; அது மதிப்பில்லாத வேலையாக முடிந்து விடுகிறது. தமிழ் நாட்டிலே, ஸத்தியமூர்த்தியைப் போல, வேறு எவரும் இதுவரையும் தாக்கப்பட்டதேயில்லை. யார் வேண்டுமானாலும், ஸத்தியமூர்த்தியை எளிதிலே திட்டுவதற்கு, கூசுவதில்லை. இவ்வளவு கடுமையாக வேறு எவரும் திட்டப்பட்டிருப்பார்,களானால், அவர்கள் நெஞ்சு உடைந்து போயிருப்பார்கள் என்பது நிச்சயம். அவரிடத்தில் எனக்குப் பூரண அன்பும் அனுதாபமும். ஆனால், அவருடைய தலைமையை நான் ஏற்றுக் கொள்ளுவேனா? அது வேறு சங்கதி. உள்ளம் தளராத ஸத்தியமூர்த்திக்கு, ஜே போடவேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது.

ஜனங்களின் மதிப்பிலே, 'விடுவிடு' என்று வெகு சீக்கிரத்தில் ஏறிவிடுகிறீர்கள். அதைப் போலவே, சறுக்கிக் கீழே விழுந்து விடுகிறீர்களே! அதன் காரணம் என்ன என்று ஸத்தியமூர்த்தியை, நான் ஒரு சமயம் கேட்டேன். 'ஜனங்கள்தான் அதற்கு ஜவாப்தாரி. நான் செய்து கொள்ளும் நிலைமை அல்ல' என்று பொறுப்பை கழித்துக் கொள்ளுவதைப்போல பேசினார்.

'நீங்கள் சொல்லுவது மிகச் சாதாரணமான சமாதானம். அதைச் சொல்லுவதற்கு, ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி தேவை இல்லை' என்று சற்று இடக்காக பதில் சொன்னேன்.

(ஸத்தியமூர்த்தி, யாரையும் 'நீ' என்று எளிதிலே அழைத்து விடுவார்.)

"அப்பா! யார் வருத்தம் எனக்கு வந்தாலும் பாதகமில்லை. உன் வருத்தம் கூடாது. ஏன் என்று கேட்கிறாயோ? என்

www.padippakam.com



வாழ்க்கையை அனுதாபக் கண்ணோடு, இதுவரையிலும் யாரும் பார்த்ததில்லை. ஸத்தியமூர்த்தி அவன், இவன் என்று அவதூறுபேசுவதிலேயே, உலகம் முனைந்துநின்றது. அந்த கெட்ட உலகத்தை நீ சேர்ந்தவன் அல்ல. நான் மேலே ஏறுவதற்கும் சட்டென்று சறுக்கி விழுவதற்கும் காரணத்தை சொல்லுகிறேன், கேள்'' என்றார்.

'அதற்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்று கிண்டலாக பதில் சொன்னேன்.

'கேலி செய்யாதே! நான் ஏறுவது என் புத்தி சாதுர்யத்தினால். நான் சறுக்கி விழுவது, என் தரித்திரத்தின் கொடுமையால். தப்பர்த்தம் செய்யாதே! ஒருவன் நீண்ட காலம் கலியாணம் செய்து கொள்ளாமல் இருந்தால், அவனுடைய பிரம்மசரியத்தை உலகம் நம்புவதில்லை. அதைப் போலவே, தரித்திரனுக்கு நாணயம் இருப்பதாக, உலகம் ஒப்புக்கொள்ளுவதில்லை' என்று அசைக்க முடியாதபடிக்கு ஸத்தியமூர்த்தி பதில் சொன்னார்.

காங்கிரசுக்கு, ஜவஹர்லால் காரியதரிசியாக இருந்த காலத்தில், அதற்காக தமக்கு ஒரு 'அலவன்ஸ்' வேண்டும் என்று வாதாடினார். அதைக் கேட்ட, அவரது தகப்பனார் மோதிலால். மிகவும் வெட்கப்பட்டுப் போனார்.

'உனக்குத் தேவையான பணம் நான் தருகிறேன். ஊதியம் பெற்று, காங்கிரசுக்கு உழைக்கிறது என்ற பேச்சு காதில் படக்கூடாது' என்று மோதிலால் அழுத்தமாகச் சொல்லிவிட்டார்.

ஜவஹருக்கு, தாராளத் தகப்பனார், தனவந்த தகப்பனார் இருந்தார். ஸத்தியமூர்த்திக்கு-? ஆதரவு காண்பிக்காமல், அவதூறு பேசும் உலகம் தான் இருந்தது. ஸ்ரீமான் எஸ். சீனிவாச அய்யங்கார்,

www.padippakam.com



சென்னை மாகாண அட்வகேட் ஜெனரல் பதவியை விட்டு விட்டு, காங்கிரசில் சேர்ந்ததும், அவருக்கு பெரும் பாராட்டு.

ஆனால், ஏழைக் குடும்பத்திலிருந்து இளவயதில் தேச சேவைக்காக ஒருவன் வெளிவர எண்ணினால், அவன், குடும்பத்தின் ஏழ்மை அறியாத முட்டாள், பொறுப்பில்லாத மடையன் என்று எத்தனையோ வகைப் பட்டங்களை பெறுகிறான். பாராட்டு அவனுக்குக் கிடைப்பதில்லை.

ஜீவனத்துக்கு வகையில்லாதவன், இந்த தேசத்தில், தேச சேவை செய்ய, முன் வருவது ரொம்பவும் கடினமான வேலை. தியாகம், தியாகம் என்று பகட்டு விளம்பரம் செய்துகொண்டு, தேசத்தொண்டு செய்கிற ஜன சமூகத்தில், ஏழை ஸத்தியமூர்த்திக்கு, வாழ்க்கையை பதம் தெரிந்து அனுபவிக்க ஆசைப்பட்ட ஸத்தியமூர்த்திக்கு, நல்ல பெயர் எப்படி கிடைக்கும்?

ஸத்தியமூர்த்தியின் வாழ்க்கையில் மூளி இருப்பதாகச் சொன்னேனே, அது இதுதான். படாடோபம் ஸத்தியமூர்த்திக்கு பிடிக்காது; ஆனால், அவரால் 'பதவிசாக' இருக்கவும் முடியவில்லை. அதனாலே தான், நல்ல பெயர் விரைவில் கிடைக்கவில்லை. அதனால் என்ன?

ஜன சமூகம் ஸத்தியமூர்த்தியை கைவிட்டு விடலாம். ஆனால் சரித்திரம் கைவிடாது. தேச விடுதலைக்கென்றே, வாழ்ந்து வீழ்ந்த உத்தமன் என்ற தீர்ப்பு, ஸத்தியமூர்த்திக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

www.padippakam.com

# 8. வ. உ. சிதம்பரம் பிள்ளை

வெற்றி அதிருஷ்டம் சிலருக்குத்தான் கிட்டும். பல போர் வீரர்கள் மாண்டதன் பின்னரே, போர்க்களத்தில், ஒரு கட்சிக்கு வெற்றி கிடைக்கிறது. இறந்தவன் முட்டாள் என்றும் மிஞ்சினவர்கள் புத்திசாலிகள் என்றும் சொல்லக்கூடுமா? விடுதலைப் போராட்டப் பருவக்காலங்களில், முதன் முதலாக, விடுதலையில் தாகம் ஏற்பட்டு உழைப்பவர்கள், கடைசிக்கால வெற்றியை கண்ணிலே காணுவதில்லை. ஆனால் இறுதி வெற்றிக்கு, இவர்களுடைய முதல் முயற்சியே, அஸ்திவாரமாகும். தமிழ் நாட்டில், சுயராஜ்ய தாகம் ஏற்பட்டதற்கு, மூல காரணங்களில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒருவர்.

சாதாரணமாய், சிதம்பரம் பிள்ளை அவர்களை தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை என்பார்கள். ஆனால் அவர் சொந்த ஊர், தூத்துக்குடிக்கு அருகாமையிலுள்ள ஒட்டப்பிடாரம் என்று நினைக்கிறேன்.

1905-ஆம் ஆண்டில், அரசாங்கத்தை நிர்வாகம் செய்துவந்த கர்ஸன் பிரபு, வங்காளத்தை, கீழ் வங்காளம், மேல் வங்காளம் என்று இரண்டு கூறுகளாக பிரித்தார். இது மொத்த வங்காளிகளுக்கும் பிடிக்கவில்லை. கூறுகளின் அமைப்பைப் பார்த்தால், வங்காளிகளை ஹிந்துக்கள், முஸ்லிம்கள் என்று இரண்டு பகுதிகளாக அரசாங்கத்தார் பிரித்து, ஆளப்பார்ப்பதாக, வங்காளிகளுக்குத் தோன்றிற்று. அவர்கள் கிளர்ச்சிசெய்து ஆட்சேபித்தார்கள். வங்காளப் பிரிவினைரத்து கிளர்ச்சியிலிருந்து பிறந்ததுதான் சுயராஜ்யக் கிளர்ச்சி. எனவே, சுயராஜ்யக் கிளர்ச்சிக்கு வங்காளம் தாயகம்.

இந்தக் கிளர்ச்சியின் உதயக் காலத்தில் வங்காளி பாஷையில் பல பத்திரிகைகள் தோன்றின. இங்கிலீஷில் சில பத்திரிகைகள்

www.padippakam.com



தோன்றின. இவைகளில் சிறந்தவை "வந்தே மாதரம்", "நியூ இந்தியா". இந்தப் பத்திரிகைகளை ஆரம்பித்தவர் காலஞ்சென்ற விபினசந்திர பாலர். இந்தப் பத்திரிகைகளின் எழுத்து நாடெங்கும் பரவலாயிற்று. இந்தியாவின் பல பாகங்களில், இவைகளை ஆவலுடன் படித்தார்கள். வங்காளத்தின் நூதன உணர்ச்சியின் வேகம், இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் போய் தாக்கிற்று.

சென்னை மாகாணத்தில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், இந்த நூதனக் கிளர்ச்சியிலும் உணர்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டவர்கள் நால்வர். சுதேசமித்திரன் பத்திரிகையின் ஆசிரியர், சுப்ரமணிய அய்யர். "ஞானபானு" பத்திரிகையை நடத்திவந்த சுப்ரமணிய சிவம். நமது தமிழ் நாட்டு மகா கவி சுப்ரமணிய பாரதியார். கடைசியாக நமது சிதம்பரம் பிள்ளை அவர்கள். மூன்று சுப்ரமணியங்களும் முன்னமேயே விண்ணுலகுக்கு ஏகிவிட்டார்கள். அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் தொடர்பாகயிருந்த சிதம்பரம் பிள்ளையும் மறைந்து போய்விட்டார்.

அக்காலத்தில் 'வந்தே மாதரம்' என்று உரக்க சத்தம் போட்டுச் சொல்லமுடியாது. அவ்வளவு பயம்; போலீசாரின் கிலி. வீடுகளில், கிழவர்களின் தொந்திரவு. ஜெயில் என்றால் ஆறு மாதம், ஒரு வருஷமல்ல. ஐந்து வருஷங்களுக்குக் குறையாது. கடின காவல். தீவாந்தர சிட்சையும் ஏற்படும். ஜெயிலில் இப்பொழுது இருக்கிற வசதிகள்கூட, அப்பொழுது கிடையாது. ஜெயிலில், இப்பொழுது காங்கிரஸ் கைதிகள் "ஜே" சத்தம் போடுகிறார்களே, அப்பொழுது போட முடியுமா? போட்டால், எலும்புகள் நொறுங்கிப் போனாலும் போகும். சுயராஜ்யத்தின் அவசியத்தை சிறிதும் உணராத காலம். சுயராஜ்யம் என்னவென்று கற்பனைசெய்து கூட பார்க்க இயலாத மனிதக்கூட்டம். இத்தனை நிர்ப்பந்தங்களுக் கிடையே, ஒருவன் சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசுவதாயிருந்தால், அவனுக்கு எவ்வளவு தன்னம்பிக்கையும் துணிவும் வேண்டும்?

www.padippakam.com



சுயராஜ்யப் பித்து பிடித்திருந்தாலொழிய, அத்தகைய நம்பிக்கையும் துணிவும் உண்டாவது அருமை. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அக்காலத்தில் சுயராஜ்யப் பித்துக்கொண்டவர். தேசத்தின் வறுமையையும் அடிமை நிலைமையையும் பற்றி நினைத்து, உள்ளம் பதறினார். சிதம்பரம் பிள்ளையின் தேச பக்தியைப் பற்றி, சிறியோனாகிய நானா பேசுவது, எழுதுவது? கலெக்டர் விஞ்சுக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் தர்க்கமாக, பாரதியார் அருமையாகப் பாடியிருக்கிறாரே, அதைக் காட்டிலும் என் எழுத்து எப்படிப் பெரிதாகும்?

வந்தே மாதரத்தையும், சுயராஜ்ய கோஷத்தையும் கடல் அலை கொண்டுவந்ததை, தூத்துக்குடியில் சிதம்பரம்பிள்ளை அவர்கள் காது கொடுத்து கேட்ட காலையில், அவர் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தார். அவருக்கு அப்பொழுது நல்ல வருமானம்; நல்ல செல்வாக்கு. இவை யிரண்டும் அவருக்குப் பெரிதாகப்பட வில்லை. பாரதத்தாயின் அழைப்பையே, உயிர்ப் பொருளாக மதித்தார். லாப நஷ்டக் கணக்குப் பார்க்கவில்லை. லாப நஷ்டக் கணக்குக்கு, அவரது இயற்கையும் இடங்கொடுக்காது. சுயராஜ்ய இயக்கத்தில், திரும்பிப் பார்க்காமல், ஒரே குதி குதித்தார்.

தூத்துக்குடியின் பெயர் நாடெங்கும் முழங்கிற்று. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிம்ம கர்ஜனைப் பிரசங்கத்தைக் கேட்டபின், தூத்துக்குடி மகாஜனங்களுக்கு உறக்கம் கிடையாது. அதிகார வர்க்கத்தினர் நடுக்கங்கொண்டனர். தமிழ் நாட்டிலே, எங்கும் சுதேசிப் பேச்சு. "கப்பலோட்ட வேண்டும்; சுதேசி சாமான்களை உற்பத்தி செய்ய வேண்டும். துணி, காகிதம், சோப்பு முதலிய வெல்லாம் சுதேசியாகத்தானிருக்க வேண்டும்." தமிழ் நாட்டிலே, எல்லோருக்கும் இப்படிப் பைத்தியம் பிடித்தது. தூத்துக்குடியிலே சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னனாய் விளங்கினார். அவர் சொன்னது சட்டம்

தூத்துக்குடி ஆலையிலே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த அக்காலத்தில், வெள்ளைக்காரர்கள் இரவில் கப்பலில் தங்கி, பொழுது விடிந்ததும், கரைக்கு வருவார்கள்.

www.padippakam.com



இம்மாதிரி மூன்று நாட்கள் நடந்தன. வெள்ளைக்காரர்கள் இவ்வாறு அச்சப் படுவதற்குக் காரணமேயில்லை. தூத்துக்குடியிலே அப்பொழுதிருந்த சுயராஜ்ய அதிர்ச்சிக்கு அடையாளமாக, மேற்கூறிய சம்பவத்தைக் குறிப்பிட்டேன். அவ்வளவு தான்.

இன்னொரு வினோத சம்பவம் நேர்ந்தது. ஒரு வக்கீல். அவர் அய்யங்கார். அவர் பெயர் நமக்கு இப்பொழுது தேவையில்லை. அவர் சுயராஜ்யப் பிரசாரத்துக்கு விரோதமாய்ப் பேச தூத்துக்குடியிலே முயற்சி செய்தார். அவர் அப்பொழுது தூத்துக்குடியில், வக்கீல் தொழில் நடத்தி வந்தார். அவருடைய விரோதப் பிரசாரம் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் காலையில், அவர் க்ஷவரம் செய்து கொள்ள உட்கார்ந்து கொண்டார். பரிகாரி பாதி க்ஷவரம் செய்தான். பாக்கியைச் செய்ய மறுத்து விட்டான். பாக்கி க்ஷவரத்தைச் செய்து கொள்ள, வக்கீல் தூத்துக்குடியிலிருந்து, திருநெல்வேலிக்கு ஓடினார். இது அந்தக்காலத்து வினோத சம்பவம். சிதம்பரம் பிள்ளை அவர்களைப்பற்றி, அய்யங்கார் வக்கீல், கலெக்டர் அவர்களிடம் தவறாக ஏதோ சொன்னார் என்பது மேற்சொன்ன பரிகாரியின் கருத்து என்று அக்காலத்துப் பத்திரிகைகளில் கூறப்பட்டது. இந்த கதை பொய்யல்ல வென்று, அந்த வக்கீல் கனவானே என்னிடம் சொல்லியிருக்கிறார். சுயராஜ்ய தாகம் தூத்துக்குடியில் எந்த வகையில், யார் மூலமாகப் பரவியது என்று இன்னும் விரித்துக் கூற வேண்டுமா?

சிதம்பரம்பிள்ளை உள்ளிட்ட பெரியார்கள் பலர் சேர்ந்து, சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி என்ற சுதேசிக்கப்பல் கம்பெனி யொன்றை ஸ்தாபித்தார்கள். இப்பொழுது மிகக் கிழவராயிருக்கும் சேலம் விஜயராகவாச்சாரியார் அவர்கள் அந்தக் கம்பெனியில் பதினாயிரம் ரூபாய்க்கு அதிகமாக, பங்குகள் எடுத்துக் கொண்டார் என்றால், சுதேசி கப்பல் கம்பெனி தமிழ் நாட்டாரால் எவ்வாறு போற்றி வரவேற்கப்பட்டது என்பது சொல்லாமலே விளங்கும். சுதேசி கப்பல் கம்பெனியோடு, வெள்ளைக்காரக் கம்பெனி போட்டி போட முடியவில்லை. சார்ஜைக் குறைத்துப் பார்த்தார்கள். என்றாலும் ஜனங்கள் வெள்ளைக்கார கப்பல்களில் ஏறுவதாய் இல்லை.

www.padippakam.com



இந்தச் சமயத்தில், சிதம்பரம் பிள்ளையவர்கள் ராஜ-நிந்தனைக் குற்றம் சாட்டப் பெற்று, தீவாந்தர சிட்சை பெற்று, பின்னர் அப்பீலில், அது ஆறு வருஷக் கடின காவலாக மாறிற்று. சிறையில் பிள்ளையவர்களும் சிவமும் பட்ட அவஸ்தைகளை சொல்லி முடியாது. சிறையிலே, "மனம்போல் வாழ்வு" என்ற நூலை, பிள்ளையவர்கள் எழுதி முடித்தார். சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும், பிள்ளையவர்கள் சிறிதுகாலம் வரையில் மனந்தளராமல் இருந்தார். வறுமை, குடும்பம், ஆதரிப்புக் குறைவு - முதலியவைகளுக்கு நடுவே, அஞ்சா நெஞ்சனும் எவ்வளவு காலம் கலங்காமலிருக்க முடியும்?

பிள்ளையவர்கள் திலகர் கோஷ்டியைச் சேர்ந்த தேசபக்தர், ராஜதந்திரி, காந்தியின் சாத்வீக ஒத்துழையாமையில் அவருக்குப் பற்று கிடையாது, நம்பிக்கையுமில்லை. பிள்ளையவர்கள் உணர்ச்சிக் களஞ்சியம். ரொம்ப யோக்கியர். அற்பத்தனம் சிறிதும் இல்லாதவர். பொய் நடையையும் வஞ்சகப் பேச்சையும் அறவே ஒழித்தவர், வெறுத்தவர். அரசியல் உலகில் சாதாரணமாய்க் காணப்பெறும் உபாயங்களை, பிள்ளை அவர்கள் கைக்கொண்டு வாழ்ந்திருப்பாரானால், அவர் என்றைக்கும் தலைவர் என்று மதிக்கப்பட்டு, பிரசங்க முழக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே வந்திருப்பார். வேஷம் போடத் தெரியாததனால், யோக்கியராய், அவர் அக்ஞாத வாழ்வு வாழ்ந்து வர நேர்ந்தது.

ஆறு வருஷ சிறை வாசத்துக்குப் பின்னர், பிள்ளை அவர்கள் விடுதலை பெற்றார். உடனே, புதுச்சேரிக்கு வந்தார். நான் அப்பொழுது புதுச்சேரியில், அரவிந்தரின் ஆசிரமத்தில் இருந்து வந்தேன். சிதம்பரம் பிள்ளை புதுச்சேரிக்கு வந்தது பாரதியாரையும் அரவிந்தரையும் பார்த்துப் பேசுவதற்காக.

பாரதியார், அரவிந்தர், பிள்ளை மூன்று பேரும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த சந்திப்பில் விசேஷம் என்னவெனில், வானைப் பிளக்கும் நகைப்பு. இவ்வளவு

www.padippakam.com



சிரிப்பு இவர்களுக்கு என்னமாய் இருக்க முடியும் என்று நான் என்னையே கேட்டுக் கொண்டேன்.

இவர்கள் பொறுப்பில்லாதவர்கள் அல்ல. எதையும் அலட்சியமாகக் கருதும் தன்மையுடையவர்களும் அல்ல. அப்படியிருந்தும், இவர்களிடையே ஓயாத சிரிப்பா! தன்னம்பிக்கையும் நகைச்சுவையும் ஒரு நாளும் பெரியார்களிடமிருந்து அகலவே அகலாது என்பதை அந்த சம்பவத்திலிருந்து நான் பாடமாகக் கற்றுக் கொண்டேன்.

21 (இருபத்தொன்று) பாஷைகளில் பத்திரிகை வெளியிடவேண்டும் என்று சிதம்பரம் பிள்ளை சொன்னது எங்களில் சிலருக்கு வேடிக்கையாக இருந்தது. உலக முழுவதும் ஹிந்துஸ்தானத்தைப் பற்றி பிரசாரம் செய்ய வேண்டுமானால் 21 பாஷைகளில் பத்திரிகை பிரசுரிக்க வேண்டும் என்று பிள்ளை வற்புறுத்தினார். எப்படி 21 என்று தாம் கணக்கெடுத்தார் என்பதை அவர் எங்களுக்கு விளக்கிக் காண்பித்தார்.

பிள்ளை அவர்கள் உண்மையே பேசுவதில் ஆவல் கொண்டவர். குழந்தை உள்ளம் படைத்தவர். யாரையும் எளிதில் நம்பிவிடும் சுபாவம் கொண்டவர். மேடையில் ஏறி விட்டால், மழையைப் போல பொழிவார். கேட்பவர்கள் ஒரு சமயம் சிரிப்பார்கள்; திடீரென்று கண்ணைத் துடைத்துக் கொள்ளுவார்கள்; பின்னர், அப்படியே, வாயைத்திறந்து கொண்டு, கேட்டுக் கொண்டிருப்பார்கள். பிள்ளையின் பிரசங்கமே தனித் தன்மை கொண்டதாகும்.

தமிழ்நாட்டில், அக்காலத்தில், அதிகார வர்க்கத்தினர் கண்டு நடுங்கியது யார் என்று நினைக்கிறீர்கள்? சிதம்பரம் பிள்ளைதான்.

www.padippakam.com

# 9. எஸ்.எஸ். வாசன்

'நான் சூதாடியல்ல; எனக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை கிடையாது. எதைச் செய்ய நினைத்தாலும், அதைப்பற்றி தீர்க்கமாக யோசித்து முடிவு கண்ட பிறகுதான், அதில் இறங்குவேன். ஒன்றைத் துவக்கி, அதை பாதி வழியில் நிறுத்துவதென்பது என் இயற்கைக்குப் பொருந்தியதல்ல. அவசரப்பட்டு, எதையும் நான் செய்வதுமில்லை. தொழில் செய்து, அதில் நஷ்டப்படுவதில், அர்த்தமே இல்லை. நஷ்டத்துக்குத் தயாராயிருக்கலாம்; ஆனால் தொழிலில் வெற்றிதான் குறியாக இருக்கவேண்டும்.'

இவ்வாறு சொல்லுபவர், வெறும் வேதாந்தம் விளம்பி, சோம்பல் வாழ்க்கையைக் கொண்டவரா? அல்லது சூரப்புலி மாதிரி பேசி, காரியத்தில் சோடை போகிறவரா? அல்லது வெற்றி ஒன்றையே லக்ஷியமாகக் கொண்டு, கண்டவர்களை வதைத்து வேலைவாங்கும் கடும் சித்தக்காரரா? எதையும் சாதித்துவிடலாம் என்ற தன் மயக்கத்தால், அவருக்கு தலைக் கனம் ஏற்பட்டிருக்கிறதா? இயந்திரத்தைப்போல நாள் ஒன்றுக்கு பதினாறு மணிக்கு அதிகமாக வேலை செய்வதால், வாழ்க்கையின் சுவையையும் சுவாரஸ்யத்தையும் அறிய முடியாதபடிக்கு, ரசிகத்தன்மையை அவர் இழந்து விட்டாரா? நகைச் சுவையும் அனுதாபமும் இல்லாத சர்வாதிகாரியா அவர்? இப்பொழுது நான் சொல்லிவரும் கனவான் யார்?

அவர்தான் எஸ்.எஸ். வாசன்; ஆனந்தவிகடனுக்கு உடையவரும் ஆசிரியருமான வாசன். பிரம்மாண்டமான ஜெமினி ஸ்டுடியோவை நிர்மாணம் செய்து, ஸ்ரீ ராமநாத், ஸ்ரீ சேகர், ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு, ஸ்ரீ நாராயணராவ் போன்ற மேதாவிகளையும், கலை நிபுணர்களையும் சகாக்களாகக் கொண்டு, சினிமாப் படம் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வாசன் - ஜி.பி.ஸி. என்ற

www.padippakam.com



பெரிய ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்து, படம் காட்டும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்துவரும் வாசன். வெற்றி ஒன்றையே கண்டு வரும், தோல்வியை கனவிலும் காணப் பொறுக்காத வாசன். சென்னையில் காங்கிரஸ் மாளிகை தீக்கு இரையானதைக் கண்டு மனங்கசிந்து (ஆனால் மனங்கலங்காமல்) அதை மீண்டும் கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று தமிழர்களை தட்டி எழுப்பி, அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக, கணிசமான தொகையை, முதல் 'செக்'காக கொடுத்த வாசன்.

1930-ஆம் வருஷத்தில், தமிழ் உலகம் 'இவன் யார்?' என்று சற்று மரியாதைக் குறைவாகக் கேட்டு, எதை எதையோ பேசிக்கொண்டிருந்தது. இப்பொழுதோ, அவருடைய பெயரைச் சொல்லிச் சொல்லி, குதூகலமடைகின்றது. 1930-ஆம் வருஷத்தில், சாதாரண மனிதராக இருந்த வாசன் 1943-ஆம் வருஷத்தில் 'லக்ஷப்பிரபு' என்ற எல்லையைக் கடந்து, 'கோடீசுவரன்' என்ற பட்டத்தைப் பெறும்படியான நிலையில் இருக்கிறாரே, அது எவ்வாறு நேர்ந்தது என்று தமிழ் உலகம் தன்னையே கேட்டுக்கொண்டு பிரமித்து நிற்கிறது.

போட்டிப் பரிசும் குதிரைப் பந்தயமும்தான் இந்தச் செல்வப் பெருக்குக்குக் காரணம் என்று விஷயம் அறியாதவர்கள் தொண்டை கிழியும்படி பேசலாம். போட்டிப் பரிசை நடத்திய பத்திரிகைக்காரர்களில் எத்தனை பேர்கள் பணத்தில் பெரிய மனிதர்களாக ஆகியிருக்கிறார்கள்? சொல்லுங்கள். குதிரைப் பந்தயத்தில் ஜெயித்து குபேரனான ஒரு மனிதனைச் சொல்லுங்கள், பார்ப்போம்.

'பிச்சை எடுப்பதற்கும் முகவெட்டு வேண்டும். அத்தகைய அதிருஷ்டம் வாசனுக்கு இவை இரண்டிலும் இருந்திருக்கலாம்'

www.padippakam.com



என்று மழுப்புவதிலும் பயனில்லை. அதிருஷ்டத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது என்று வாசன் சொல்லுவதில், நூற்றுக்கு நூறும் அதற்கு மேலும் உண்மை இருக்கிறது. பிச்சை எடுத்துப் பிரபுவானவன் இந்த உலகில் இருந்ததில்லை. அதிருஷ்டத்தை நம்பி, வாழ்க்கை நடத்தத் துணிந்த அசடன், ஓட்டாண்டியாகப் போன கதையைத்தான் இந்த உலகம் கேட்டிருக்கிறது; ஓட்டாண்டியாகப்போன காட்சியைத் தான் இந்த உலகம் பார்த்திருக்கிறது.

ராகுகாலம், தியாஜ்ஜியம், யோகம், கிரகசாரம் முதலிய சூக்ஷும நுட்பங்களின் உதவியைக் கொண்டு, காரிய சித்தி பெறலாம் என்று நம்பி வாழ்ந்த நம்மவர்கள் தரித்திரர்களாகவும் அடிமைகளாகவும் வாழ நேர்ந்ததற்கும் இவைகளைப்பற்றி ஒருசிறிதும் கவலைப்படாமல் காரியம் செய்யத்துணிந்த இங்கிலீஷ்காரர்கள் உலகத்தில் பெருவாழ்வு பெற்று வாழ்ந்ததற்கும் காரணங்கள் யாரேனும் சொல்ல முடியுமா? அந்தக் காரணங்களைத்தான் வாசன், தமது வாழ்க்கையில், தெளிவாக, சந்தேகத்திற்கு இடமில்லாமல் காண்பித்து வருகிறார். 'யோசனை செய்யாமல் எதையும் செய்வதில்லை; தொட்ட வேலையை இடையில் விட்டுவிடுவதுமில்லை' என்று வாசன் சொல்லுகிறாரே, அவைகள்தான் அந்தக் காரணங்கள்.

வெற்றியின் ரகசியங்கள் என்பதை விளக்கிக் காட்டும் நூலைப்போல, வாசன், தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார் என்று சொன்னால், அது மிகையாகாது.

தகப்பனுக்குப் பிள்ளை என்பதால் சிலருக்கு யோகம்; பெரிய படிப்பாளி, பட்டதாரி என்பதால், பலருக்குக் கீர்த்தியும் புகழும்; துறவி என்பதால், ஒருசிலருக்கு மதிப்பு. வாய்த்துடுக்கன் அல்லது சதிகாரன் என்பதால் சிலரிடம் பெரும்பான்மையோருக்கு

www.padippakam.com



திகைப்பும் திகிலும். வாழைப் பழத்தில் ஊசி யேற்றுவதைப்போல, நயமாகப் பேசுகிறான் என்று சிலரை உலகம் கொண்டாடுகிறது; ஆனால் நம்புவதில்லை.

மேற்சொன்ன காரணங்களால் வாசனுக்கு செல்வமும் செல்வாக்கும் புகழும் சேரவில்லை. வாழ்க்கை என்ற போர்க்களத்தில், அங்குலம் அங்குலமாக போராடி, முன்னேறி வந்தவர் வாசன். அவரைத் தட்டிக்கொடுக்க, எந்தப் பெரியாரும் முன் வந்ததில்லை. அவரை மட்டப்படுத்த முன்வந்தவர்கள் எத்தனை பேர்களோ? ஆரம்பத்தில், அவரைப் பற்றி நல்ல வார்த்தை சொல்ல, 'ஈ காக்கை' கூடக் கிடையாது அவதூறு பேசவோ, ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தார்கள். யாரும் வாசனைக் கைதூக்கி விடவில்லை. தன் கையே தனக்கு உதவி என்ற கொள்கையில் ஊறிப்போனவர் வாசன்.

வாசனுடைய இரண்டாவது வயதிலேயே, அவர் அவருடைய தகப்பனாரை இழக்கும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றார். இந்தக் கொடிய சம்பவத்துக்குப் பிறகு, அவருடைய தாயாரே, அவருக்கு 'தகப்பனுமானார்'. 'என் அன்னையால்தான் நான் இந்தப் பெரும் பதவிக்கு வந்தேன்' என்று சத்திரபதி சிவாஜியும் நெப்போலியன் சக்கரவர்த்தியும் சொன்னதில் உண்மை இருக்குமோ இருக்காதோ, அது எனக்குத் தெரியாது. வாசன் அவருடைய தற்போதைய சிறந்த நிலைக்கு வந்ததற்கு காரணம், 'தாயும் தகப்பனும்' ஆன அவருடைய தாயார் தான்.

'அம்மா வீட்டில் இல்லாமல்போனால், எனக்கு என் வீட்டிற்குப்போக மனமில்லை' என்று வாசன், பச்சைக் குழந்தையைப்போல, அபரிமிதமான வாஞ்சையோடு சொல்லும்பொழுது, அவரைப் படம் பிடிக்கவேண்டும் என்று நீங்கள் எல்லோரும் ஆசைப்படுவீர்கள். தாயாரிடம் அவருக்கு இருக்கும்

www.padippakam.com



வாஞ்சை உணர்ச்சி அவ்வளவையும் அவருடைய (குழந்தை) முகத்திலே, அப்படியே காணலாம்.

'தாய்' என்று சினிமாப் படம் பிடிப்பதற்கு நல்ல கதையாக சொல்லுங்கள். அந்தப் படம் பிடித்ததும், நான் சினிமாத் தொழிலிலிருந்து விலகிக்கொள்ளுகிறேன்'' என்று வாசன் என்னிடம் ஒரு சமயம் சொன்னபொழுது எனது உள்ளம் கலங்கி கலகலத்துப்போய்விட்டது. பிள்ளை ராமனுக்குக் கௌஸல்யையிடம் இருந்த வாஞ்சையை, வால்மீகி வர்ணிப்பதை நம்மில் பலர் படித்திருக்கலாம் அல்லது கேட்டிருக்கலாம். தாய் வாஞ்சை சம்பந்தப்பட்ட வரையிலும், அத்தகைய பிரீதியையும், பக்தியையும் வாசன் காண்பிக்கும்பொழுது, அடிமை இந்தியாவில்கூட இதற்காகவேனும் உயிர் வாழலாம் என்று எனக்குத் தோன்றுவதுண்டு.

வாசன் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவர். அவர் தாயார் பிறந்த ஊர் திருத்துறைப்பூண்டி. அவருடைய தகப்பனார் இருந்த ஊர் நாகப்பட்டணத்துக்கு அருகாமையில் ஒரு சிறிய கிராமம். இரண்டு வயதிலேயே தகப்பனாரை இழந்த வாசன், தமது தாய் வீட்டிலேயே, இளமையைக் கழித்தார். சென்னையில், பச்சையப்பன் கல்லூரியில், 'இண்டர் மீடியட்' வகுப்பில், சிறிது காலம் படித்தார். படிப்பிலே அவருக்கு நாட்டம் உண்டாகவில்லை.

அந்தக் காலத்தில் அவருக்கு நண்பரும் துணையாகவும் இருந்தவர் 'தேச பந்து' என்ற பத்திரிகையை நடத்திவந்த காலஞ்சென்ற கிருஷ்ணசாமி பாவலர். சீனுவை (வாசனை அவர் தாயார், சீனு என்றுதான் அழைப்பார்.) பாவலரோடுதான் பலகாலும் பார்க்க முடியும்.

'உருளும் கல் பாசியைச் சேர்க்காது' என்பது இங்கிலீஷ்ல் ஒரு' பழமொழி. அதாவது லக்ஷியம் இல்லாத வாழ்க்கை

www.padippakam.com



சிதறிப்போகத்தான் செய்யும் என்பதைக் குறிப்பிட, இங்கிலீஷ்காரர்கள், இந்தப் பழமொழியை உபயோகப் படுத்துகிறார்கள். சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன், வாசன் 'உருளும் கல்லாக,' இருந்தார். ஆனால் அவர் தமது வாழ்க்கையை, சிதறும்படியாக விட்டுவிடவில்லை. தமது ஆசாபாசங்களையும் எவரிடமும் தெரிவித்ததில்லை. தாய் முகம் ஒன்றையே பார்த்து வளர்ந்த குழந்தை அல்லவா?

வாழ்க்கைக்கு குணம் எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை பணம் என்பது வாசனுடைய உணர்ச்சியிலே ஊறிப்போன ஒன்று. 'இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்' என்பதை வாசன் படித்துத் தெரிந்து கொள்ளவில்லை. நம்மவர்களின் தற்போதைய அர்த்தமில்லாததும் அநாதரவு கொண்டதுமான வாழ்க்கையினின்றும் வாசன் அதை மோப்பம் பிடித்துக் கொண்டார். 'பணமில்லாமல் ஒரு காரியமும் நடக்காது' என்று வெறும் புலம்பல் புலம்பிக் கொண்டிருக்கும் வீணர்களின் கூட்டத்தை, வாசன் சேர்ந்தவரல்ல. 'கடவுள் இருக்கிறார்; மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமல் விடுவானா' என்று தொண்டை வற்றும்படியாக (ஆனால், அதில் நம்பிக்கை சிறிது மில்லாமல்) உளறிக் கொண்டிருக்கும் இனத்தையும் வாசன் சேர்ந்தவரல்ல. படாடோபமில்லாமல், பணத்தை சம்பாதிப்பதும், நன்மை பயக்கும்படியான வழிகளில், அதை விநியோகம் செய்து, ஜனசமூகத்துக்கு தொண்டு ஆற்றுவதும் வாசனது வாழ்நாள் கொள்கையாகும்.

தாம் தேசபக்தன் என்றாவது சமூகத் தொண்டன் என்றாவது கலாரசிகன் என்றாவது இலக்கியப் பிரியன் என்றாவது வாசன் பறைசாற்றினதே இல்லை. சந்தர்ப்பம் வந்தபொழுதெல்லாம் என்றுகூடச் சொல்லுவது தவறு, சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொண்டு, மேலே குறிப்பிட்ட துறைகளில், வாசன் மௌனமாக தொண்டு செய்து வருகிறார். படாடோபம் என்பதே அவருக்கு

6

www.padippakam.com



இனிப்பில்லாத ஒன்று. படாடோபத்தைப் போலவே, அவருக்கு பலாத்காரத்தில் இனிப்பு இல்லை; அதாவது, கட்டாயப்படுத்தி காரியத்தை சாதித்துக் கொள்ளுவது என்பதில் அவருக்கு பிடித்தமே இருப்பதில்லை.

நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி, தம்மிடமிருந்து உதவியைப் பெறவோ அல்லது தம்மை அபாயத்துக்கு உள்ளாக்கவோ யாராவது நினைக்கிறார் என்று வாசனுக்கு தோன்றுமாகில், அவருடைய அந்தராத்மாவிலிருந்தே கொதிப்பும் எதிர்ப்பும் தோன்றிவிடும். 'ஏய்ப்புக்கும் மிரட்டலுக்கும் பலியாவதா' என்று அவருடைய பூரண மூர்த்தியும் கூக்குரலிடும். முகஸ்துதி செய்து, அவரிடம் எந்தக் காரியத்தையும் சாதித்துக்கொள்ள முடியாது. சாதித்துவிடலாம் என்று பகற்கனவு காணுபவர்களுக்கு, வாசனுடைய சுபாவம் விளங்கவில்லை என்று திட்டமாகச் சொல்லி விடலாம்.

நாற்பது மைலுக்கப்பால் வரும் மனிதனை, காற்றுப் போக்கிலிருந்து, பெடகோனியாக் குதிரை மோப்பம் பிடித்து விடுமாம். அதைப்போல, மிரட்டுகிறவர்களையும் ஏய்ப்பாளர்களையும் காததூரத்திலிருந்தே, வாசன் எப்படியோ மோப்பம் பிடித்துவிடுகிறார். காக்காய் பிடிக்கிறவனைக் கண்டால், அவருக்கு எல்லையில்லாத அவமதிப்பு. ரசிகர்களுடனும் கபடமில்லாத மனத்தார்களுடனும் பழகுவதில், வாசனுக்கு அளவு கடந்த பிரியம். காரியம் இவர்களுடன் சுளுவாக சாதித்து விடலாம் என்பதற்காக அல்ல. சங்கீதத்திலும் சித்திரத்திலும் நகைச்சுவையிலும் ஆழ்ந்து கிடக்கும் இவருடைய உள்ளம் அபத்தத்தையும் சுருதி பேதத்தையும் காணப் பொறுப்பதில்லை.

ஏய்க்கப் பார்க்கிறவர்களிடம்தான், வாசன் வெகு எளிதிலே தமது காரியத்தை சாதித்துக் கொள்ளுகிறார். அவர்களுடன் பழகுவதில், அவருக்கு சிரமமே ஏற்படுவதில்லை. ஆனால், ஜன சமூகம் விரைவில் முன்னேற்றம் அடைவதற்கு, ஏய்ப்பாளர்கள்

www.padippakam.com



குறுக்கே தடையாக நிற்பதால், அவர்களிடம் வாசனுக்கு விருப்பு ஏற்படுவதே யில்லை.

நகைச்சுவை, சிரிப்பை விரும்புகிறது; சிரிப்பை உண்டாக்குகிறது; சந்தோஷத்தை ஊட்டுகிறது. பூரணமான புத்திசாலிகளுக்கு, பரிபூரணமான நகைச்சுவை இருப்பது இயற்கை. ஏக்கத்தையும் புலம்பலையும் விரும்பாத வாசன், நகைச்சுவை மூலமாக நாட்டாருக்கு 'ஊக்கமும் உள்வலியும்' கொடுக்க வேண்டும் என்று தீர்மானங் கொண்டார். அதற்கென, 'ஆனந்த விகடன்' பத்திரிகையை விலைக்கு வாங்கினார்.

ஆனந்த விகடனுக்கு சொந்த அச்சுக்கூடம் இல்லாமல் இருக்கவாவது! ஆனால் வாசனிடம் அப்பொழுது போதிய பணமில்லை. உடைந்த அச்சு இயந்திரம் விலைக்கு வந்தது. சரியானபடி 'ரிவெட்' செய்தால், அந்த மெஷின் நன்றாக உழைக்கும் என்று நிபுணர்கள் சொன்னார்கள். பத்திரிகைத் தொழிலை அப்பொழுதுதான் ஆரம்பித்த வாசன், அச்சுத்தொழிலில் அனுபவ மில்லாத வாசன், நிபுணர்களின் வார்த்தையை நம்பி, அந்த மெஷினை வாங்கி சமாளிக்கலாம் என்று தீர்மானங்கொண்ட வாசனுடைய துணிச்சலையும் நம்பிக்கையையும் பாருங்கள். அந்தத் துணிவுக்கும் தன்னம்பிக்கைக்கும் தான் வாசன் என்று பெயர்.

காந்தி 1930-ஆம் வருஷத்தில் ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தின் எதிரொலி என்ன? தவத்தில் ஆழ்ந்து கிடந்தது போலிருந்த தமிழ்நாடு, சிரிப்பை வேண்டிற்று. அந்த சந்தர்ப்பத்தை, வாசன் பூரணமாக உபயோகப்படுத்திக் கொண்டார். சந்தர்ப்பமே வாய்க்கவில்லை என்று அழுபவன் முட்டாள்; அவன் கையாலாகாத கபோதி; அவன் காரியம் செய்ய வகை அறியாதவன்.

சந்தர்ப்பத்தை கை நழுவ விடாமல், அதற்காக கொக்கைப்போல காத்துக் கொண்டிருந்து, அதை பயன்படுத்திக்

www.padippakam.com



கொள்ளுபவன் மேதாவி. வாசன் அனுபவமும் ஆவேசமும் கொண்ட மேதாவி. அவருடைய ஆவேசம் வெறியின் வர்க்கத்தைச் சேர்ந்ததல்ல; அவருடைய அனுபவம் அவரை கோழையாகவும் பிற்போக்காளராகவும் செய்துவிடவில்லை. அவரது அனுபவமும் ஆவேசமும் ஒன்றுக்கு மற்றொன்று பக்கபலமாகவும் தடைக்கல்லாகவும் இருப்பவையாகும்.

விகடப் பத்திரிகை வெற்றியோடு நடக்கவாவது, நீடித்த காலத்துக்கு விகடமாக எழுத முடிகிறதாவது என்று சாபம் கொடுப்பதைப் போல உளறிக் கொண்டிருந்தவர்களுக்கு, ஆனந்த விகடன் புத்தி புகட்டி விட்டது. தமிழ் நாட்டில், பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்த காலமுண்டு. ஆனந்த விகடன் தோன்றியதும் அந்தக் காலம் மறைந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் ஆனந்த விகடனை படிக்கத் துவக்கினார்கள்.

தெருப் பையனிலிருந்து திக்குவிஜயம் செய்யும் வீரனது பதவிக்கு வந்த லார்ட் நார்த்கிளிப் என்ற பிரபல இங்கிலீஷ் பத்திராதிபர் ஒன்று சொல்லுவாராம். அவருடைய பத்திரிகைக்கு ‘டெயிலி மெயில்’ என்று பெயர். ‘டெயிலி மெயில்’ மனப்பான்மையை மக்களிடையே பரப்புங்கள். அதை குழந்தைப்பருவ முதற்கொண்டே வளர்க்க வேண்டும் என்று நார்த்கிளிப் சொல்லுவாராம். இதைப் போலவே வாசன் செய்தார். ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் ஆனந்த விகடனில் ருசி ஏற்படும்படியான வகையில், அதை வெகு திறமையுடன் நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டில், பத்திரிகை படிக்கும் நண்பர்கள் பதினாயிரக் கணக்கில் இன்றைக்கு இருக்கிறார்கள் என்றால் அதற்கு ஆனந்த விகடனும் ‘தினமணி’யும் தான் முக்கிய காரணங்களாகும். வாரப் பத்திரிகைகளில் ஆனந்த விகடனும், தினசரிப் பத்திரிகைகளில் தினமணியும் ‘புதுச் சோட்டில்’ போனதுதான், வாசக நண்பர்களின்

www.padippakam.com



தொகை பெருக்கடைந்ததற்கு காரணமாகும். பலவகைகளில், வாசனைப் போன்றவர் 'தினமணி'யின் ஆசிரியர் ஸ்ரீசொக்கலிங்கம்.

வாசனுக்கும் சொக்கலிங்கமும் தத்தம் துறைகளில் உழைத்து, தமிழ்ப் பத்திரிகைகளின் தன்மையை அடியோடு மாற்றிவிட்டார்கள். பத்து வருஷ காலத்துக்குள் புரட்சிகரமான மாறுதல்களை செய்துவிட்டார்கள். செய்திக்கு 'தினமணி'யும் சிரிப்புக்கு ஆனந்த விகடனும் என்று தமிழ் நாட்டில் இப்பொழுது பேசுவார்களாகில், அதில் ஆச்சரியம் ஒன்றுமே இல்லை.

வாசன் ஆனந்த விகடன் முயற்சியோடு நின்று விடவில்லை. சினிமாப் படங்களை விலைக்கோ, வாடகைக்கோ வாங்கி விநியோகம் செய்யும் வேலையை அடுத்தாற் போல மேற்கொண்டார். இந்த வேலையைச் செய்துவரும் ஸ்தாபனத்துக்கு ஜி.பி.ஸி. என்று பெயர். வாசன் துவக்கும் வேலை எதுவாயிருந்தாலும், அதற்கு ஜெமினி என்ற முத்திரை வைப்பது வழக்கம். ஜெமினி என்பது ஜோசியத்தை சேர்ந்த வார்த்தை. இருந்தாலும் வாசன் ஜோசியம் பார்ப்பதில்லை. யோசனையையும் உழைப்பையும் ஆக்கத் திறனையும் நம்பி வாழும் வாசன், நவக்கிரகங்களை நம்பி வாழ சம்மதிப்பாரா?

படம் விநியோகம் செய்வதிலிருந்து படம் பிடிக்கும் தொழிலில் இறங்குவது தர்க்க சாஸ்திரத்துக்கு முட்டில்லாமல், இயற்கையாக பொருந்தினதுதானே? ஸ்டூடியோ ஒன்றை நிர்மாணம் செய்தார். அதற்கும் ஜெமினி என்ற முத்திரைதான். ஜெமினி ஸ்டூடியோவில் இருபது லக்ஷ ரூபாய் முதல் போட்டிருப்பதாக வாசன் சமீபத்தில், ஒரு கூட்டத்தில் சொன்னார். இருபது லக்ஷ ரூபாயா என்று சந்தேகத்துடன், நீங்கள் என்னைக் கேட்பதுபோலத் தோன்றுகிறது. ஆமாம்! இருபது லக்ஷம் ரூபாய். ஒரு கோடி ரூபாயில் ஐந்தில் ஒரு பாகம்! கணக்கு சரித்தானே! இன்னும்

www.padippakam.com



நாலு பங்கு பூர்த்தியானால், வாசன் கோடீசுரனாகி விடுவாரே என்கிறீர்களோ, ஆமாம் என்று கணக்கையும் முடிவையும் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

தமிழ் தினசரிப் பத்திரிகை ஒன்றை துவக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த வாசன், எப்படியோ ஸ்டுடியோவில் வந்து வீழ்ந்துவிட்டார். என்றாலும், தினசரிப் பத்திரிகை முயற்சி தமது மனதைவிட்டு அகலவில்லை என்று வாசன் உறுதி கூறுகிறார்.

சினிமாத் தொழில் மிகவும் பிடுங்கலான தொழில். செய்திகளின் சுவாரஸ்யத்தையும் தேவையையும் ஆணித்தரமான தலையங்கங்களையும் நம்பி, தினசரிப் பத்திரிகையை நடத்தத் துணியலாம். கதைகளையும் கட்டுரைகளையும் துக்கடாக்களையும் விகடத் துணுக்குகளையும் கொண்டு, வாரப் பத்திரிகையை நடத்தி விடலாம். எதை நம்பி படத்தை பிடிக்கிறது?

நக்ஷத்திரங்களை நம்பியா? கதையை நம்பியா? சம்பாஷணையின் தோரணையை நம்பியா? டைரக்டர்களின் திறனை நம்பியா? ஸெட்டிங்குகளை ஜோடனை செய்யும் 'ஆர்ட் நிபுணர்களை நம்பியா? ஒலி பிடிக்கும் எஞ்சீனியரை நம்பியா? அல்லது படம் எடுக்கும் 'சினோ' நிபுணர்களை நம்பியா? படத்தை சிரத்தையுடன் காண்பிப்பார்கள் என்று விநியோகக்காரர்களை நம்பியா? அல்லது ஸ்டுடியோவில் வேலை செய்யும் சிப்பந்திகளை நம்பியா? இதில் யாரை நம்புவது? யாரை நம்பாமலிருக்கிறது? மிகவும் சிக்கலான பிரச்சினை. இதில் ஒரு சிறிதாவது அனுபமுள்ளவர்களுக்குத்தான், இது எவ்வளவு தொல்லை பிடித்தது என்பது தெரியும்.

ஸ்டுடியோவுக்குள்ளாகவே, (எந்த ஸ்தாபனத்திலும் இருப்பது போலவே) போட்டியும் பொறாமையும் இருக்கும். ஒருவர், நல்ல கதை என்பார். அதைப்போல மட்டமான கதை நான் பார்த்ததில்லை

www.padippakam.com



என்று அவருடைய எதிரி உறுமுவார். சம்பாஷணை விறுவிறுப்பாயில்லை என்பார் ஒருவர். இதைக் காட்டிலும் அதிகமான விறுவிறுப்பை, கதையின் போக்கு தாங்காது என்று இன்னொருவர் சமாதானம் சொல்லுவார். ஒவ்வொரு விஷயத்திலும், இப்படியே தகராறு இருக்கும். வாசனைப் போன்ற பட முதலாளி, எதை ஏற்பது, எதை உண்மை என்று கொள்வது?

ஒரு கக்ஷியை ஆதரித்தால் மற்றொரு கக்ஷி சும்மாயிருக்குமா? படம் எடுக்கும் நிபுணர், சில நக்ஷத்திரங்களுக்கு தகாத சலுகை காண்பித்து, நன்றாகப் படம் எடுத்து, மற்றவர்களை அலக்ஷியம் செய்கிறார் என்ற அவதூறை, சில ஸ்டுடியோக்களில் நான் கேட்டிருக்கிறேன். இது உண்மையாயின், இதற்குப் பரிகாரம் தேடுவது எப்படி?

சாதாரணமாகவே, எந்த ஸ்தாபனத்தையும், கரகரப்பில்லாமல் நிர்வாகம் செய்வது சுலபமான காரியம் அல்ல. அதுவும் நக்ஷத்திரங்களும் தொழில் நிபுணர்களான எஞ்சினியர்களும் மற்றவர்களும் எப்பொழும் மனக்குறை கொண்ட வசன கர்த்தாக்களும் குழுமி யிருந்து, தத்தம் போக்கில் பட முதலாளியை இழுக்கப் பார்க்கும் ஸ்டுடியோவில் நிர்வாகம் செய்வது மிகவும் கஷ்டமான வேலையாகும். இப்பேர்ப்பட்ட வேலையை மேற்கொள்ளுபவனுக்கு, பூமியைக் காட்டிலும் பெரிதான பொறுமை வேண்டும். வாசனுடைய பொறுமையைப் பார்த்து, நாம் எல்லோரும் பிரமிப்புத் தட்டிப்போக வேண்டியது தான்.

பொதுக் குடும்பத்தின் அமைப்பு, உங்களுக்குத் தெரிந்த விஷயம் தான். எல்லோரும் ஒருமனப்பட்டு இருப்பதில்லை; எல்லோருக்கும் லக்ஷியம் ஒன்றாகவும் இருப்பதில்லை. ருசிகளும் பலவாறாக இருக்கும். குடும்பத்தின் தலைவரின் அன்பை, எல்லோரும் கோருபவர்கள்; அதைக் கோர, எல்லோருக்கும் உரிமையுண்டு.

www.padippakam.com



இப்படிப்பட்ட நிலைமையில் குடும்பத் தலைவனது பாடு திண்டாட்டம்தான், தரும சங்கடம்தான். யாரும் பொறாமைப்படத் தேவை யில்லாத இந்த நிலைமையில் தான், ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட வரையில் இருந்து கொண்டு, அதைத் திறம்பட நிர்வாகம் செய்து வருகிறார், வாசன். அப்படியானால் அவர் மேதாவிதான் என்கிறீர்களோ? ஆமாம், ஆமாம் என்று ஆயிரம் தடவைகள் அலுக்காமல் சொல்ல, நான் தயாராயிருக்கிறேன்.

ஆக்கத்திறனும் நிர்வாக வல்லமையும் படைத்திருக்கும் வாசன் எப்படி இருப்பார் என்று நீங்கள் கேட்க வேண்டாம். நானே சொல்லி விடுகிறேன்.

வாசன் உயரமுமல்ல; ரொம்பக் குள்ளமும் அல்ல. உடல் கனம் கொண்டவருமல்ல; மெலிந்தவருமல்ல. சிவந்த மேனியுடையவர். புன்னகை பூக்கும் முகவிலாசம் படைத்தவர். கணீர் என்று பேசும் குரல், அவரது தனிப் பொக்கிஷமாகும். பதட்டமில்லாத நாக்கு; அவசரப்படாத மனது. அலக்ஷியம் செய்து அவதூறு பேசும் தன்மைக்கும் அவருக்கும் வெகு தூரம். தலைக்கன மில்லாமல், நெஞ்சுக்கனம் கொண்டவர். பாலம் போடாமல், பூமியில் சமமாக எல்லாப் பகுதிகளிலும் பதியும் பாதத்தை உடையவர்கள் அதிருஷ்டசாலிகள் என்று சொல்லுவார்கள். வாசனுக்கு இத்தகைய பாதங்கள் அமைந்திருக்கின்றன. இவருக்கு ஏற்பட்டிருக்கிற 'யோகம்' காலிலிருந்து தலைக்கு ஏறிற்றா அல்லது தலையிலிருந்து பாதத்துக்கு இறங்கிற்றா? எது என்று எனக்குத் தெரியாது.

சம்பாஷணைக் காலத்தில், தான் கொண்டிருந்த கொள்கைக்கும் கக்ஷிக்கும் எதிரிடையாக இருந்தாலும் பிறர் சொல்லுவது அனுபவத்துக்குப் பொருந்தின உண்மையாயின், அதை ஒப்புக்கொள்ள, வாசன் தயங்கினதே இல்லை. அது மட்டுமல்ல, அந்த உண்மையை எடுத்துக் காண்பித்தவரை, அப்பொழுதே

www.padippakam.com



கருமித்தன மில்லாமல் பாராட்டுவார். தமக்குத் தெரியாததை மற்றவர் கண்டு பிடித்து விட்டாரே என்று சிறிதும் பொறாமைப்பட மாட்டார். உண்மையை ரசித்து, அனுபவத்தை ஏற்ப வராதலால், வாசன் அவரைப் பாராட்டுவார். இதுதான் பெரிய மனிதனுடைய பிரத்தியேக தன்மையாகும். இந்தத் தன்மை வாசனிடம் அபரிமிதமாக இருக்கிறது.

பணத்தைக் குவித்து வைத்து அழகு பார்ப்பதும் ஆனந்தப்படுவதும் கருமிகளின் வேலையாகும். பணத்தைக் கொண்டு, பிறருக்கு நன்மை செய்ய உளங்கொண்டவர்கள், பணத்தை ஆயுளின் லக்ஷியமாக எண்ணாமல், சம்பாதித்த பணத்தை, நல்ல வழிகளில் விநியோகம் செய்வதிலேயே, கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். இந்த இனத்தைச் சேர்ந்தவர் வாசன் யோசித்து, தயங்கிக் கொடுப்பவர் அல்ல வாசன். நல்லது என்று தோன்றுவதில் அப்படியே அள்ளிக் கொடுக்கும் ஆவல் படைத்தவர் வாசன். ஆனால் அவருடைய வலது கை கொடுப்பது, இடது கைக்குத் தெரியாது. கொடுப்பது பிறருக்குத் தெரிந்தால், அது பிச்சை என்று அவர் கருதுகிறாரோ என்னமோ? ஆடம்பரமில்லாமல் கொடுக்கக் கூடியவர்களை, இந்த நாட்டில், கை விரலில் எண்ணிவிடலாம். அந்த ஒரு சிலரில் வாசன் ஒரு முக்கியஸ்தர்.

வாசன் தமது சுயமரியாதையைப் பறிகொடுக்க இசையவே மாட்டார். உண்மைக்காக, அரிச்சந்திரன் எத்தனையோ கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்தது. அதே கொடுமைகளை, தமது சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காக, அனுபவிக்க நேர்ந்ததால், அதற்காக, வாசன் பின்வாங்கவே மாட்டார்.

நஷ்டமடைந்த பொருளிலிருந்தே, லாபம் அடைய வேண்டும் என்பது வாசனது பிடிவாதமான எண்ணம். இந்தப் பிடிவாதம் தவறல்லவா என்று சிலர் கேட்கலாம். 'நஷ்டம் வந்ததிலிருந்து, லாபத்தை எப்படி

www.padippakam.com



அடைய முடியும்? அப்படி அடைய எண்ணுவது முட்டாள்தனமான எண்ணமல்லவா' என்று சிலர் வாதாடலாம். கேள்வியும் வாதமும் ரசமுள்ளவைகள்தான். ஆனால், வாசனுடைய பிடிவாதத்தில் அர்த்த மிருக்கிறது. அதில் யோசனைக் குறைவு சிறிதும் இல்லை.

நஷ்டம் எப்படி ஏற்படுகிறது? ஒரு சாதனத்தையோ அல்லது ஒரு பொருளையோ தவறான முறையில் உபயோகப்படுத்தினால்தான் நஷ்டம் வரும். பஞ்சு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்றால், அந்த வியாபாரத்தை விட்டுவிட்டு, இரும்பு வியாபாரத்தில் புகுவதா? பஞ்சு வியாபாரத்தில் நஷ்டம் வந்த வகையையும், காரணத்தையும் ஆராய்ச்சி செய்து பார்த்து, ஏற்கனவே வியாபாரம் நடத்திய முறையைத் திருத்திக் கொண்டு, காலதேச வர்த்தமானங்களை இசைத்து கூட்டிப் பார்த்து, முடிவுக்கு வந்து, மீண்டும் அந்த வியாபாரத்தைச் செய்தால், லாபம் வந்துதான் ஆக வேண்டும் என்பது வாசனுடைய கக்ஷி.

வாசன், தமிழில் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அவர் கடைசியாக எழுதின புஸ்தகம் 'இல் வாழ்க்கையின் ரகசியங்கள்' என்று நினைக்கிறேன். இந்த நூலில் ரகசிய மர்மங்கள் எதுவும் கிடையாது. புஸ்தகத்தின் பெயர்தான் 'ரகசியங்கள்'. சாதாரணமாக, மக்கள் தேக ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டியதற்கான முறைகளை, வாசன் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

உலகத்தில், பல நாடுகளில் மணம் முடிக்கும் வகைகளும் இந்தப் புஸ்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகத்தின் பெயரைக் கண்டு மயங்கினவர்கள் பலர்; திகில் அடைந்தவர்கள் சிலர். ஆபாசக் களஞ்சியமாக இருக்குமோ என்று சந்தேகித்தவர்கள் அநேகர். இந்தப் புஸ்கம் சுமார் 5000 பிரதிகளுக்கு அதிகமாக விற்றது.

www.padippakam.com



வாசன், இந்த நூலுக்கு விமர்சனம் எழுதவேண்டும் என்று 'ஊழியன்' பத்திராதிபர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கனை ஒரு சமயம் கேட்டுக்கொண்டார். 'உங்கள் புஸ்தகம் ரொம்பவும் ஆபாசம்' என்று ராய. சொக்கலிங்கம் வெடுக்கென்று பதில் சொன்னார். "இதையே விமர்சனமாக நீங்கள் எழுதினால் போதும்" என்று வாசன், ராய. சொக்கலிங்கத்திடம் திடுக்கிடும்படியாகச் சொல்லிச் சிரித்தார்.

'இதைச் செய்து விடுங்கள், பார்க்கிறேன்' என்று யாரும் விளையாட்டுக்கு கூட வாசனை கேட்கலாகாது. பந்தயம் போடுகிற மாதிரி, எதையும் அவரிடம் பேசினால், அது, விளையாட்டி லிருந்து வினையாக முடிந்துவிடும். இந்த மாதிரிதான் ஒரு சமயம் நடந்தது.

ஸ்ரீ என். தண்டபாணி பிள்ளை, ஸ்ரீ சுந்தரராவ் நாயுடு, வாசன் மற்றும் இரண்டொரு நண்பர்கள் சேர்ந்து ஊட்டிக்கு (உதகமண்டலத்துக்கு) போனார்கள். பிரயாணம் மோட்டார்காரில். ஊட்டிக்கு போன காரியம் முடிந்து, சென்னைக்குத் திரும்பினார்கள். எப்பொழுதும் ஹாஸ்யமாக ஏதாவது சொல்லிக்கொண்டிருக்கும் தண்டபாணி பிள்ளை எப்படியோ, வாசனை, பந்தயத்தில் இழுத்து விட்டார். பந்தயம் இதுதான்.

அநேகமாக, செங்குத்தான பாறை. ஆனால் கார் போக முடியும். அதன் உச்சிக்குப் போய், மறுபடியும் திரும்புவதற்கு, அங்கே போதுமான இடமில்லை. போகிற பாதையில் ஒரு சிறிய கல். அந்தக் கல்லில் அதிக நேரம் காரின் சக்கரம் பட்டால் போதும். கல் உருண்டு புரண்டு, காரோடு பாதாளத்துக்குப் போக வேண்டியதுதான்.

பாதையில் ஒரு பக்கம் மலைச் சரிவு மற்றொரு பக்கம், கிடு கிடு பாதாளம். பாதையோ, மிகவும் குறுகல். இந்தப் பாதையில், மோட்டர் சிறிது தவறி ஓடினால், கூண்டோடு

www.padippakam.com



கைலாசம்தான். செங்குத்தான பாறையில் ஏறி, திரும்பி அதே பாதை வழியாக மோட்டாரை ஓட்டி வந்துவிட்டால், நூறு ரூபாய் பந்தயம் என்று தண்டபாணி பிள்ளை விளையாட்டாகச் சொன்னார்.

வாசன் மோட்டார் கார் வாங்கினது அப்பொழுதுதான். அவருக்கு மோட்டர் ஓட்டும் பழக்கம் அதிகமாயிருக்கவில்லை. தண்டபாணி பிள்ளை போட்ட பந்தயத்தை ஏற்றுக் கொள்ளுகிற சமயமும் சந்தர்ப்பமும் அது அல்ல. ஏன்! கரணம் தப்பினால் மரணம். ஆனால் வாசனுடைய இயற்கை அது அல்ல. 'வாசனைப் பார்த்து ஒருவர் இந்த மாதிரி பந்தயம் போடலாச்சா' என்று வெறிப்பதுதான் வாசனது இயற்கை.

பந்தயத்தை ஏற்றுக்கொண்டார் வாசன். வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் சுந்தரராவ் நாயுடு. 'மங்கம்மா சபதத்தில்' சொல்லுவது போல, சபதம் சபதம்தான். அதை வாசன் நிறைவேற்றத்தான் பார்ப்பார்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, கல்லில் தட்டுப்படாமல், வாசன், உச்சிக்கு காரைகொண்டுபோய் சேர்த்துவிட்டார். இடமில்லாத இடத்தில், வாசன், 'சாலக்காக' காரைத் திருப்பினார். மீண்டும் பழைய பாதையிலே வந்து, கீழே இறங்கி பந்தயத்தை ஜெயித்தார். தண்டபாணி பிள்ளையிட மிருந்து நூறு ரூபாயும் வாங்கிக் கொண்டார்.

இந்தச் சம்பவம் வாசனுடைய சுபாவத்தை எப்படி வெளிக் காண்பிக்கிறது, பாருங்கள். பந்தயத்தை வெறும் பேச்சாக எண்ணுவதுதான் சாதாரணமாக, உலகில் வழக்கம். எதையும் சும்மா பேசக்கூடாது என்று வாசனுடைய சுபாவம் அழுத்தமாக ருசுப்படுத்துகின்றது.

தம்மை, குறைந்தோ, கிண்டலாகவோ பேசவோ, எண்ணவோ, வாசன் யாருக்கும் இடம் கொடுப்பதில்லை. வாசனுடைய வெற்றிகள் யாவும் மனிதனை பிரமிக்கச்செய்யும் இனத்தைச் சேர்ந்தவை.

www.padippakam.com



வாசன் எதையும் புழுதிகாண இடிப்பவர் அல்ல; அவர் நமது பழைய நாகரிகத்தை அடியோடு விட்டு விடுபவர் அல்ல; நவநாகரிகத்தை உதைத்துத் தள்ளுபவருமல்ல; இரண்டையும் ஒன்று சேர்த்து, இந்தக் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு அமைக்கவேண்டுமென்பது தான் அவரது ஆவல்.

நமது சமாஜத்தை, வாசன், ஒரு புரட்டு புரட்டி விட்டுத்தான் மறைவார். நமது சமாஜத்தை, தேங்கி நிற்கும்படியாக, அவர் ஒருநாளும் விடவுமாட்டார். புரட்சி தோரணையில் போனாலும் அதையும் தடுக்கப் பார்ப்பார். ஏன்? நிதானமும் யோசனையும் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது என்பது வாசனது கொள்கை. புரட்சி என்பது நிதானம் தவறிய செயல் என்று வாசன் எண்ணினால், அவரை அந்த அபிப்பிராயத்திலிருந்து திருத்துவது மிகவும் சிரமமான வேலையாகும்.

வாசன் காரியவாதி, லக்ஷியவாதியும் கூட. எனவே, அரணாக எதையும் செய்யவேண்டுமென்பது அவருடைய கருத்து. அவலமாக, அவசரமாக எதையும் செய்ய வாசன் சம்மதிக்கமாட்டார். பிறருடைய ஆதரவு சிறிதுமில்லாமல், வாழ்க்கையில், ஒருவகையில், வெற்றிக்குமேல் வெற்றியை கண்டு வரும் வாசனை முதல்தரமான மேதாவி என்றுதான் சொல்லவேண்டும்.

நமதுநாடு அடிமைநாடாக இல்லாமல் இருப்பின், வாசனுடைய மேதை எவ்வளவு காலத்துக்கு முன்னமேயோ மலர்ந்து புஷ்பித்திருக்கும்! அடிமை நாட்டின் விபரீதத்தை என்னவென்று சொல்லுவது?

www.padippakam.com

# 10. கே.பி. சுந்தராம்பாள்

'எங்க ஆத்துக்காரர்' என்றார் அவர். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. இவர் யாரை தங்கள் ஆத்துக்காரர் என்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு நிமிஷம் அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்துகொண்டிருந்தேன். என்னைத்தவிர, அங்கே கூடியிருந்தவர்களுக்கு, அவர் சொன்னது விளங்கித்தான் இருக்கவேண்டும். ஏனென்றால், அவர்களுடைய முகங்களில் தெளிவைக் கண்டேனேயொழிய, திகைப்பை நான் காணவில்லை.

'எங்க ஆத்துக்காரர்' என்று நாலைந்து நிமிஷங்களுக்குள், இரண்டு மூன்றுதரம் அவர் சொல்லிவிட்டார். கடைசியில், 'எங்க ஆத்துக்காரர்' யார் என்று தெரிந்துகொண்டேன். சுந்தராம்பாளின் காதலின் மாண்பும் அவரது துணிவும் எந்த நிலையில் இருக்கின்றன என்று எனக்கு ஒருவாறு புலனாயிற்று. பகிரங்கமாக கிட்டப்பாவை தமது புருஷன் என்று சொல்லிக்கொள்ள, சுந்தராம்பாளுக்கு எவ்வாறு துணிவு வந்தது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

'உங்களுக்கும் கிட்டப்பாவுக்கும் சட்டரீதிப் படிக்கோ அல்லது சடங்குமுறைப் படிக்கோ கலியாணம் ஆயிற்றா' என்று நிதானமாக கேட்டேன். இல்லை என்றார் சுந்தராம்பாள். என்றாலும், அவர் விதவைக் கோலம் பூண்டிருக்கிறார். சுத்த வெண்மையான கதராடை. தலையில் புஷ்பம் வைத்துக் கொள்ளுவதில்லை. நெற்றியில், விபூதியைத்தவிர, குங்குமமோ அல்லது பொட்டோ வைத்துக் கொள்ளுவதை நான் பார்த்ததில்லை.

கலியாணம் ஆகாமல், சுந்தராம்பாள் விதவைக்கோலம் தரிப்பது விசித்திரமல்லவா? வைதிக உலகம் இதைப் பார்த்தும் கேட்டும், உள்ளம் கொதிப்படையலாம். கலியாணமாகாத விதவையா என்று கௌரவமில்லாமல் கேலி செய்யலாம். சட்டப்படி, சுந்தராம்பாள்

www.padippakam.com



ஜீவனாம்சத்துக்கு லாயக்கு இல்லை என்று வக்கீல்கள் வாதாடலாம். இதைப்பற்றி யெல்லாம் கவலைப்படுவது காதல் அல்ல.

காதலுக்கு கரைகட்ட முடியாது காதலை கட்டுப் படுத்த முடியாது. காதலை, சம்பிரதாய பாஷை பேசும்படியாக நிர்ப்பந்தம் செய்யமுடியாது. சிறிய ஜீவன்களுக்குத்தான் சட்டத்தின் பாதுகாப்பும் சட்டத்தின் மரியாதை ஜோடனையும் தேவை. பரம்பரை என்ற உளையில் அகப்பட்டுத் தவிக்கும் பலவீனர்கள் தான், வைதிகக் கோட்டைக்குள் இருந்துகொண்டு, பத்திரத்தை நாடவேண்டும்.

சீரிய உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும் உத்தமர்களுக்கும் உத்தமிகளுக்கும் அவர்களுடைய சித்தமே சட்டமாகும். அவர்களுடைய கோணாத நடையே, அவர்களுக்கு கேடயமும் கோட்டையும் ஆகும்.

கிட்டப்பாவை, "எங்க ஆத்துக்காரர்" என்று சுந்தராம்பாள் சொல்லுகையில், அது இயற்கையாக இருக்கிறது. விரசமாக காதில் தொனிக்கவே இல்லை. அன்பு ஒரு சிறிது மில்லாமல், காலத்தை, குடும்பம் என்ற பகல் வேஷ நாடகத்தைக்கொண்டு, கொல்லும் தம்பதிகள், "எங்க ஆத்துக்காரர்" அல்லது "எங்க ஆத்துக்காரி" என்று சொல்லும்பொழுதுதான், விரசமாக காதில்படுகிறது. விகடமோ என்று சந்தேகப்பட்டு, சிரிக்கவும் வேண்டியிருக்கிறது.

காதலுக்கு கூச்சமும் அச்சமும் கிடையாது. ஹனுமானுடைய ராமபக்தியை, யாராவது ஏளனம் செய்ய முடியுமா? கடவுள் என்றும் மனச்சாக்ஷி என்றும் காந்தி சொல்லும் பொழுது, அதை அலக்ஷியம் செய்ய முயலுவது அபத்தமாகும். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனின், ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் பாடும்பொழுது, அதை படாடோபம் என்று எண்ணுபவர் பதர் அல்லவா? என் நாடு என் மூதாதைகள் வாழ்ந்து விழ்ந்த பூமி என்று சொல்லி, அதன் மானத்தைக் காப்பாற்ற உயிரைவிடும், உத்தமனை, மூடன் என்று முடிசூட்டும் வீணனை, உலகம் மிதித்து விடும்.

www.padippakam.com



சுத்தமான உணர்ச்சிக்கு பாதுகாப்பு தேவையில்லை; அது கட்டுப்பாட்டுக்கு அடங்கினது மல்ல. கலியாணம் என்பதே எதற்காக? ஒருவனுக்கும் ஒருத்திக்கு மிடையே, அரைகுறைக் காதல் இருந்து, அவர்கள் ஒன்று சேர்ந்தால், அவர்களுடைய மனஒற்றுமை நீடித்து நிற்காமல் போய்விடலாம். அவர்கள் பிரிய நேரும். பயங்கர விளைவுகள் உண்டாகலாம். ஜன சமூகத்தில், எப்பொழுதும் அமைதிக்குறைவே ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

இந்த நிலைமை உண்டாகாமல் இருக்கவும், அரைகுறைக் காதலை ஒழுங்குபடுத்துவதற்கும்தான், கலியாணம் என்ற அழகானதும் அவசியமானதுமான கட்டுப்பாட்டை கண்டுபிடித்தார்கள். எந்தக் கட்டுப்பாடும் சராசரி மனிதர்களுக்கும் பலவீனர்களுக்கும் தான் பாதுகாப்பையும் சக்தியையும் கொடுக்கும். சராசரிக்கு மேற்பட்ட மனிதர்களுக்கு, கட்டுப்பாடு எப்பொழுதுமே, அவர்களின் வளர்ச்சியை தடுக்கும் முட்டுக்கட்டையாக அமைகின்றது.

காந்தியின் மனச்சாக்ஷி, தற்காலத்தில், உலகில் வழங்கிவரும் தர்மசாஸ்திரத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஸர். ஸி.வி. ராமனுடைய மேதை, ஸயன்ஸில் சொல்லியிருப்பதற்கு கட்டுப்பட்டதல்ல. அப்படி அவருடைய மேதை கட்டுப்பட்டிருக்குமாகில், புதிதாக எதையும் அவர் ஸயன்ஸில் கண்டுபிடிக்க முடியாது. உலகத்தில், ஸயன்ஸ் சம்பந்தமான முற்போக்கும் தேக்கமுற்று நின்றுவிடும்.

அதிகம் விவரிப்பானேன்? "எங்க ஆத்துக்காரர்" என்று சுந்தராம்பாள், கிட்டப்பாவைக் குறிப்பிடும் பொழுது, எவருக்கும் கலியாணத்தைப் பற்றியே நினைவு வராது. அது இயற்கையாக இருக்கிறது இன்ப மயமாயிருக்கிறது என்றுதான் எல்லோரும் ஒருமுகமாகச் சொல்லுவார்கள். இனியும் சந்தேகமிருந்தால், ஒருமுறை நீங்களே, நேரில் கேட்டுப் பாருங்கள். அப்பொழுது உங்களுக்கு உண்மை விளங்கிப்போகும்.

www.padippakam.com



கிட்டப்பா நீங்கிய, தனி வாழ்க்கை, சுந்தராம்பாளுக்கு கிடையாதா? கிட்டப்பாவின் கூட்டுறவு இல்லாமல் போனால், சுந்தராம்பாளுக்கு மூர்த்திப் பிரதாபமும் கீர்த்திப் பெருக்கும் ஏற்பட்டிருக்காதா? சுந்தராம்பாள், சந்தன மரத்தைச் சுற்றி ஓடும் மல்லிகைக் கொடி போன்றவரா? இவைகளையும் இவைகளைப் போன்ற கேள்விகளையும் நீங்கள் கேட்கலாம்.

கும்பிடுவதற்கு இரண்டு கைகள் தேவை. காதலுக்கு, இரண்டு உள்ளங்கள் வேண்டும். காதலுக்கு தனித்த உருவமும் உயிரும் இல்லை என்பதை குறிப்பிடும் பொருட்டே, கிட்டப்பாவோடு சேர்த்து சுந்தராம்பாளை சொல்ல நேர்ந்தது. ஒரு கை மாத்திரம் சத்தம் போடாது என்பது உங்களுக்கு தெரிந்ததுதானே?

வாழ்க்கை என்பதே இல்வாழ்க்கைதான். இல்வாழ்க்கை என்றால் அது கட்டிடத்துக்குள் இருக்க வேண்டுமென்பதல்ல. இல்வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணும் கூடிய இயற்கையான வாழ்க்கையாகும். அதனாலேதான், நம்மவர்கள் குழந்தைகளுக்கு கதை சொல்லும்பொழுது, "ஒரு ஊரிலே, ஒரு புருஷனும் பெண்சாதியும் இருந்தார்கள்" என்று கதையை ஆரம்பிக்கிறார்கள். இவ்வாறு கதையைத் துவக்குவது கர்நாடகமாயிருக்கலாம்! ஆனால் அது உண்மை.

இந்த தேசத்தில், ஆணுக்குத்தான் சன்னியாச பாத்தியம்! பெண்ணுக்கு இல்வாழ்க்கைதான். எனவே, சுந்தராம்பாளுக்கு இல்வாழ்க்கை உண்டா அல்லது அவர் நடத்திவந்த வாழ்க்கை, இல்வாழ்க்கைதானா என்று கேட்கக் கூடியவர்களுக்காகத்தான், கிட்டப்பாவைப் பற்றி, முதன் முதலாக குறிப்பிடப்பட்டது.

கிட்டப்பா என்ற கந்தர்வன் (இவ்வாறு சுந்தராம்பாள் கிட்டப்பாவைப்பற்றி அருமையாக குறிப்பிடுகிறார்) சுந்தராம்பாளின் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்தாலும், சுந்தராம்பாளின் பெயர், தமிழ்நாடு முழுவதும் எளிதிலே பரவியிருக்கும். சுந்தராம்பாள் ஒரு தனிப் பிறவி.

7

படிப்பகம்

www.padippakam.com



இள வயதில், சுந்தராம்பாள் இருந்த நிலையைக் கொண்டு, தற்போது அவர் இருக்கும் நிலைக்கு வருவார் என்று எவரும் ஜோசியம் சொல்லியிருக்க முடியாது. திருச்சி ஜில்லா, கொடுமுடி கிராமத்தில் சுந்தராம்பாள் பிறந்து வளர்ந்தார். பள்ளிக்கூட வாசனை மிகச் சொற்பம். பாட்டுக்கு சிக்ஷை அதைவிட சொற்பம். ஆளைத்துளைத்துப் பார்க்கும் விழிகள் இருப்பினும், சுந்தராம்பாளின் மூர்த்தி சிறிது. வாழ்க்கைக்கு, பக்கபலமான பணம், சுந்தராம்பாளின் குடும்பத்தாருக்கு அதிகம் இருந்ததில்லை.

பால்யத்தில், "ஊரிலே ஒரு பெண்" ஆக இருந்த சுந்தராம்பாள், தமிழ்நாடு முழுவதும் புகழ்ந்து கொண்டாடும்படியான கீர்த்தியை எவ்வாறு சம்பாதிக்க முடிந்தது? அது கடவுளின் கிருபையாலா? கிட்டப்பாவின் கூட்டுறவினாலா? காலத்தின் பேருதவியாலா? அல்லது அவரது ஊக்கத்தினாலும் உழைப்பினாலுமா?

தங்கள் கையை நம்பி வாழ்பவர்களைத்தான் கடவுள் கைதூக்கி விடுகிறார் என்று சொல்லுவார்கள். கிட்டப்பா கந்தர்வனாயிருக்கலாம். அந்த கந்தர்வனும் "சோப்பளாங்கி" (அசட்டு) சுந்தராம்பாளைக் கண்டு, அவரிடம் ஈடுபட்டிருக்கமாட்டார். கந்தர்வனும் "பூலோக ரம்பையை"க்கண்டுதான் மையல்கொள்ளுவான் என்று கதைகள் சாக்ஷி சொல்லுகின்றன. காலத்தின் பேருதவியும் "கனமான" பேர்வழிகளுக்குத்தான் கிட்டுகின்றது என்று சரித்திரம் முறையிடுகின்றது.

எனவே, சுந்தராம்பாள் தமது இயற்கையான சாதுர்யத்தையும் சாகஸத் திறனையும் கொண்டுதான் முன்னேறியிருக்கவேண்டும்.

பதினைந்து வயதுக்குள்ளாகவே, சுந்தராம்பாள் "அயன் ஸ்திரீ பார்ட்" பதவிக்கு வந்துவிட்டாராம். இது ஆச்சரியம்தான். நாடக மேடையில், இத்தகைய "பிரமோஷன்" யாருக்குமே இருந்ததில்லை.

www.padippakam.com



மாஸ்டர் கிட்டப்பா, அதிபால்யத்திலேயே, பெயர் எடுத்ததைப்போலவே, சுந்தராம்பாளும் சிறு வயதிலேயே, தமது பெயரை, நாடக மேடையில் நாட்டி விட்டார். இது நியாயம்தான். இல்லாவிட்டால் இருவருக்குள்ளும் ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்கமுடியும்?

சுந்தராம்பாள் கிட்டப்பாவை சந்திக்குமுன், பிரபல "ஸ்திரீ பார்ட்" ஆகிவிட்டார். நாடக மேடையில், இவருக்கு தகுந்த "ராஜ பார்ட்" யாருமே கிடைக்கவில்லையாம். வந்த "ராஜ பார்ட்"டுகளெல்லாம், சமாளிக்க முடியாமல், சில தினங்களுக்குள் ஓடிவிடுவார்களாம்.

இந்த நிலைமையில், சுந்தராம்பாள் கொழும்பில், ஒரு சமயம், "ராஜ பார்ட்" கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்தாராம். அதுவே, கிட்டப்பா, கன்னய்யா கம்பெனியை விட்டுப் பிரிந்த காலம். ராஜபார்ட்டுக்கு, கிட்டப்பா வரவழைக்கப் பட்டார். கிட்டப்பா கொழும்புக்கு வருமுன்னர், எத்தனையோ பேர்கள், கிட்டப்பாவோடு சேர்ந்து, "ஆக்ட்" செய்யப்படாது என்று சுந்தராம்பாளை தடுத்துப் பார்த்தார்கள்.

அவர்கள் சொன்ன காரணம் என்ன? கிட்டப்பாவின் சங்கீதத்துக்கு முன்னால், சுந்தராம்பாளின் பாட்டுத்திறன் எடுபடாது என்பதுதான் அவர்கள் கூறிய காரணம். கிட்டப்பாவினுடையது கந்தர்வகானமாயிற்றே? அதற்குமுன், நீ நின்று பெயர் சொல்லவாவது? சேர்ந்து ஆடவேண்டாம். உன் பெயர் கெட்டுப்போகும் என்று நெருங்கிய உறவினர் ஒருவர் சுந்தராம்பாளைத் தடுத்தார்.

"கிட்டப்பா கந்தர்வனா யிருக்கலாம்; ஆனால் சுந்தராம்பாள் அவருக்கு சளைத்தவரல்ல" என்று பதட்டமில்லாமல், சுந்தராம்பாள் பதில் சொன்னாராம். தன்னம்பிக்கைத்தான் வெற்றியின் ரகசியம் என்று சொல்லவும் வேண்டுமா?

குறித்த நாளில், கிட்டப்பா, கொழும்புக்கு தமது தோழர்களுடன் வந்து சேர்ந்தார். ஸ்டேஷனில் வந்து இறங்கியதும், 'சுந்தராம்பாளை

www.padippakam.com



அலக்ஷியமாக நினைக்க வேண்டாம்' என்று சில நண்பர்கள், கிட்டப்பாவுக்கு எச்சரிக்கை செய்தார்களாம். எச்சரிக்கையினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, கிட்டப்பா, நாடக நாளுக்குமுன், சுந்தராம்பாளை அவர் இருந்த ஜாகையில் போய்ப் பார்த்தார்.

சந்திப்பை கூடுமானவரையில், சுந்தராம்பாளின் சொற்களிலேயே சொல்லுகிறேன். சுந்தராம்பாள் சொல்லுகிறார்:-

'நான் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். ராஜா மாதிரி ஒருத்தர், உன்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்று என் தாய் என்னிடம் வந்து சொன்னார். நான் எழுந்திருந்து, முகத்தை சுத்தம் செய்து கொள்ளு முன்னமேயே, 'எங்க ஆத்துக்காரர்' (அப்பொழுது கிட்டப்பா) என் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

"நான் பிரமித்துப் போனேன். கூச்சம் சிறிதும் இல்லாமல், என் கட்டிலில் வந்து உட்காரவாவது என்று எண்ணினேன். ஆனால், அவர் பேசத் துவக்கி விட்டார். என்ன கம்பீரமான தோற்றம்! என்ன ஸ்பஷ்டமான வாக்கு! எனது கந்தர்வன் வந்துவிட்டார் என்று தோன்றிற்று.

"நாடகத்துக்கு முன், ஒத்திகை வேண்டும் என்றார். வேண்டாம் என்றேன். என் பாடல்கள் வேறுவிதம் என்றார். எப்படி யிருந்தாலும் சரிக்கட்டிக் கொள்ளுகிறேன் என்றேன். நீ ஏமாந்து போவாய் என்றார். யார் ஏமாந்து போகிறார் என்பது பின்னாலே தெரிகிறது என்றேன். அவர் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். நானும் அவருடைய முகத்தை அப்படியே விழுங்கிக் கொண்டிருந்தேன்.

'இதுதான் எங்கள் முதல் சந்திப்பு. அன்றுமுதல் அவர் மறைந்துபோகும் வரையில், நாங்கள் பிரிந்து போகவே இல்லை'.

இவ்வாறு சுந்தராம்பாள் சொன்னார். அவர் சொன்னதன் சாரமாக, நீங்கள் இதை கொள்ளவேண்டும். அவர் இதைச்

www.padippakam.com



சொன்னபொழுது, அவருடைய குரலும் முகமும் மாறிமாறிக்கொண்டு போன வகையை, என்னால் வர்ணிக்க முடியாது.

கனவும் நனவும் காதலும் பிரிவும் கலந்து வந்த வரலாறை நேரிலே கேட்டால்தான், அதன் பூரண பாவமும் உங்களுக்கு விளங்கும். ஏதோ கற்பனை செய்து பாருங்கள். கை கூடின வரையில், லாபம் தான்.

'என்னை, அவர் பலகாலும் எப்படி எப்படியோ ஆட்டி வைப்பார். இருந்தாலும் அதைப்பற்றி, ஏன் இப்பொழுது வருந்த வேண்டும்' என்று சுந்தராம்பாள், சிறு கண்ணீர்த் துளிகளுடன், சொல்லும்பொழுது, மனதுக்கு ரொம்பவும் வருத்தமாயிருந்தது.

'அவர் இறந்துபோன செய்தி வந்ததும், ரூ.18,000 எடுத்துக்கொண்டு போனேன். கடன் வைத்துவிட்டு, அதைக் கொடுக்க முடியாமல் அவர் இறந்துபோனார் என்ற அவக்குரலை கேட்க, என் மனம் பொறுக்கவில்லை. ஒருவரும் அவ்வாறு சொல்லக்கூடாது என்பது என் சங்கற்பம்' என்று சுந்தராம்பாள் சொன்னபொழுது, என் உடல் 'கிடு கிடு' வென்று ஆடிவிட்டது.

காதலின் மாண்பு எந்த தன்மை கொண்டது என்பது எனக்கு ஒருவாறு, அப்பொழுது விளக்கமாயிற்று.

இனி, சுந்தராம்பாளை, தனி முறையில், கவனித்துப் பார்ப்போம். தமிழ் நாட்டு நாடக மேடையில், சுந்தராம்பாளுக்கு கிடைத்த புகழைப் போல, வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. இதன் காரணம் என்ன?

சுந்தராம்பாள், சந்தர்ப்பத்தின் தன்மையை உணர்ந்து, அதற்குத் தேவையான முக, குரல் பாவங்களோடு, 'ஆக்ட்' செய்தார். எந்த 'பார்ட்' போட்டுக் கொண்டாலும், அதை வெறும் 'பார்ட்' என்று எண்ணிவிடாமல், அதற்குள் எப்படியோ நுழைந்து, 'பார்ட்டை'

www.padippakam.com



உயிருள்ள ஒன்றாகச் செய்யும் அபூர்வமான சக்தி சுந்தராம்பாளிடம் இருப்பது ஒரு காரணம்.

பாவம் தெரிந்து ஆடவும் பாடவும் வேண்டும் என்று இப்பொழுது எல்லாப் பகுதிகளி லிருந்தும், நியாயமான கூச்சல் கிளம்பி யிருக்கிறது. இவ்வாறு கிளம்புவதற்கு முன்னமேயே, பாவத்தை உணர்ந்து பாடியும் 'ஆக்ட்' செய்தும் தமிழ் மக்களை மகிழ்வித்த சுந்தராம்பாளை எவ்வளவு பாராட்டினாலும் போதாது என்பது என் எண்ணம்.

சுந்தராம்பாளின் குரல் இனிமையைப் பற்றி என்ன சொல்வது என்று எனக்கு தெரியவில்லை. சுந்தராம்பாளின் குரல், கிட்டப்பாவின் சங்கநாதக் குரல் அல்ல. ரொம்பவும் சன்னம் கொண்டதுமல்ல. கிரீச் சென்று ஆகாயத்தைப் பிளந்து செல்லும் குரலும் அல்ல. சுந்தராம்பாளின் குரல், அடித்தொண்டையிலிருந்து வருவதாகத் தோன்றும். குரலுக்கு வசீகரத்தன்மையை அளிப்பதற்கு, இதுதான் காரணமோ, என்னவோ?

நாடகத்தில், நடிப்பதாக எண்ணம் கொள்ளாததால், அவருடைய இயற்கையான சுபாவம்தான் வெளி வருகின்றது. எனவே, ஜனங்கள் அதில் ஈடுபட்டுப் போய் விடுகிறார்கள்.

சுந்தராம்பாளின் நாடக மேடை வெற்றிக்கு கிட்டப்பாவும் ஒரு காரணம். உண்மையான காதலர்கள் இவர்கள் இருவரும். எனவே, உண்மைக் காதல், நாடக ஆக்டிலும், பரவிக் கிடப்பதைக் கண்டு, தமிழ் நாடு குதூகலம் அடைந்தது. உயர்ந்த ரகமான தன்னம்பிக்கையோடும் பாத்திரத்தின் சுபாவத்தை உணர்ந்தும், சுந்தராம்பாள், 'ஆக்ட்' செய்ததால், அவர் எளிதிலே வெற்றி பெற்றார்.

'சாதுர்ய-இங்கித சம்பாஷணையே! உன் பெயர்தான் சுந்தராம்பாள்' என்று சொல்லும்படியாக, அவ்வளவு அழகாகவும்

www.padippakam.com



சாதுர்யத்தோடும் சுந்தராம்பாள் சம்பாஷணை செய்கிறார். சுந்தராம்பாளோடு சம்பாஷணை செய்வது, நல்விருந்தாகும். பேச்சுக்கு பேச்சு, சிங்காரம்; வார்த்தைக்கு வார்த்தை, ஜவாப்பு; கருத்துக்கு கருத்து, போட்டி; கற்பனைக்கு கற்பனை, மகிழ்வும் மல்யுத்தமும். ரஸமான கதைக்கு, பதில் ரஸமான கதை. யோசித்துப் பேசும் பேர்வழிகளோடு, சுந்தராம்பாள் தீர்க்கமாக யோசித்துப் பேசுகிறார். குழந்தை மாதிரி பேசுகிறவர்களிடம் வெடுக்கு வெடுக்கு என்று பேசுகிறார்.

சுந்தராம்பாள் சிறந்த தேசாபிமானி. எப்பொழுதும் கதர் ஆடை என்று ஏற்கனவே சொன்னேன். தமிழ் நாட்டில், சட்ட சபைத் தேர்தல்களிலும் மற்றும் முக்கியமான தேர்தல்களிலும் காங்கிரஸ் பெரும்பான்மையில் வெற்றி பெற்றதல்லவா? அதற்கு, சத்திய மூர்த்தியின் பேச்சும் சுந்தராம்பாளின் பாட்டும் காரணங்கள் என்று பலர் சொன்னதை, நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கிட்டப்பா சுந்தராம்பாள் நடித்த நாடகங்களுக்கு டிக்கெட்டு கிடைக்காமல் வீடு திரும்பியவர்கள் ஆயிரக் கணக்கானவர்கள். ஒரு கூட்டத்தில் சுந்தராம்பாள் பாடப் போகிறார் என்றால், அந்தக் கூட்டம் பெருங் கூட்டம் ஆகிவிடும். சுந்தராம்பாளின் பாட்டைக் கேட்பதற்கு அவ்வளவு ஆவல்!

சுந்தராம்பாளின் சிரிப்பே தனிச்சிரிப்பு. சொல்லுவதை ரசித்துக் கேட்பதில், சுந்தராம்பாளுக்கு இணை எத்தனை பேர்கள் இருக்க முடியும்? சொல்லுபவர், ஒன்றைச் சொல்லி முடிக்கு முன்னமேயே, அதை முழுவதும் உணர்ந்தவர் போல, சுந்தராம்பாள் முகத்தை வைத்துக் கொண்டு, காது கொடுத்துக் கேட்பது, பார்வைக்கு மிகவும் அழகாக இருக்கும்.

ரசிகர்களின் மத்தியில், சுந்தராம்பாளுக்கு குதூகலம்தான். பாவனை அடக்கம் கொண்டோ, பார்ப்பவர்கள் கேலி செய்வார்கள் என்று பயந்தோ, சுந்தராம்பாள் தமது குதூகலத்தை குறைத்துக்

www.padippakam.com



கொள்ளுவதேயில்லை. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற இன்பம் அனைத்தையும் அனுபவித்து விட வேண்டும் என்று அவர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் போலும்!

சிறு நெறிக்கும் சுந்தராம்பாளுக்கும் சம்பந்தமே இல்லை. பெருவாழ்வு, புகழ், தொண்டு, இவைகள்தான் சுந்தராம்பாள் விரும்பும் அருந்தனங்கள். அவர் இருக்கிற இடத்தில் எப்பொழுதும் கலகலப்பைக் காணலாம் என்று ஒரு நண்பர் சொன்னார். கள்ளம் கவடு இல்லாதவர்கள், கல கலப்பாய் இல்லாமல் இருக்க முடியாது. ரஸிகர்கள் கலகலப்பாய்த்தான் இருக்க முடியும்.

சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் தமிழ் நாட்டை, ஒரு ஆட்டு ஆட்டி விட்டார்கள். அவர்களுடைய மேதையையும் காதலையும் கண்டு, தமிழ் நாடு பரவசமடைந்தது. தமிழர்கள் இன்பத்தை அனுபவிக்க முடியாமல் ஏங்கிக் கிடந்த காலத்தில், நாடக மேடையின் மூலமாக, அவர்களுக்கு இன்பத்தை ஊட்டிய சுந்தராம்பாள் நீடூழி வாழ்க!

# 11. என்.எஸ். கிருஷ்ணன்

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன், (1940-இல் என்று நினைக்கிறேன்) ஒருநாள் சாயங்காலம், நான் சென்னை ரேடியோ நிலையத்துக்கு போய்க்கொண்டிருந்தேன். அன்றைக்கு, ரேடியோவில் என்னுடைய 'புரோகிராம்' ஒன்று இருந்தது. அதற்காக நான் போனேன்.

ரேடியோ நிலையத்துக்கு வெகு சமீபத்தில், ஒரு பார்க் (காற்று வாங்குவதற்காக பெஞ்சுகள் போட்டிருக்கும், செடிகள் நிறைந்த தோட்டம்) இருக்கிறது. அங்கே ரேடியோ செட் ஒன்று உண்டு. அன்றைக்கு நூற்றுக் கணக்கானவர்கள் பெரும்பாலும் பாமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் - கூடியிருந்தார்கள்.

என்னோடு ஒரு நண்பர் வந்தார். 'ஏது, இத்தனை பேர்கள் கூடியிருக்கிறார்களே, என் புரோகிராமை கேட்பதற்கா' என்று கேலியாக, அந்த நண்பரைக் கேட்டேன். 'இல்லை. உங்களுக்கு முன் என்.எஸ் கிருஷ்ணன் புரோகிராம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்க, நூற்றுக் கணக்கானவர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். உங்களுக்காக என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம்' என்று நண்பர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

ஸர்.ஸி.வி. ராமன் ரேடியோவில் எவ்வளவு அழகாகவோ பேசுகிறார். நுட்பமாயிருக்கும் ஸயன்ஸை, தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். அவர் பேசுவதில் விஷயம் இருக்கிறது; நகைச் சுவை ததும்புகிறது. அப்படியிருந்தும், அவரைக் கேட்பதற்கு, நூற்றுக் கணக்கானவர்கள் இங்கே கூடுவதில்லை. அழகாக அவர் தமிழில் பேசினாலும், கூட மாட்டார்கள் என்பதே என் கருத்து.

ராமனும் மேதாவி; கிருஷ்ணனும் மேதாவி. புராண ராமனையும், கிருஷ்ணனையும் பற்றி நான் சொல்லவில்லை.

www.padippakam.com



பூலோகத்தில், தற்காலத்தில் உலகப் புகழோடு வாழும் ஸர்.ஸி.வி. ராமனையும், எப்பொழுது பேசப் போகிறார் என்று நூற்றுக் கணக்கானவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் என்.எஸ். கிருஷ்ணனையும் பற்றித்தான் நான் பேசுகிறேன். அவதாரங்களைப் பற்றி அல்ல.

பாமர ஜனங்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களையும் துயரங்களையும் சில நிமிஷங்களுக்கேனும் மறக்கப் பார்க்கிறார்கள். அரிசி இல்லை என்று அவர்கள் கேட்டால், அரசாங்கம் கோபிக்கிறது. விறகு இல்லை என்றால் வெருட்டி அடிக்கிறார்கள். மலிவான துணி வரும் வரும் என்று குடுகுடுப் பாண்டிகளைப்போல, அதிகாரிகள் தினமும் சொல்லி வருகிறார்கள்.

அரிசியும் விறகும் துணியும் கிடைக்காத பாமர ஜனங்கள் உயிரை விட்டு விட முடியுமா? அவர்களுக்கு சந்தோஷம் என்பதே கிடையாதா? அல்லது சந்தோஷத்தை அனுபவிக்க, அவர்களிடம் சக்தி இல்லையா? கண்டிப்பாய் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய கதி என்ன! காசில்லாமல் சந்தோஷத்தைப் பெறவேண்டும். காசு இல்லாமல், ரேடியோ மூலமாக சந்தோஷத்தைக் கொடுக்கும் கிருஷ்ணனை, அவர்கள் ஏன் தெய்வமாக கும்பிட மாட்டார்கள்?

சமீபத்தில், கிருஷ்ணனுடைய ஆக்டை ஒரு சினிமாப் படத்தில் பார்த்தேன். நான் பிரமித்துப் போனேன். கழைக் கூத்தாடிகளின் கூட்டத்தில் (படத்தில்) கிருஷ்ணன் இருக்கிறார். அவர்கள் வித்தை காண்பிக்கப் போவதை, கிருஷ்ணன் அறிவிக்கிறார். இந்த அறிவிப்பிலே, சாதுத்தனமான கொனஷ்டை.

முதலிலே, பாம்புக்கும் கீரிக்கும் கலியாணம்- இல்லே-. சண்டை என்கிறார். பாம்புக்கும் கீரிக்கும் சண்டை என்று எப்பொழுதும் கேட்டுப் பழகியிருப்பவர்கள், சண்டைக்கு பதிலாக கலியாணம் என்று கேட்டதும் கலகல வென்று சிரிக்கிறார்கள்.

www.padippakam.com



கிருஷ்ணன், கலியாணம் என்று சொல்லும் விதமே அலாதியாக இருக்கிறது.

இன்னொரு அறிவிப்பு. இதோ கையிலிருக்கிற மாங்கொட்டையிலிருந்து, கூடையிலிருக்கிற மாஞ்செடியை வரவழைப்போம் என்று வித்தை ரகசியத்தை விகடமாகவும் வேடிக்கையாகவும் ஆனால் சாதுத்தனமான குரலோடு, இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு, கிருஷ்ணன் சொல்லும்பொழுது, தாங்க முடியாத துயரம் நேர்ந்திருந்தாலும் அதை உதறித் தள்ளிவிட்டு, சிரிக்கத்தான் தோன்றுகிறது.

அவர் நடக்கிற நடையும் நிற்கிற நிலையும், பேசுகிற குரலும் விழிக்கிற விழியும், எல்லாம் நம்மிடத்தில் சிரிப்பை அடிவயிற்றிலிருந்து கிளப்பத்தான் செய்கிறது.

ஹாஸ்யத்திலே, எந்த ரகம் மிகவும் உயர்ந்தது? பத்துப் பேர்கள் கூடியிருக்கிற இடத்தில் எல்லோரும் சிரிக்கவேண்டும். அப்படி சமுதாயமாக எல்லோரும் சிரிக்காமல், ஓரிரண்டு பேர்கள் தலைகுனிந்து கொண்டு, அவமானம் அடைந்தவர்களைப் போல இருக்க நேரின், அந்த விகடம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல.

தன்னைத்தானே நொந்து கொள்ளுவது மாதிரி சொல்லி, எல்லோரையும் கலகல வென்று சிரிக்கச் செய்வதுதான் உயர்ந்த ரகமான விகடமாகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே வினோதமாயிருக்கிறது. யாரை அவர் கேலி செய்து, கிண்டல் பண்ணுகிறாரோ, அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில், கிருஷ்ணன் கேலி செய்கிறார்.

கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார்; அதை விளையாட்டு பொம்மையாக அடித்து விடுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



நான் சிரிக்கமாட்டேன் என்பதுபோல வாயை கெட்டியாக மூடிக்கொண்டிருப்பவர்களையும் கோட்டை வாசல் திறந்தது போல, வாயைத் திறந்து பார்த்துக் கொண்டேயிருக்கும்படியாக கிருஷ்ணன் செய்து விடுகிறார்.

வாசன் நடத்திவரும் பத்திரிகை ஆனந்த விகடன். இதே ஆனந்தவிகடன் என்ற பெயர், கிருஷ்ணனுக்கு மிகவும் பொருத்தமாயுள்ளதுதான். இந்த இரண்டு விகடர்களும் தமிழ் நாட்டின் தனிப் பிறவிகளாகும். கிருஷ்ணன் இல்லாத சினிமாப்படம் ஓடாது என்ற பயத்தை, கிருஷ்ணன் எப்படியோ பட முதலாளிகளின் மனதில் உண்டாக்கி விட்டாரே! இந்த மாதிரி, இதற்குமுன் யார் செய்திருக்கிறார்? யாரால் செய்ய முடிந்தது?

நாடக மேடையில், கிட்டப்பா இந்த மாதிரி செய்திருக்கிறார். கிட்டப்பா நடிக்கும் நாடகங்களுக்கு ஊரே திரண்டு போவதைப் போல இருக்கும். நாடக கண்டிராக்டர்கள் உபசாரத்தோடு ஏன் அவரை கூப்பிட மாட்டார்கள்? கிருஷ்ணன் படத்தில் இருந்தால், அவர் கையை அசைத்தாலும் போதும். அதை ரசிப்பது என்று ஜனங்கள் இப்பொழுது கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது கிருஷ்ணனுக்கு கிடைத்திருக்கும் பாக்கியம் அல்ல. அது கிருஷ்ணன் செய்யும் வித்தையின் பயனாகும்.

ஓகோ, அப்படியா என்று ஒன்றும் அறியாத அப்பாவி போல, கிருஷ்ணன் பேசும்பொழுது, அந்தக் குரலில் ஏதோ காந்தம் இருந்துகொண்டு, ஜனங்களை அப்படியே இழுக்கிறது.

இங்கிலீஷ் படித்துவிட்டு, நாகரிகத் தூண்கள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருப்பவர்களில் பலர், என்னிடம் கிருஷ்ணனைப்பற்றி, வாதாடி யிருக்கிறார்கள். முன் பின் பார்த்திராத நகைச்சுவையும் ஆக்டும் கிருஷ்ணனிடம் இருக்கின்றன என்பது என் கருத்து. படித்த நண்பர்களின் பலர் இதை ஏற்றுக்கொள்வதில்லை.

www.padippakam.com



கிருஷ்ணன் ஆக்டிலே பிரமாதமாக ஒன்றும் இல்லை என்று அவர்கள் அதட்டிப் பேசுவதைக் கண்டால், எனக்கு சிரிப்பு வரும்.

சார்லி சாப்ளின் பக்கத்தில் நிற்கக்கூட கிருஷ்ணனுக்கு தகுதி இல்லை என்று அந்த நண்பர்கள் (தமிழில் அல்ல) இங்கிலீஷில் இடி இடிப்பதைப் போல சொல்லுவார்கள். தமிழ், இங்கிலீஷைப்போல ஆகுமா என்று தமிழன் என்ற உணர்ச்சியே இல்லாமல் பேசுகிற மனிதனிடம் எந்த வாதமும் செல்லாது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

சர்ச்சில் எவ்வளவு கம்பீரமாகப் பேசுகிறார், சாப்ளின் எவ்வளவு ஹாஸ்யத்துடன் நடிக்கிறார், ஷா என்ன கிண்டலாக எழுதுகிறார் என்று இங்கிலீஷ் படித்த, தமிழை மறந்த தமிழர்கள் புலம்புவதை பொருள்படுத்தத் தேவையே இல்லை. தங்கள் புலம்பலின் பலன் இன்னதென்று அறியாமலே, இவர்கள் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பலவான் இன்னொரு பலவானை ரசித்தால், அன்பு பெருகும்; விபரீதங்கள் குறையும். பலவீனன் பலவானை ரசித்தால், பலவீனன் பலவானுக்கு அடிமைப்பட்டுப் போவதைத்தவிர, வேறு எதுவும் நேராது. சக்தி பெற்ற தமிழர்கள், அன்னிய நாட்டு பலசாலிகளையும் புத்திசாலிகளையும் புகழ்ந்தால், அதனால் எவ்வித ஆபத்தும் உண்டாகாது. சக்தியில்லாத தமிழன் சாப்ளினை ரசித்தால், அவன் கிருஷ்ணனை மட்டமாக எண்ணத்தான் எண்ணுவான்.

காக்கை முதலில் தன் குஞ்சைப் பாராட்ட வேண்டும். தன் குஞ்சு வளர்ந்த பின், குயிலின் குஞ்சுகளை வளர்த்தால், அதனால் பாதகம் நேராது. குயிலின் குஞ்சுகளை பாராட்டி வளர்க்கும் காக்கை, தன் குஞ்சுகளை வளர்க்காது. தன்னுடைய குடும்பத்தாரை இகழ்ந்து பேசி, பக்கத்து குடும்பத்தாருக்கு பணிவிடை செய்யும் மனிதன் சுத்தப் பதர். அவன் பிரபு ஆக

www.padippakam.com



எண்ணங் கொள்ளாத மூடன். அவன் பிறரிடமிருந்து பிச்சை வாங்கிப் பிழைக்கும் அதமன்.

சரக்கில்லாத கிருஷ்ணனை, தமிழன் என்று கொண்டாடிப் பாராட்ட வேண்டும் என்று கக்ஷி சொல்லுகிறீர்களோ என்று புத்திசாலிகளைப் போல சிலர் கேட்க வாயெடுக்கலாம். 'ஸ்டாலினைப் பார்; ரூஸ்வெல்டைப் பார்; அவனைப் பார்; இவனைப் பார்;. அன்னக் காவடியாக இருக்கும் என்னையும் பார்' என்று சொல்லுவதைப் போல, எவன் சொன்னாலும், அவனிடம் உலகத்தாருக்கு அன்பும் மரியாதையும் ஏற்படாது. அவனை ஸ்டாலினும் மதிக்க மாட்டார்; ரூஸ்வெல்டும் மதிக்க மாட்டார்.

தமிழ்நாடு தங்கள் நாடு என்று பெருமையோடு பேசிக்கொள்ள முடியாதவர்களிடம் சுயமரியாதை கொண்ட தமிழர்களுக்கு உறவு இருக்க முடியாது. சுயமரியாதைக்காக, உண்மையை மறந்தும் மறைத்தும் பேசலாமா என்பது போலி வாதம். தனக்கு தெரியாது என்று தன் குடும்ப நிர்வாகத்தை அந்நியனிடம் ஒப்படைக்க எண்ணம் கொள்ளும் மனிதனோடு வார்த்தையாடுவதில் பயனில்லை.

பாமரர்களை லக்ஷியம் செய்யாதவர்கள்தான் கிருஷ்ணனை ரசிக்க மாட்டார்கள். நமது நாட்டினரின் வாழ்வு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் கிருஷ்ணனை ரசிக்க முடியாது. ஹாஸ்யம் நாகரிகமா யில்லையே என்று அவர்கள் கொட்டாவி விடுவார்கள். தரித்திரத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மனிதர்களை அசட்டை செய்வது எளிது. அவர்களுக்கு உபகாரம் செய்யும் உத்தமர்களை கேவலமாகப் பேசுவது, அதைக் காட்டிலும் எளிது.

கிருஷ்ணன் தமிழ் மக்களை சிரிக்க வைக்கும் மகான். தமிழர்கள் தங்கள் துயரத்தை, சில நிமிஷங்களேனும்

www.padippakam.com



மறக்கும்படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள், நாட்டின் பொது நன்மைக்குப் பாதகம் நினைப்பவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கிருஷ்ணன் தமது சொந்த வாழ்க்கையிலும் பரம ரசிகன் என்பது மதுரத்தை தோழியாகக் கொண்டதே, தெளிவாகக் காண்பிக்கிறது. கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாள் வாய்த்ததுபோல, கிருஷ்ணனுக்கு மதுரம் வாய்த்திருக்கிறார். இல்லை; தப்பிதம். சுந்தராம்பாளுக்கு கிட்டப்பா வாய்த்ததுபோல, மதுரத்துக்கு கிருஷ்ணன் வாய்த்திருக்கிறார். இது தமிழ் நாட்டின் பாக்கியமாகும்.

'நான் டைரக்டர்களின் கைகளில் மட்டும் அகப்பட்டுக்கொண்டிருந்தேனோ, அவர்கள் என்னை இரக்க மில்லாமல் பாதாளத்தில் அமுக்கி யிருப்பார்கள்' என்று கிருஷ்ணன் சொல்லுவாராம். புலவரான ஒட்டக்கூத்தன் கவியான புகழேந்தியைத் தலை தூக்காமல் அடிக்கப் பார்க்க வில்லையா? புலமை, மேதையைக் கண்டால், எப்பொழுதும் சீறிவிழத்தான் செய்யும். ஆனால் மேதாவியினிடம் புலவனுடைய ஜம்பம் பலிப்பதே இல்லை.

டைரக்டர்கள் சாஸ்திரம் அறிந்த வெறும் புலவர்கள்தானே? அவர்கள் எல்லோரும் மேதாவிகளா? எனவே, அவர்கள், மேதையை காணமுடியாமலும் கண்ட மேதையின்பேரில் பொறாமை கொண்டும் காரியங்கள் செய்வார்களாகில், அது ஒருவகையில் இயற்கையானதுதான்.

செடி முளைப்பதற்கு, கல்பாறை இடங்கொடுக்குமா? முளைக்க இடங்கொடுத்தால், கற்பாறை துண்டாகப்போகாதா? ஆனால், கல்பாறையின் முகம் பார்த்து, செடி முளைப்பதில்லை. செடி முளைக்கிறது; கல்பாறையும் பிளந்து, துண்டாகப் போய்விடுகிறது.

www.padippakam.com



கிருஷ்ணனுடைய மேதை எப்படியோ மேலே எழுந்து வந்துவிட்டது. டைரக்டர்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்கள் அவதூறு வாங்கிக்கொண்டதுதான் மிச்சம்.

தமக்கு திருப்தி ஏற்படுகிறவரையில், கிருஷ்ணன் தங்கள் பார்ட்டை ஒத்திகை செய்து கொண்டே யிருப்பாராம். திருப்தி இல்லாமல் போனால், ஒலிப்பதிவு செய்யவும் படம் பிடிக்கவும் அவர் இணங்கமாட்டாராம். கிருஷ்ணனோடு வேலை செய்வது சுலபமானது என்றும் சுவாரஸ்யமானது என்றும் ஒலிப்பதிவு செய்யும் எஞ்சினீயர் ஒருவர் என்னிடம் சொன்னார். தலைக்கனம் கொண்டவர்கள்தான் ஒத்திகையை அலட்சியம் செய்வார்கள்.

செய்வன திருந்தச் செய் என்ற கொள்கையை கொண்டிருக்கும் கிருஷ்ணனை நான் வாழ்த்துகிறேன். நீங்களும் அந்தமாதிரி செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். பொறுப்பை உணர்ந்து புத்திசாலித்தனத்துடன் காரியம் செய்பவர்கள் தமிழ்நாட்டில் அநேகர் இல்லை. அந்தச் சிறு கூட்டத்தில், கிருஷ்ணன் ஒருவர். அனாயசமாக, நம்மவர்களை நகைக்கச் செய்யும் சிறந்த மேதாவியாகிய கிருஷ்ணனை தமிழ்நாடு ஒருநாளும் மறக்காது.

தமிழர்கள், நன்றி சொல்லும் தன்மையைக் கனவிலும் அறியாதவர்கள். கிருஷ்ணனுக்கு இதைக் காட்டிலும் உயர்ந்த வெகுமதியும் வேண்டுமா? கிருஷ்ணன் நாகர்கோயில் கிருஷ்ணன் அல்ல. அவர் தமிழ்நாட்டுக்கு முழுத் தமிழ் கிருஷ்ணன்.

படிப்பகம்

www.padippakam.com

# 12. வெ. ராமலிங்கம் பிள்ளை

கவிகள், கவிகளாகப் பிறக்கிறார்கள்; அவர்கள், கவிகளாக ஆவதில்லை. பயிற்சியால், பண்படுவது என்பதுதான், காரண காரிய விதிக்கு பொருந்தினதாகும். பிறவியினாலேயே, பண்படுவது என்பது, இயற்கைக்கு விரோதமானது என்று பார்வைக்குத் தோன்றலாம். என்றாலும், அவ்வாறு சிற்சில சந்தர்ப்பங்களில் நேருகின்றது.

ஒருவன் புலவனாக ஆக முடியும்; நிபுணனாக ஆக முடியும். ஆனால், அவன் மேதாவியாக ஆக முடியாது. புலமைக்கு பயிற்சி வேண்டும் பள்ளி வேண்டும். ஆனால், மேதையோ, பள்ளியை மிதிக்காத, பள்ளியை மதிக்காத சண்டி. மேதைக்கு, சட்ட வரம்பு கோலி, அதைக் கட்டுப்படுத்தப் பார்ப்பது மட்டித்தனமாகும்.

புலமைக்கு, மேதையைக் கண்டால், கண் கூசும். மேதைக்கோ, புலமையைக் கண்டால், பெரு நகைப்பு. மேதையில், கர்வம் என்பதே காண முடியாது; புலமையினிடம் அடக்கத்தைக் காணுவது, கார்த்திகைப் பிறையைக் காணப் பார்ப்பது மாதிரிதான். விபரீதம் என்ன வெனில், உலகம் புலமையைக் கண்டு மயங்குகிறது, பயப்படுகின்றது. மேதையை, சரியாக, உலகம் காணுவதுமில்லை. கண்டாலும், அதை விருப்புடன் வரவேற்று, மரியாதை செய்வதுமில்லை.

ஒட்டக் கூத்தன் என்ற புலவன் ராஜாங்க வித்வானாக இருந்ததும், மேதாவியான கம்பன் ராஜாவின் மதிப்பைப் பெற முடியாமல், நாட்டை விட்டு அகன்றதும் சரித்திரம். சிறிய மனிதனுக்கு அதிகாரமும் பெரிய மனிதனுக்கு சிறைவாசமும் கிடைப்பது ஒரு வகையில் இயற்கைதான். இவைகள், மனிதன் சுதந்திர தேவிக்கு செலுத்தும் விபரீத காணிக்கைகள்.

www.padippakam.com



என்றாலும், புலமை, தன் ஆயுளோடு மடிந்து போகிறது; மேதையோ, சிரஞ்சீவித்துவம் படைத்து வாழ்கின்றது. இதை, நாம் பாரதியாரின் வாழ்க்கையில் பார்க்கவில்லையா? பாரதியாரின் காலத்தில் பத்தாயிரக் கணக்கில் சம்பாதித்தவர்களின் பெயரை, யார் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? பாரதியார் வாழ்ந்த காலத்தில் இருந்த பெரும் புலவர்களை, இப்பொழுது யாரும் நினைத்துக் கொண்டிருக்கவில்லை.

தமிழ் நாட்டில், கலைப்புரட்சியையும் கருத்துப் புரட்சியையும் உண்டாக்கியவர் மகா கவி பாரதியார். பாரதி யுகத்தில் தோன்றிய மூன்று சிறந்த கவிகள் தமிழ் நாட்டில் இப்பொழுது உயிரோடு இருக்கிறார்கள்.

பாரதி தாசன், தேசிக விநாயகம் பிள்ளை, ராமலிங்கம் பிள்ளைதான் அம் மூவர்கள். பாரதியாரின் கவிதை ஆவேசத்தில், மூன்று அம்சங்கள் இருந்தன. ஒன்று, சமூகத்திருத்தம்; மற்றொன்று இயற்கைப் பொலிவின் வர்ணனையும் கிண்டலும்; இன்னொன்று அடிமைத்தளையை அறுத்து எறிதல். கடைசி அம்சமாகிய இதை, ராமலிங்கம் பிள்ளை, வாரீஸ் முறையில் அடைந்து, பாட்டிலே பொங்கி வழியச் செய்து வருகிறார்.

நீண்ட காலம் சேர்ந்து வாழாவிட்டாலும், ராமலிங்கம் பிள்ளையும் நானும் நெருக்கமான தொடர்பு கொண்டவர்கள். காந்தியைப் பற்றி எழுதும் பொழுதுகூட, எனக்குக் கூச்சமும் அச்சமும் ஏற்பட்டதில்லை. ராமலிங்கம் பிள்ளை கவி; நான் கவி அல்ல. இருந்தாலும், மன நெருக்கத்தின் காரணமாக, அவரைப்பற்றி எழுதத் துவக்குகையில், எனக்குக் கூச்சம் உண்டாகின்றது.

பிள்ளை அவர்கள் பிறவிக் கவி; அவர் பிறவிக் கனவான். எனவே, அவர் பிறவியிலிருந்தே, சுதந்திரப் பிரியன். தகப்பனார்,

www.padippakam.com



போலீஸ் உத்தியோகத்தில் இருந்ததனால், புதல்வன் ராமலிங்கம் ராஜ பக்தனாக ஆகிவிடமுடியுமா? சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த தகப்பனுக்கு, சிறந்த சித்திரக்காரரும் உயர்ந்த கலைஞனுமான குமாரன் தோன்றினது முரண் அல்லவா? கணக்குப் பார்த்துக் குடும்பம் நடத்திய தகப்பனாருக்கு, கட்டுக் கடங்காத கவிதைத் திறனோடு மகன் பிறந்தது ஆச்சரியம் அல்லவா?

என்றாலும், மேதை ஜனிப்பது, கள்ளி வயிற்றில் அகில் பிறப்பதுபோலத்தான். கள்ளிக்கும் அகிலுக்கும் எந்த வகையில் சம்பந்தம் இருக்கிறது? அரிதாரம் மான் வயிற்றில் பிறக்கிறது என்கிறார்கள். மானுக்கும் அரிதாரத்துக்கும் தன்மையில் என்ன ஒற்றுமை இருக்கிறது? அடிமைக்கு, ஆண் மகனான சுதந்திரப் பிரியன் பிறப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும். ராமலிங்கம் பிள்ளையின் ஜனனம் அற்புதங்களில் ஒன்று.

ராமலிங்கம் நாமக்கல்லில் பிறந்தவர். கண்டிப்பும் நிர்த்தாக்ஷண்யமும் உருவெடுத்ததுபோல இருந்தவர் இவருடைய தகப்பனார். ராமலிங்கமோ, இளகிய உள்ளம் படைத்தவர். இங்கிதம்தான் ராமலிங்கமோ என்று சொல்லும்படியான அவ்வளவு அருமையான நடையுள்ளவர். சாதுத்தனமான உல்லாசமும், சாகஸம் நிறைந்த ஹாஸ்யமும், கனிவு கொண்ட தேன் மொழியும், ராமலிங்கத்தின் சம்பாஷணையில் நிறைந்து கிடைக்கும்.

பிள்ளை அவர்களின் பேச்சில், கசப்பைக் காண முடியாது; இனிமையைத்தான் காணமுடியும். கனிவைத் தான் பார்க்கலாம்; கடுமையைப் பார்க்க முடியாது. அறிவைக் காணலாம்; அகம்பாவத்தை, மருந்துக்குக் கூட பார்க்க முடியாது. ஆசை இல்லாதவர்; அடக்கம் கொண்டவர்; அன்பு நிறைந்தவர்; அறவழியில் பெரிதும் நம்பிக்கை கொண்டவர்; அவல வாழ்வை அடியோடு வெறுத்தவர்.

www.padippakam.com



'ஓவியத்தில் எழுதவொண்ணா உருவத்தாய்' என்று வாலி, ராமனை அழைத்ததாகக் கம்பன் சித்திரிக்கிறார். வார்த்தைக்கும் வர்ணனைக்கும் கட்டுப்படாத உள்ளத் தூய்மை கொண்டவர் ராமலிங்கம் என்றுதான் என்னால் சொல்லமுடியும்.

உப்பு முதல் கற்பூரம் வரையில், ஊசி முதல் 'ராசா' வரையில், அடிமைத்தனம் முதல் அந்தராத்மா வரையில், புரோகிதம் முதல் பேடித்தனம் வரையில், பெண் முதல் பண் வரையில், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் எல்லா விஷயங்களையும்பற்றி, நான் ராமலிங்கத்தோடு பேசியிருக்கிறேன். எதைப்பற்றியும் அவர் சுருதி தவறாகப் பேசினதே இல்லை. சிறு இழை பிசகினாலும் அது சித்திரமாகாது அல்லவா? ராமலிங்கம் சிறந்த கலைஞன் ஆனதால், சுருதி தவறிப் பேச இணங்குவதே இல்லை.

ராமலிங்கம் பிள்ளையிடம் நான் வேறோர் அற்புதத்தையும் கண்டிருக்கிறேன். அவர் சொல் நயம் அறிந்த சூரர்; பொருள் நயம் காணும் புலவர். சாரத்தைக் கொண்டு, சக்கையைத் தள்ளிவிடும் மகா விவேகி. மிக சாதுவானவர்; ஆனால், சண்டைக்காரனிடத்தில் 'சண்டித்தனம்' செய்வதிலும் சமர்த்தர். காந்தியின் சத்தியாக்கிரகத்தைத்தான் நான் 'சண்டித்தனம்' என்கிறேன். சண்டித்தனம் செய்தால்தான் உலகத்திலிருந்து சண்டையை வெருட்ட முடியும்.

சத்தியாக்கிரகம் என்ற சண்டித்தனத்திலே ராமலிங்கத்துக்கு அளவுகடந்த நம்பிக்கை. மனித உயிரை நாசமாக்குவதில், பிள்ளை அவர்களுக்கு, துளிக்கூட நம்பிக்கை இல்லை. அதனாலேதான்,

"கத்தி இன்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது"

என்று ராமலிங்கம் பிள்ளையால் பாட முடிந்தது. ஜீவகாருண்யத்திலே

www.padippakam.com



நம்பிக்கை கொண்டவன்தான், சிறந்த தைரியசாலியாக இருக்க முடியும். உயிரைப் போக்குவதில், துணிவு என்ன இருக்கிறது? உயிரைக் காப்பதில், துணிவு இருக்கிறது. உயிரைமேம்பாடு அடையச் செய்வதுதான் உத்தமமான தொண்டு ஆகும்.

காந்தியின் தத்துவத்தை, மிகவும் தெளிவாக, கவிதையில் எடுத்துக் காண்பிக்கும் ஆற்றலும் ஆவலும் ராமலிங்கம் பிள்ளையின் பிரத்தியேகமான பொக்கிஷங்களாகும்.

தமிழர்களுக்கு மட்டுமல்ல, சித்திரங்களுக்கும் கண் திறந்துவிடும் அருமையான திறமை, ராமலிங்கம் பிள்ளையிடம் பரிபூர்ணமாக இருக்கிறது. சித்திரத்தில், கைகால்களை அழகாக வரைந்து விடலாம். எல்லா உறுப்புக்களையும் நேர்த்தியாக அமைத்துவிடலாம். ஆனால், கண் திறந்து விடும் வேலைதான், மிகவும் கஷ்டமான வேலையாகும்.

இந்த வேலையில், ராமலிங்கம் பிள்ளை நிகரில்லாத நிபுணர். இந்த சாமர்த்தியம் வெறும் பயிற்சியால் வரக்கூடியதல்ல. இது மேதையின் லீலைகளில் ஒன்று.

'கிழவர்கள்கூட, துள்ளி எழுவார்கள்; அப்படி ஊக்கம் தரக்கூடியது பாரதியாரின் பாட்டு' என்று பொருள் படும்படியாக, பிள்ளையவர்கள் ஒரிடத்தில் பாடியிருக்கிறார். அரைக் கணமும் அடிமையாக இருக்கலாகாது என்று சொல்லுவதில், பாரதியாருக்குச் சிறிதும் சளைத்தவரல்ல, ராமலிங்கம் பிள்ளை. பாரதியாரின் நாட்டுப் பற்று, பிள்ளையிடம் பரிபூரணமாக மலர்ச்சி பெற்றிருக்கிறது.

'நம் நாளிலேயே, நம்முடனேயே இருந்து, நம் உள்ளத்தின் துடிப்புக்களைப் பொருத்திப் பாடும் ராமலிங்கத்தின் பாடல்களை, வெறும் தேசீயப் பாட்டுகள் என்று சொல்லிவிடுவது எனக்குப் பிடிக்கவில்லை; எனக்கு அர்த்தமாவதுமில்லை.

www.padippakam.com



உள்ளத் துடிப்பை, தாளத்தோடு அமைத்து, சங்கீத சித்திரமாக புனைவதுதான் கவிதையின் நோக்கமாகும். ஒருவனை, ஒரு முட்டாள், காரணமில்லாமல் கட்டிவைத்து அடிக்கிறான். காரணமில்லை யென்று சொல்வது தவறு. அவனுடைய திமிர்தான் காரணம். இந்தத் திமிர்தான் அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் தாயகமாகும். இந்தத் திமிர், வெறும் அடிகளாக நம் கண்ணில் படுகிறது. கவியின் உள்ளத்திலோ, அது கானமாகப் பதிகின்றது.

இதைத்தான் கவியின் தெய்வீகமான சக்தி என்று சொல்லுவேன். உண்மைக் கவிதை தேசீயம் என்ற எல்லைக்குள் அடங்கிக் கிடக்க சற்றேனும் இசையாது. ராமலிங்கம் பிள்ளை, தேசபக்தியைப் பாடுகிறார். அதற்காக, அவருடையது தேசபக்திக் கவிதை என்று குறுக்கிச் சொல்ல யாரும் துணிய வேண்டாம். ஏனென்றால், அது அசட்டுத் துணிச்சலாகும்.

ராமலிங்கத்தின் உள்ளத்துடிப்பு முரட்டுத் துடிப்பல்ல; அது நாகரிகம் கலவாத வெறி அல்ல. அந்தத் துடிப்பில், அபசுரத்தைக் காணமுடியாது. வீணை வாசித்தால், அது அறைக்கு வெளியே இருப்பவர்களுக்குக் கேட்காது. சங்கீதம் என்றால் மூன்று மைலுக்கு கேட்க வேண்டுமோ? உரக்கக் கேட்பது 'லவுட் ஸ்பீகர்' அது சங்கீதமல்ல.

ராமலிங்கத்தின் கவிதை, வீணையிலிருந்து தோன்றும் சங்கீதத்தைப்போல. வீணையின் சங்கீதமே உயர்ந்தது என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். வீணையின் நாதத்தில் நயமும் நாசூக்கும் ரொம்பவும் அதிகம். அவைகள் அதிகமாயிருந்தாலும், அதைப் பாமர மக்களும் அனுபவிக்க முடியும். ராமலிங்கத்தின் கவிதையில், நயமும் நாசூக்கும் ரொம்ப ஜாஸ்தி. ஆனால், இந்த நயத்தையும் நாசூக்கையும் அவர் எவ்வாறு கொண்டு வருகிறார்?

www.padippakam.com



எல்லோரும் எளிதிலே அறிந்துகொள்ளும் சொற்களின் மூலமாக, எல்லோருக்கும் சுலபமாகத் தெரிந்திருக்கும் உபமானங்களின் மூலமாக, எல்லோருக்கும் பேச்சில் அர்த்தமாகக்கூடிய சித்திரத்தின் கருத்தின் மூலமாக. கம்பனுக்குப்பின், தாம் பாடியதால், தம்முடையதை வெள்ளைத் தமிழ் என்று வேடிக்கையாகக் கேலிசெய்துகொண்டார், ராமாயணம் பாடிய அருணாசலக் கவிராயர். அவருடைய பாடல்கள் எவ்வளவு அற்புதமான பாடல்கள்! ராமலிங்கம் பிள்ளையின் பாடல்களும் அற்புதமானவை.

பழசு என்று அலக்ஷியம் செய்பவர்களுக்கு, பிள்ளையவர்கள் புத்தி புகட்டும் நகைச்சுவை நிறைந்த வழியை, ராமலிங்கம் பிள்ளையால்தான், அவ்வளவு நாசூக்காகக் கையாள முடியும்! "சூரியன் பழசு, சந்திரன் பழசு, தாயார் பழசு. எனவே இவர்கள் நமக்கு வேண்டாமா?" என்று ராமலிங்கம் கேட்கும்பொழுது, அவரை அப்படியே ஆலிங்கனம் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது.

அழாத குழந்தைக்கு, பால் கிடைப்பது அருமை. ஆசையே இல்லாத ராமலிங்கத்தின் பெயர், தமிழ்நாட்டிலே எப்படிப் பரவும்? நாக்கில் பதட்டமும் உள்ளத்தில் பொறாமையும் நடையில் சதியும் பேச்சில் தற்பெருமையும் இல்லாத ராமலிங்கத்தை 'அப்பாவி' என்று சொல்லுபவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். "அவர் இயற்கைக் கனவான்; தமிழ் நாட்டின் தவப்புதல்வன்; வயிரம் அடித்த களம் போல வார்த்தைகளைச் சித்திரிக்கும் ஓவியன்; மக்களின் இயற்கை ஆவலாகிய சுதந்திரத்தை, இன்னிசையில் பாடியிருக்கும் கவிஞன். அவருடைய கவிதைகள் சாகா வரம் பெற்றவை" என்று அறிந்து கொண்டபேர்களுக்கு எனது வணக்கம்.

www.padippakam.com



நட்பை, ராமலிங்கம் பிள்ளை கொண்டாடி அனுபவிப்பதைப் போல, வேறு யாரும் அதை அவ்வளவு ஆவலோடும் ரசிகத் தன்மையோடும் அனுபவித்ததை, நான் பார்த்ததில்லை. நட்பு ஓம்பல் என்பது அவரது வாழ்க்கையின் சங்கற்பமோ என்னமோ?

நாமக்கல் ராமலிங்கம் (பிள்ளை என்பது போயே போய்விடும்) புரட்சிக்காலப் புன்னகைக் கவி என்று நாம் அவருக்கு முடிசூட்டுவோமாக! இப்படித்தான் அவரைப்பற்றி, பின் காலத்தில் பேசிக் கொள்ளுவார்கள். ஆகவே, நாம் முந்திக் கொள்ளுவோம்.

படிப்பகம்

www.padippakam.com

மருதம் பதிப்பகம்
38, கோமுட்டி தெரு,
ஒரத்தநாடு–614 625

படிப்பகம்